REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 செப்டெம்பர் 19 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வரு. 92 இல. 224 | Thursday 19, September, 2024 | 16பக்கங்கள் | 50/-




## அடுத்த தவணைக்கான பணத்தை வழங்குவதற்காக

# IMF பிரதிநிதிகள் இரண்டு வாரங்களில் இலங்கை வருவர்





- ஒப்பந்தத்தை மாற்ற அனுமதித்து எமக்கு கிடைக்கும் சலுகைகளை இழப்பதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்
- சஜித்தினாலும் அனுரவினாலும் இந்த நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது அதனை அவர்கள் இப்போது நிரூபித்துள்ளனர்
- ஒரு நாடாக முன்னோக்கி செல்வதா அல்லது 2022இல் காணப்பட்ட நிலைக்கு திரும்புவதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்
- களுத்துறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

முழுமையான செய்தி 06ஆம் பக்கம்

### வினாத்தாளில் சில வினாக்கள் வெளியான சம்பவம்

## புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யும் முடிவு இல்லை

**பரீட்சை திணைக்கள ஆணையாளர் அறிவிப்பு**



இவ்வருடம் நடத்தப்பட்ட தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்வதற்கு எவ்வித தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை என பரீட்சை திணைக்கள ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர நேற்று (18) தெரிவித்தார்.

பரீட்சை தொடர்பான வினாத்தாளில் சில வினாக்கள் முன்னதாக வெளியாகியுள்ளதாகக் கூறி, இதற்காக நியாயமான நடவடிக்கையை மேற்கொள்ளக்கோரி பரீட்சைகள் திணைக்களத்திற்கு முன்பாக நேற்று (18) காலை பெற்றோர்கள் மற்றும் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

06

## IGPக்கு எதிரான தடை உத்தரவு நீக்க கோரும் மனு நிராகரிப்பு

**விசாரணைக்கு எடுக்காமலேயே நீதிமன்று தீர்மானம்**



பொலிஸ் மாஅதிபர் பதவியின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை தேசபந்து தென்னக்கோன் நிறைவேற்றுவதை இடைநிறுத்தி பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நீக்குமாறு கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலேயே நிராகரிக்க உயர் நீதிமன்றம் நேற்று (18) தீர்மானித்தது.

சம்பந்தப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய சட்ட அடிப்படை இல்லை என முடிவு செய்ததையடுத்து, உயர் நீதிமன்றம்

06



## தேர்தலை நடத்தக் கோரி பங்களாதேஷில் ஆர்ப்பாட்டம்

10

## ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்கு வினோ MP ஆதரவு



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்கு ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்தார்.

கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதியின் அரசியல் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் அவர் இதனை அறிவித்தார்.

## தேர்தல் பிரசாரம் நேற்று நள்ளிரவுடன் நிறைவு

**விதிகளை மீறினால் சட்ட நடவடிக்கை**



ஜனாதிபதித் தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நேற்று (18) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைந்தது.

ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் கடந்த மாதம் 16 ஆம் திகதி ஆரம்பமானது. இதற்கமைய வாக்குப்பதிவு முடிந்து ஒரு வாரத்திற்கு வேட்பாளர்கள் மற்றும்

06

### இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறல்

## யாழ். மீனவர்கள் மூவர் இராமேஸ்வரத்தில் கைது




இராமேஸ்வரம் அருகே இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த மூன்று இலங்கை மீனவர்களை இந்திய கடலோர காவல்படையினர் செவ்வாய்க்கிழமை (17) கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்காள விரிகுடா கடல் பகுதியில் ரோந்துப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய கடலோர காவல் படையினர் கண்ணாடி இழை படகில் இருந்த மூவரையும்

06

## அமெரிக்க டொலரின் பெறுமதியில் உயர்வு

**விற்பனை விலை ரூ. 307.01 ஆக பதிவு**



இலங்கை மத்திய வங்கி நேற்றைய தினம் (18) நாணய மாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது. அதன்படி, அமெரிக்க டொலர் (US dollar) ஒன்றின் கொள்முதல் பெறுமதி 297.85 ஆகவும் விற்பனைப் பெறுமதி 307.01 ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் (pound) ஒன்றின் கொள்முதல் பெறுமதி 390.55 சதம் ஆகவும் விற்பனைப்

06

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: உண்மையை வெளிப்படுத்துவேன்



**விசேட நீதிமன்றத்தையும் அமைப்பேன் – சஜித்**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விடயத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளையும் விசாரணையாளர்களையும் இணைத்துக்கொண்டு உண்மையை வெளிப்படுத்துவோம். விசேட நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்தி விசாரணை நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வோம் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின்

06

## வாக்காளர் அட்டைகளை இணையவழியில் பெற வசதி

**தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகம்**

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் தங்களது வாக்களிப்பு நிலையங்களை அணுகும் வகையில் இணையவழி முறையை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கமைவாக, வாக்களிப்பதற்கான அட்டைகளை 'Online Registration' என்ற இணைய

06



## வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லையா

**அஞ்சல் நிலையங்களில் பெறுமாறு அறிவுறுத்தல்**

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள், இன்று முதல் அருகில் உள்ள அஞ்சல் நிலையங்களுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

06

இலங்கை அஞ்சல் SRI LANKA POST

## நிறைவேற்ற முடியாத வாக்குறுதி எதுவுமே என்னிடம் இல்லை

**ஜனாதிபதி வேட்பாளர் நாமல்**



நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் (17) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்

06

## IT மூலம் 05 பில். டொலர் ஈட்டும் திட்டம் என்னிடம்

**வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு**



தகவல் தொழிநுட்பத்தின் ஊடாக பொருளாதாரத்திற்கு ஐந்து பில்லியன் டொலர்களை ஈட்டும் இலக்கு தம்மிடம் இருப்பதாக தேசிய மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐந்து லட்சம் மென்பொருள் பொறியியலாளர்களை

06

### நுண்நிதி நிறுவனங்கள் பலவற்றில்

## பெண்கள் பெற்ற கடன்களின் வட்டிக்கு முற்றுப்புள்ளி

**சர்வஜன ஜனாதிபதி வேட்பாளர் திலித்**



நுண்நிதி நிறுவனங்களில் பெண்கள் பெற்றுக்கொண்டுள்ள கடனுக்கான வட்டியை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சர்வஜன ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

06

## மலையக மக்களுக்கு சஜித் பொய் வாக்குறுதியளிப்பு

**வேலுகுமார் எம்.பி சாடுகிறார்**



மலையக பெருந்தோட்ட மக்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி வருகின்றனர். தோட்ட பிரதேசங்களில் வறுமை நிலை உயர்வடைந்துக்கொண்டே செல்கின்றது. இவ்வாறான சூழலில், மக்கள் எதிர்நோக்கும் நாளாந்த பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு முன்வைக்க வேண்டியுள்ளது.

06

# ஒவ்வொரு மாணவரும் ஆங்கில மொழியில் புலமை பெறுவதற்கு தேவையான பின்னணி உருவாக்கப்படும்

அடுத்த 10 வருடங்களில் ஒவ்வொரு பிள்ளையும் ஆங்கிலமொழிப் புலமையைப் பெறுவதற்குத் தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக 'English for all' என்ற வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கல்வி அமைச்சராக தாம், வெள்ளை அறிக்கை மூலம் இந்த பிரேரணையை கொண்டு வந்த போது அதற்கு எதிராக ஜே.வி.பி வீதியில் இறங்கியதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அந்த வேலைத்திட்டம் அன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இன்று நாட்டில் ஆங்கிலமொழி தொடர்பான பிரச்சினை ஏற்பட்டிருக்காது எனவும் சுட்டிக்காட்டினார்.

நேற்றுமுன்தினம் (17) மல்வானை மக்களுடனான சந்திப்பின் போது "ஆங்கிலமொழி அறிவு இன்மையால் இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்தின் தீர்வு என்ன?" என இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி ரணில் விக்

## Gen Z தலைமுறைக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே நோக்கம்



கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். Gen Z தலைமுறையினருக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே தமது நோக்கம் எனத் தெரிவித்த ஜனாதிபதி, வேலைத்திட்டங்களற்ற பொய்யான வாக்குறுதிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சஜித் மற்றும் அநுரவின் அரசியல் நலன்களுக்கு இளைஞர்கள் பலியாக வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

மக்கள் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"நான் பிரதிநிதித்துவப்படுத்திய பியகம தொகுதிக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களில் மல்வானை மக்களை சந்திப்பதை நான் வழமையாகக் கொண்டிருந்தேன். மல்வானை மக்கள் எப்போதும் எனக்கு பாரியளவு ஆதரவை வழங்கியுள்ளனர்.

2022 இல் பாரிய நெருக்கடியை சந்தித்தோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது, மல்வானை வர்த்தக மக்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். பொருட்களை இறக்குமதி செய்ய அந்நியச் செலாவணி இருக்கவில்லை. தற்போது அந்த நிலையிலிருந்து விடுபட்டுள்ளோம். தற்போது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகிறது.

நான் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி எமக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது. பணத்தை அச்சிடவோ அல்லது கடன் பெறவோ முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. ஆனால் சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு, ரூபா வலுவடைந்து, பொருட்களின் விலைகள் குறைந்து, நாடு நிலைபெறத் தொடங்கியது. இவை அனைத்தையும் மேற்கொள்ளும் அதே நேரம், குறைந்த வருமானம் பெறுவோருக்கு சமுர்த்தியை விட மும்மடங்கு அதிகமாக பயன்களை அளிக்கும் 'அஸ்வெசும' திட்டத்தை செயல்படுத்தவும், அரச துறை ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்காக தற்போது உதய ஆர். செனவிரத்ன குழுவின் அறிக்கையை அமுல்படுத்தவும் எம்மால் முடிந்தது.

ஒருபுறம், பொருட்களின் விலையை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவும், வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் நிவாரணம் வழங்கவும் முடிந்துள்ளது. ஆனால் அதில் இன்னும் இடைவெளி இருக்கிறது. எனவே, இதை முறையாகக் கையாள்வதன் மூலம் அடுத்த ஆண்டு வாழ்க்கைச் சுமையை வெகுவாகக் குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய இருவரும் வரிகளை குறைப்பதாக கூறுகின்றனர். அவ்வாறு செய்தால், சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து நாம் பெற வேண்டிய உதவிகளை இழக்க நேரிடும். டொலரின் பெறுமதி உயர்ந்து மீண்டும் அனைத்தும் வீழ்ச்சியுறும். அடுத்த 05 ஆண்டுகளில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்க வேண்டும். ஏற்றுமதி பொருளாதாரத்தை நிறுவுவதன் மூலம் நமது வர்த்தகத்தை மேம்படுத்த வேண்டும்.

இங்கிருந்த ஒரு தென்னந்தோப்பை வர்த்தக வலயமாக மாற்றி புதிய பொருளாதாரத்தை அன்று உருவாக்கினோம். அதன் காரணமாக பியகம நகரமும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளும் அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளைப் பெற்றன. பியகமவில் அன்று நான் செய்த முன்னேற்றத்தை முழு நாட்டுக்கும் செய்ய விரும்புகிறேன். அதற்காக பிங்கிரிய, திருகோணமலை, யாழ்ப்பாணம், ஹம்பாந்தோட்டை போன்ற இடங்களில் பாரிய முதலீட்டு வலயங்களை உருவாக்க எதிர்பார்க்கிறோம்.

மல்வானை பிரதேசத்தையும் நான் மறக்கவில்லை. கேரகல பிரதேசத்திலும் புதிய முதலீட்டு வலயமொன்றை உருவாக்க எதிர்பார்க்கிறேன். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் திருகோணமலைக்கு கொண்டு செல்லப்படுவதன் மூலம், அந்தப் பகுதியில் தொழில்நுட்ப வலயத்துடன் கூடிய புதிய நகரத்தை உருவாக்க முடியும். நீங்கள் அங்கு வர்த்தகத்தில் ஈடுபடலாம். மேலும், சியாம்பலாப்பே சந்தியில் உத்தேச புதிய வைத்தியசாலையையும் நாம் நிர்மாணிக்க வேண்டும்.



இவற்றை முன்னெடுப்பதற்காக காஸ் சிலிண்டர் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க வந்தால் என்ன நடக்கும் என்பதை நான் புதிதாகக் கூற வேண்டியதில்லை. அதனால் நாம் அந்த நிலைக்கு செல்ல வேண்டுமா? நாம் இயல்பு நிலைக்கு திரும்ப வேண்டும். அவர்களுக்கு வாக்களித்து நாட்டை மீண்டும் இழக்காதீர்கள். அவர்கள் ஒருமுறை பேரகஸ் சந்தியில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். மேலும் சிலர் ஐக்கிய மக்கள் சக்திக்குச் செல்கிறார்கள். ஐக்கிய மக்கள் சக்தி என்பது, ஐக்கிய தேசியக் கட்சியல்ல. ஜனாதிபதி பிரேமதாசவும்

## நான் ஜனாதிபதியாக இருக்கும் வரையில் முஸ்லிம் பெண்களுக்கு ஆடை தொடர்பான பிரச்சினைகள் வராது!

நானும் இணைந்து செயற்பட்டே 'பிரதீபகம' மாதிரிக் கிராமத்தை உருவாக்கினோம்.

அப்போது சஜித் இருக்கவும் இல்லை. எனவே சஜித்துக்கும் நாமலுக்கும் அளிக்கப்படும் வாக்குகள் தட்டில் வைத்து அநுரவுக்கு வழங்கப்படும் வாக்குகள் என்பதைக் கூற வேண்டும். எனவே, செப்டெம்பர் 21 ஆம் திகதி, காஸ் சிலிண்டருக்கு முன்னால் உங்கள் வாக்குகளை அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இங்கு கூடியிருந்த இளைஞர்கள், ஜனாதிபதியிடம் கேட்ட கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வழங்கிய பதில்களும் பின்வருமாறு:

**நான் முதல் முறையாக உங்களுக்கு வாக்களிக்கக் காத்திருக்கும் யுவதி. என்னைபோல பெருமளவானோர் இருக்கின்றனர். அவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

பதில்: இன்னும் 25 வருடங்களில் 50 வயதை கடந்திருப்பீர்கள். உங்களுக்கு சிறந்த எதிர்காலத்தை கட்டமைக்க வேண்டியது அவசியம். ரூபாய் வலுவடைவதோடு, இளையோர் தத்தமது எதிர்காலத்தை தீர்மானின்ன வேண்டும். Gen Z தலை முறையினருக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

**கேள்வி: நாட்டில் பலருக்கு அரசியல் புரிவதில்லை என்பதால் பெரும்பாலானோர் நாட்டுக்கு எவ்வாறான தலைவரை தெரிவு செய்வது என்ற கேள்விக்குறியுடன் உள்ளனர். மக்கள் மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கான உங்களுடைய திட்டம் குறித்து குறிப்பிட முடியுமா?**

பதில்: எவரும் இல்லாத வேளையில் ஜனாதிபதி பதவியை நான் ஏற்றுக்கொண்டேன். பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டுச் செல்வதற்காகவே நான் ஏற்றுக் கொண்டேன். தற்போது படிப்படியாக வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வருகிறோம். எமது செயற்பாடுகளை விரைவாக முகாமைத்துவம் செய்துகொள்ள முடிந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலுடன் எமக்கு கடன் வழங்கிய 18 நாடுகளும் கடன் சலுகைகளை வழங்கவுள்ளன. அதனால் நாம் இப்போது ஏற்றுமதி பொருளாதாரத்தை இலக்கு வைத்து நகர வேண்டியுள்ளது. அதன்படி பியகமவில் செய்த முன்னேற்றத்தை முழு நாட்டிலும் செய்ய எதிர்பார்க்கிறேன். அதன் ஊடாக ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாறலாம்.

**சில மாதங்களுக்கு முன்பு ஹிஜாப், நிகாப் மற்றும் ஹபாயா அணியும் முஸ்லிம் பெண்கள் பொது இடங்களிலும் அலுவலகங்களிலும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தனர். தற்போது சமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறான பிரச்சினைகளுக்கு மீண்டும் முகம்கொடுக்க வேண்டியிருக்குமா? எதிர்காலத்தில் எமது கலாசார மற்றும் மதம் சார்ந்த ஆடைகளுக்கு மதிப்பளிக்கப்படுமா?**

பதில்: நான் ஜனாதிபதியாக இருக்கும் வரையில் உங்களுக்கு அவ்வாறான பிரச்சினைகள் வராது. உங்கள் சம்பிரதாய ஆடை என்பது உங்களின் தெரிவாகும். அதனை வேண்டாம் என்று ஒதுக்குவதும் உங்கள் தீர்மானம். நீங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் எனக்கு புரிகிறது. முஸ்லிம் பெண்களை சோதனையிடக் கூடாது என்றும் அவர்களின் ஆடையை மாற்றுமாறு கட்டாயப்படுத்துவது

## இளைஞர் சமூகத்தின் மத்தியில் ஜனாதிபதி அறிவிப்பு

பொருத்தமற்றது என்றும் கூறியமைக்காக ஆணைக்குழுவொன்றில் என் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எதிர்ப்புக்களை பொருட்படுத்



தாமல் உங்கள் அன்பானவர்களின் ஜனாஸாக்களை தகனம் செய்யப்பட்டதால் ஏற்பட்ட மனவருத்தத்தையும் நான் அறிவேன். இப்போது அதற்கான சட்டத்தையும் நிறைவேற்றவிருப்பதோடு, அது ஒவ்வொருவரினதும் தனியுரிமையாக மதிக்கப்படும்.

**கேள்வி: அடுத்த 10 வருடங்களில் எவ்வாறான சமூக மாற்றத்தை எதிர்பார்க்கிறீர்கள்?**

பதில்: சமூகம் துரித மாற்றத்தை நோக்கி செல்கிறது. அதற்கு செயற்கை நுண்ணறிவும் தாக்கம் செலுத்துகிறது. உங்களுக்கும் எனக்கும் இருக்கும் வேறுபாட்டை பார்க்கும் போது, நான் தொலைபேசியே இல்லாத காலத்தில் வளர்ந்தவன். அதனால் ஒவ்வொருவருடனும் தொடர்புகளை பேண வேண்டும். தற்போது நீங்கள் இருக்கும் Gen Z தலை முறையினர் தொலைபேசிக்குள்ளேயே வாழ்கிறார்கள். அனைத்து விடயங்களும் அதை சார்ந்துள்ளன.

அதனை மேலும் மேம்படுத்த முடியும். அதற்காக செயற்கை நுண்ணறிவும் அதிகளவில் புகுத்தப்படும். புதிய தொழில்நுட்பங்கள் பலவும் வரலாம். அது நல்லதா கெட்டதா என்பதையும் நாம் தீர்மானிக்க முடியும். இருப்பினும் நாடு பின்னோக்கிச் செல்வதை ஏற்க முடியாது. அதுகுறித்து உங்களின் ஊடாக மக்களை தெரியப்படுத் துவதே எனது நோக்கமாகும். அதனால் இன்னும் 20 வருடங்களில் அறிவுசார்ந்த பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய சவால்களுக்கு ஈடுகொடுக்க கூடியதாக அமையும். சவால்கள் எவ்வாறானது என்பதை நாம் அறிந்துகொள்வது கடினமாக இருக்கும்.

**இலங்கையின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஆங்கிலம் குறித்து அதிகமாக கவனம் செலுத்தப்படுவது ஏன்? அதேபோல் ஆங்கில மொழி பிரதான தொடர்பாடல் மொழியாக காணப்படும் பாடசாலைகளிலிருந்து பல்கலைக்கழகங்கள் மற்றும் பொதுச் சேவை வழங்கும் இடங்களுக்குச் செல்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்க அரசாங்கம் எவ்வாறான திட்டத்தை கொண்டுள்ளது?**

பதில்: இலங்கைக்கான 'English for all' என்னும் எனது வேலைத்திட்டத்தின் ஊடாக ஆசிரியர்கள் உள்ளடங்களாக அனைவருக்கும் ஆங்கிலம் கற்பிக்கும் நிலைக்குச் செல்ல வேண்டும். இந்த திட்டத்தை 1982 கல்வி வெள்ளை அறிக்கையில் பரிந்துரை செய்தேன். அதற்கு எதிராக அன்று ஜே.வி.பி வீதியில் இறங்கியது.

அதனால் இன்று நாம் முன்னோக்கிச் செல்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்கிறோம். அன்று அதனை முன்னெடுத்திருந்தால் இன்று பிரச்சினை ஏற்பட்டிருக்காது. ஜே.வி.பி எதிர்த்ததன் காரணத்தை அவர்களிடம் தான் கேட்க வேண்டும். இப்போது இந்த திட்டத்தை முன்னோக்கி கொண்டுச் செல்லும் எதிர்பார்ப்புடன் இருக்கிறேன். முதல் இரு வருடங்களில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பது குறித்து கவனம் செலுத்தியிருக்கிறோம். பின்னர் மற்றையவர்களுக்கு பயிற்சியளிப்போம்.

தனியார் துறைகளில் ஆங்கில கல்வி கற்கவும் நாம் வசதிகளை ஏற்படுத்துவோம். அதனால் அடுத்த பத்து வருடங்களில் ஆங்கில கல்வியை மேம்படுத்த முடியும்.



# மலையக மக்களும் சமஉரிமை பெற்றவர்களாக வாழ முடியும்!

## வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க

மலையக பெருந்தோட்ட மக்களின் வாழ்வாதாரத்தை நிச்சயம் மேம்படுத்துவோம். அவர்களுக்குரிய காணி உரிமை நிச்சயம் வழங்கப்படும். மலையக மக்களும் இந்நாட்டில் சமஉரிமை பெற்றவர்களாக வாழ முடியும் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் மலையக மக்களும் பங்குதாரர்களாவார்கள் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் சக்தி சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், அநுர குமார திசாநாயக்கவை ஆதரித்து நுவரெலியா தலவாக்கலையில் கடந்த 15 ஆம் திகதி பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட தலைவர் மஞ்சுள சுரவீர, தேசிய குழு உறுப்பினர் கே. செல்வி உட்பட பலரும் பங்கேற்றனர்.

இதில் உரையாற்றும் போதே அநுர குமார திசாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

“மலையகத்திலிருந்து பலர் பாராளுமன்றம் சென்றுள்ளனர், அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளனர். நுவரெலியா மாவட்டத்தில் மக்கள்படும் துன்பம் மாறவில்லை. எனவே, இதே வலிகளுடன் அவர்களுடன் பயணிப்பதா இல்லையேல் மாற்றம் வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். புதிய அரசியலே வேண்டும் என மக்கள் சொல்கின்றனர். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் செப்டம்பர் 21 ஆம் திகதி நுவரெலியா மாவட்ட மக்களும் பங்கேற்கவுள்ளனர்.

மக்களுக்கு போலி உறுதிமொழிகளை வழங்கி வாக்கு வேட்டை நடத்தும் அரசியலே முன்னெடுக்கப்பட்டு வந்தது. தேர்தல் காலத்தில் உணவு, மதுபானம் உள்ளிட்டவை வழங்கப்பட்டு வாக்குகள் பெறப்பட்டன. தோட்டப்பகுதிகளில் மக்களை அச்சுறுத்தில் வாக்குகளைப் பெற்றனர். இவ்வாறான நிலைமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் அல்லவா? செப்டம்பர் 21 ஆம் திகதி அதனை செய்வோம்.

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் தேசிய மக்கள் சக்தி பின்னால் அணிதிரண்டுள்ளனர். மலையக மக்களும் எம்மை வெற்றிபெறவைப்பதற்கு ஒன்றிணைய வேண்டும்.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகிவிட்டன. எனவே, அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என தற்போது பேசி பயன் இல்லை. இந்நாட்டு பொருளாதாரத்துக்கு அவர்களே பங்களிப்பு வழங்குகின்றனர். அவர்கள் இலங்கைப் பிரஜைகள். இந்தியத் தமிழர்கள் அல்லர், இலங்கைத் தமிழர்கள் என்பதே சரி.

பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை இல்லை, வீட்டு உரிமை இல்லை. இப்பிரச்சினையை தீர்க்கக் கூடாதா? எமது ஆட்சியில் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். காணி உரிமை வழங்கப்படும். பெருந்தோட்ட பகுதியில் கல்வி மூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம். எனவே, பெருந்தோட்டப் பகுதியில் கல்வி கட்டமைப்பு மேம்படுத்தப்படும். மலையக சமூகத்தில் கல்விச் சுமையை நாம் குறைப்போம்.

உங்கள் மொழியில் பொலிஸில் முறையிடக்கூடிய உரிமை இருக்க வேண்டும். அரச திணைக்களங்களில் தமிழ் மொழியில் சேவைகளை பெறக்கூடிய நிலை இருக்க வேண்டும்.

எமது ஆட்சியில் அந்த நிலைமை நிச்சயம் இருக்கும். இந்நிலைமை ஏற்படும் வரை, மொழிபெயர்ப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்” எனவும் அவர் தெரிவித்தார்.



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 செப்டெம்பர் 19 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புராட்டதி 03
ராகுகாலம் : பகல் : 1.33 - 3.03வரை
சுபநேரம் : காலை : 7.33 - 9.03வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# பாடசாலை மாணவர்களுக்கு சீன நாட்டு உதவியில் சீருடை

## 2025இல் புதிய தவணை ஆரம்பிக்க முன் வழங்கப்படும்

சீன நாட்டின் நன்கொடையாக மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள சீருடைகள், 2025ஆம் ஆண்டு புதிய பாடசாலை தவணை ஆரம்பிப்பதற்கு முன்னர் வழங்கப்படவுள்ளன.

சீன தூதுவர் மற்றும் சீன அரசாங்கத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நடத்திய கலந்துரையாடலில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

43 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளும் 825 பிரிவேனாக்களுக்குமான அங்கிகளும் பொதி செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய இதன் முதலாவது தொகுதி எதிர்வரும் நவம்பர் மாதம் 13ஆம் திகதியும் , இரண்டாவது தொகுதி நவம்பர் மாதம் 21ஆம் திகதியும் மூன்றாவது தொகுதி டிசம்பர் மாதம் 20ஆம் திகதியும் இலங்கைக்கு அனுப்பிவைக்க சீன அரசாங்கம் உறுதியளித்துள்ளது.



இந்த சீருடைகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதால் அரசாங்கத்திற்கு 7,000 மில்லியன் ரூபாவை சேமிக்கக்கூடியதாகவுள்ளது.

2025 ஆம் ஆண்டின் புதிய பாடசாலை தொடக்கமான ஜனவரி மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் சீருடைகளை விநியோகிக்க கல்வி அமைச்சு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகையை வழங்கிய சீன அரசாங்கத்திற்கும் சீன தூதுவருக்கும் நன்றி தெரிவிப்பதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

# ஆட்டோ — பவுசர் மோதி விபத்து; சிறுமி உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

யாழ்ப்பாணம் கண்டி ஏ 9, பிரதான வீதியின் மதவாச்சி மாரகஹ வங்குவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஏழு வயது சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

ரம்பாவ பகுதியிலிருந்து மதவாச்சி பகுதி நோக்கிச் சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்று எதிர் திசையில் வந்துகொண்டிருந்த பவுசர் வண்டியொன்றுடன் மோதியதில் நேற்று முன்தினம் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்தில் காயமடைந்த முச்சக்கர வண்டியின் சாரதியும் அவரது மனைவியும் மகளும் சிகிச்சைக்காக வேண்டி மதவாச்சி ரம்பாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும்

06

மலையக மக்கள் இலங்கை வந்து 200 வருடங்கள்;

# அமைச்சர் ஜீவன் தலைமையில் "மலையக சாசனம்" வெளியீடு



இலங்கை நாட்டில் பொருளாதார, சமூக மற்றும் கலாசார கட்டமைப்பில் பெருந்தோட்ட சமூகம் முக்கிய பங்கை தொடர்ந்து வகித்து வருகிறது.

இந்திய வம்சாவளி தமிழ் (மலையக தமிழர்) பெருந்தோட்ட சமூகம் இலங்கைக்கு வருகை தந்து 200ஆவது ஆண்டு நிறைவை கௌரவிக்கும் முகமாக "மலையக சாசனம்" வெளியீடு உத்தியோகபூர்வமாக செவ்வாய்க்கிழமை (17) மாலை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இ.தொ.கா பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமானின் தலைமையில் நுவரெலியா தனியார் ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது.

இதன் போது அமைச்சர் ஜீவன் தொண்டமான் வரவேற்புரை ஆற்றியதுடன், கொள்கை மாற்றுகள் மையத்தின் ஸ்தாபக நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து சிறப்பு உரையினை ஆற்றினார்.

இவ் சாசனத்தில் ஏனைய சமூகத்தினர் போல் பெருந்தோட்ட சமூகத்தினரின் வாழ்க்கை அமைய வேண்டும் பெருந்தோட்ட சமூகம் இனியாவது ஓரங்கட்டப்பட்ட குழுவாகக் காணப்படாமல் தேசிய அடையாளத்தின் ஒரு அங்கமாக திகழ வேண்டும் போன்ற சில முக்கிய கோரிக்கைகளை உள்ளடக்கிய வண்ணம் குறித்த சாசனம் இலங்கை அரசாங்கத்தின் வேலைத்திட்டம் மற்றும் மலையக பெருந்தோட்ட சமூகத்திற்கான அர்ப்பணிப்புக்கான அடிப்படை ஆவணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த சாசனம் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில், புத்தி ஜீவிகள், சட்டத்தரணிகள், பேராசிரியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், சிவில் அமைப்பினர், வர்த்தகர்கள், துறைசார் ஆர்வலர்கள், துறைசார் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள், அமைச்சின் அதிகாரிகள், என பலரும் கலந்துக்கொண்டிருந்தனர்

இந்நிழ்வில் குறித்த சாசனத்தில் உள்ளடக்கிய 14 முக்கிய அம்சக் குறிக்கோள்களை முன்வைத்து தேர்ச்சி பெற்றவர் மூலம் பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் வரலாறு மற்றும் எதிர்காலத்தில் தேவையான பெறுமதி மிக்க சேவைகளையும் டிஜிட்டல் திரையில் காண்பித்து தெளிவூட்டல் செய்து கலந்துரையாடப்பட்டது.

# நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றவர்கள் அநுர குழுவினர்

## அருண் சித்தார்த் வெளிப்படுத்திய தகவல்

நாட்டில் பலரைக் கொலைசெய்து நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றவர்கள் அநுரகுமார திசாநாயக்க குழுவினரே என தாயக மக்கள் கட்சியின் அருண் சித்தார்த் தெரிவித்தார்.



யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அநுரகுமாரவிற்கு மிகப்பெரிய மக்கள் அலை இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனால் அவருக்கு வாக்களிக்க முன்னர் இங்கு எத்தனை பேரை அவர்கள் கொன்று குவித்தார்கள் என்பதனை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்லூரி அதிபர்கள், படித்த இளைஞர்களின் பலரைக் கொன்று குவித்த அவர்களுக்கு வாக்களித்தால் நாடு எவ்வாறான நிலைக்குச் செல்லும் என்பதை நினைவில் கொள்ளவும்.

அது மாத்திரமன்றி நாட்டை இந்த நிலைக்கு கொண்டு சென்றவர்களில் சஜித் பிரேமதாச, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களும் உள்ளடங்குகின்றனர்.

எனவே வாக்களிக்கும் மக்கள் இது தொடர்பிலே சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

அநுரகுமார திசாநாயக்காவிற்குப் பின்னால் இரண்டு நாடுகள் இருந்து அவர்களை இயக்குகின்றது. அதன் ஊடாகவே அவர்கள் அதிகளவான நிதிகளை கொண்டு இந்த தேர்தலிலே பிரச்சாரம் செய்கிறார்கள்.

அவர்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் நாடு ஆறு மாதத்தின் பின் கோட்டாபய ராஜபக்சவுக்கு நடந்தது போலவே ஒரு மிகப்பெரும் கலவரம் ஏற்படும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்றார்.

# உலகளாவிய சமுத்திர உடன்படிக்கையை அங்கீகரிக்க கிரீன் பீஸ் நிறுவனம் கோரிக்கை

கடல்சார் வளங்களையும் உயிரியல் பன்முகத்தன்மையையும் பாதுகாப்பது தொடர்பான உலகளாவிய சமுத்திர உடன்படிக்கையை அங்கீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிரீன்பீஸ் நிறுவனத்தின் தெற்காசிய அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பான கோரிக்கை அடங்கிய கடிதத்தை இந்நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஜேஹான் கணகரத்ன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஏனைய அபேட்சகர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, கடல் இவ்வுலகின் வானிலையினை கட்டுப்படுத்தல், பில்லியன் கணக்கான மக்களுக்கு உணவையும், வாழ்வாதாரத்தையும் வழங்குதல் என்பவற்றுடன் சேர்த்து உலகளாவிய உயிரியல் பன்முகத்தன்மையின் எண்ணிலடங்காத உயிரினங்களுக்கு தங்குமிடமாகவும் காணப்படுகின்றது.

எனினும், கைத்தொழில் மயமாக்கப்பட்டிருக்கும் மீன் பிடித்தொழில், கடல் மாசுபாடு, கச்சா எண்ணெய் அகழ்வு மற்றும் மேலும் பல நடவடிக்கைகள் காரணமாக கடல்சார் சுற்றுச்சூழல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. பல்வேறு கட்டுப்பாடுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட செயல்திறனுடன் செயற்பட்டு வரும் ஒழுங்குமுறை நிறுவனங்கள் சிலவற்றின் ஊடாக உலகளாவிய கடல்சார் சூழல் நிர்வகிக்கப்படுகிறது. என்றாலும் இவ் உலகளாவிய பொதுச் சொத்தை செயல்திறன் மிக்க விதத்தில் எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றிய சரியான ஒருங்கிணைப்பு இல்லாமை, மட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வு, தெளிவான சட்டதிட்டங்கள் இல்லாமை எனும் விடயங்களாலும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளினாலும், கடல்சார் சூழல் மேலும் சிக்கலான வளத் துஷ்பிரயோகத்திற்கும், மாசுபடுத்தலுக்கும் ஆளாகியுள்ளது.

2023 மார்ச்சில், பெருங்கடலை பாதுகாப்பது தொடர்பான ஐக்கிய நாடுகளின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த

06



கொழும்பில் இடம்பெற்ற மாபெரும் மணப்பெண் அலங்கார மற்றும் கேக் கண்காட்சி நிகழ்ச்சியில் இந்தியாவிலிருந்து தென்னிந்திய நடிகை ஸ்ரீதேவி விஜயகுமார் மற்றும் விஜய் தொலைக்காட்சி புகழ் பாலா ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபன ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமருடன் இணைந்து அவர்கள் விருது வழங்கி வைத்த போது எடுக்கப்பட்ட படம்.

# டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரிப்பு

## சுகாதார பிரிவு எச்சரிக்கை

டெங்கு நோய் பரவல் மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார வைத்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். 10 பிரதேசங்களில் டெங்கு அதிக அபாய நிலையில் பரவி வருவதாக சுகாதார திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி முதல் கடந்த 16 ஆம் திகதி வரை 38,088 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



அதில் 24.8 சதவீத நோயாளிகள் அதாவது 9451 நோயாளிகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 4381 நோயாளிகளும் களுத்துறை மாவட்டத்தில் 2097 நோயாளிகளும் மேல் மாகாணத்தில் 15929 நோயாளிகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இது மொத்த நோயாளிகளின் எண்ணிக்கையில் 41.8 சதவீதமாகும்.

மத்திய மாகாணத்தில் 3895 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மொத்த நோயாளிகளில் இது 10.2 சதவீதமாகும். வடமேற்கு மாகாணத்தில் 2521 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது 6.6 சதவீதமாகும்.

வட மாகாணத்தில் 4738 நோயாளர்களும் தென் மாகாணத்தில் 2834 நோயாளர்களும் சப்ரகமுவ மாகாணத்தில் 3875 நோயாளிகளும் பதிவாகியுள்ளனர்.

இந்த மாதத்தில் 1446, கடந்த மாதம் 3897, ஜூலையில் 4506, மே மாதத்தில் 2647, ஏப்ரலில் 2234, மார்ச்சில் 3615, பெப்ரவரியில் 6007, ஜனவரியில் 10417 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மேலும் கடந்த ஆண்டில் டெங்குவால் 17 பேர் உயிரிழந்துள்ளனர்.


# (2015) இல. (5) என்ற தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின் 58(2) 119(1) மற்றும் 131(1)(ஆ) (1) மற்றும் 131(1)(இ) பிரிவின் பிரகாரம் கௌரவ நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

ரணசிங்ஹ ஆரச்சிலாகே ருக்மனீ பெரேரா மற்றும் ரணசிங்ஹ ஆரச்சிலாகே நிலுகா ரணசிங்க ஆகிய நாம் இருவரும் இல. (25)இல் அமைந்துள்ள கம்பஹா மெடிகல் நிறுவனத்தின் பங்காளர் ஆவோம் ஹிட்டி ஹாமிலாகே சுதீபா அமரசிங்ஹ இந் நிறுவனத்தின் மருந்தாளர் ஆவார் என்பதை அறியத் தருகிறோம்.

(2024.05.17)ம் திகதிய வழக்கு இலக்கம் (3210)இன் கீழ் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தின் கீழ்க்காணும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

1. தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி மருந்தகத்தை நடத்திச் செல்லல்
2. தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் அனுமதிப் பத்திரம் இன்றி மருந்து விற்பனை செய்தல்
3. மருந்தாளர் தமது பொறுப்பை மீறியமை

மேற்படி குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்ட பின்பு கௌரவ நீதிமன்றத்தினால் சகல குற்றச்சாட்டுகளுக்கும் ரூ. 75,000/-
தண்டத்தொகை தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன் இவ்வாறான குற்றங்கள் மீண்டும் இழைக்கப்பட மாட்டாது அத்துடன் மேற்கொண்ட குற்றம் சம்பந்தமாக இலங்கை வாழ் மக்களிடம் மன்னிப்புக் கோருகிறோம்.

ரணசிங்ஹ ஆரச்சிலாகே ருக்மனீ பெரேரா
ரணசிங்ஹ ஆரச்சிலாகே நிலுகா ரணசிங்ஹ
ஹிட்டி ஹாமிலாகே சுதீபா அமரசிங்ஹ

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 03ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 15

## குறள் தரும் சிந்தனை



அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான்

அறநெறியையும், ஆக்கத்தையும் விரும்பிப் போற் றாதவன்தான், பிறர் பெருமையைப் போற்றாமல் பொறாமைக் களஞ்சியமாக விளங்குவான்.

# தேர்தலுக்கான அமைதிக்காலம் அர்த்தபூர்வமாக அமையட்டும்!

இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் பிரசார காலம் நேற்று நள்ளிரவுடன் நிறைவுற்றுள்ளது.

முழு நாட்டிலும் நேற்று நள்ளிரவு வரையும் காணப்பட்ட தேர்தல் பிரசார கால பரபரப்பு, ஆர்ப்பாட்டங்கள் எதுவும் அற்ற அமைதி நிலையோடு இன்றைய காலைப் பொழுது புலர்ந்துள்ளது. இதே நிலை அடுத்துவரும் 48 மணித்தியாலயங்களுக்கு நீடிக்க வேண்டும். அதுவே தேர்தல் சட்டங்களின் உத்தரவாகும்.

தேர்தல் சட்ட ஏறபாடுகளின்படி அடுத்துவரும் 48 மணித்தியாலயங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கை எதனையும் முன்னெடுக்க முடியாது. இது அமைதிக்கான காலப்பகுதி என அடையாளப்படுத்தப்படுகிறது. அதனைப் பேணிப்பாதுகாப்பதே சட்டம் ஒழுங்கை மதித்து செயற்படுவதாக அமையும்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகின. அன்று தொடக்கம் கடந்த ஒரு மாத காலம் முழுவதும் பரந்த அடிப்படையில் இப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதிலும் கடந்த இரண்டொரு வாரங்கள் இப்பிரசாரங்கள் தீவிரம் அடைந்திருந்தன.

இத்தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அபேட்சகரும் தங்களது கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் வாக்காளர்கள் மத்தியில் முன்வைத்துள்ளனர். அத்தோடு வாக்குறுதிகளையும் அள்ளி வீசியுள்ளனர். இதன் ஊடாக வாக்காளர்கள் மத்தியில் போதிய தெளிவூட்டல்களும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதனால் தற்போது எஞ்சியிருப்பது வாக்காளர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். அவர்கள் இந்த 48 மணித்தியாலங்களுக்குள் கடந்த ஒரு மாத காலப் பகுதியில் உள்வாங்கிய கொள்கைகளையும் திட்டங்களையும் சீர்தூக்கிப் பார்த்து நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். அந்தத் தீர்மானம் நாடு சுபீட்சம் அடைந்து கொள்ளவும் மக்களுக்கு வளமான வாழ்வு கிடைக்கப் பெறவும் வழிவகுப்பதாக அமைய வேண்டும்.

இல்லாவிடில் கடந்த காலங்களைப் போன்று மீண்டும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் முகம்கொடுப்பதைத் தவிர்க்க முடியாது போய்விடும். இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது ஒவ்வொரு வாக்காளரினதும் பொறுப்பும் கடமையும் ஆகும்.

கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் காணப்பட்ட ஜனாதிபதித் தேர்தல் பிரசாரகால பரப்பு, கொதிநிலை நேற்று நள்ளிரவோடு முடிவுற்றதோடு எங்கும் அமைதி நிலவிக் கொண்டிருக்கிறது. கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் காணப்பட்ட பரபரப்பு நிலையில் இன்று ஓய்வுநிலை ஏற்பட்டிருக்கிறது. அதாவது ஒரு மாதத்திற்கு முன்னர் குறிப்பாக கடந்த மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட நிலை மீண்டும் உருவாகியுள்ளது.

அடுத்துவரும் 48 மணித்தியாலயங்களுக்கும் இதே நிலையைப் பேணிக் கொள்வது வாக்காளர்களின் பொறுப்பாகும். ஏனெனில் நாட்டின் தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தலே நாளைமறுதினம் 21 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. அந்த தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது. அதற்கு வாக்காளர்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க வேண்டும். அப்போதுதான் தேர்தல் நேர்மையாகவும் அமைதியாகவும் அமையும்.

ஓரிரு அபேட்சகர்களின் ஆதரவாளர்கள் இக்காலப்பகுதியில் தேர்தல் சட்ட ஏற்பாடுகளை மீறும் வகையில் செயற்பட முயற்சிக்கலாம். வன்முறைகளை தூண்டிவிடவும் குழப்பங்களை விளைவிக்கவும் எத்தனிக்கலாம். அற்ப நலன்களை அடைந்து கொள்வதை இலக்காகக் கொண்டே அவர்கள் இவ்வாறு செயற்படுவர் என்பதை வாக்காளர்கள் மறந்துவிடலாகாது.

அதன் காரணத்தினால் அத்தகையவர்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவோ ஒத்துழைப்போ நல்கக் கூடாது. அவ்வாறான செயற்பாடுகளையும் முயற்சிகளையும் நிராகரிக்கத் தவறக்கூடாது. சட்டம் ஒழுங்கை கையில் எடுப்பதற்கு எவருக்கும் துணை போகவும் கூடாது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கு அமைய அபேட்சகர்கள் உட்பட அனைத்து வாக்காளர்களும் செயற்பட்டாலேயே தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறும்.

இவற்றுக்கு மாற்றமாக செயற்படும் போது சட்டம் ஒழுங்கு மாத்திரமல்லாமல் தேர்தல் சட்டவிதிகள் கூட மீறப்படுவதாகவும் பாதிக்கப்படுவதாகவும் அமைந்துவிடும். அது நாட்டின் ஜனநாயக விழுமியங்களுக்கு குந்தகம் விளைவிப்பதாகவும் ஊறுவிளைவிப்பதாகவும் அமைந்துவிடும். அத்தோடு ஜனநாயகம் பாதிக்கப்பட துணை போவதாகவும் கூட அமையலாம். அத்தகைய தவறானதும் பிழையானதுமான செயற்பாடுகளுக்கு எவ்விதத்திலும் துணைபோகலாகாது. இன்று நாட்டில் எவ்வாறு அமைதி நிலை கோலோச்சுகிறதோ, இதே நிலையை தொடர்ந்தும் பேணுவது வாக்காளர்களின் பொறுப்பாகும். அதன் ஊடாக தேர்தலுக்கான அமைதிக் காலம் அர்த்தபூர்வமானதாக அமைந்துவிடும். அதுவே ஜனநாயகத்தை விரும்பும் அனைத்துத் தரப்பினராதும் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஆசியாவின் அதிசயமாகத் திகழவிருக்கும் பிரமாண்டமான நூலகம் மட்டக்களப்பில்

இலங்கையில் மிகப்பிரமாண்டமானதொரு நூலகத்தை மட்டக்களப்பில் உருவாக்க வேண்டும். அது ஆசியாவின் அதிசயங்களில் ஒன்றாகத் திகழ வேண்டும் என்னும் நோக்கில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பணி புரிந்த காலத்தில் மட்டக்களப்பில் அதற்கான அடிக்கல் நாட்டியிருந்தார்.



மட்டக்களப்பு பொதுநூலகத்திற்கு நூல்களைச் சேகரித்து வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவ்வகையில், இலங்கையின் புகழ்பெற்ற மூத்த நூலகவியலாளரும், எழுத்தாளரும், வெளியீட்டாளருமான என்.செல்வராஜா மட்டக்களப்பு பொது நூலகத்திற்கு நூல்களை பெற்றுக்கொடுத்ததுடன், 'மட்டக்களப்பில் பொலிவுறும் பொதுசன நூலகம்' எனும் பெயரில் மட்டக்களப்பு நூலகத்தின் பழைய, புதிய வரலாறு மற்றும் நூலகம் எவ்வாறு அமைய வேண்டும் போன்ற விடயங்கள் அடங்கிய விரிவான நூலையும் அண்மையில் வெளியிட்டிருந்தார். அத்துடன், தொடர்ந்து மட்டக்களப்பு நூலக அபிவிருத்திப் பணி தொடர்பில் தன்னாலான



## இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் எண்ணக்கருவில் உருவான நூலகத்துக்கு நூல்களைச் சேகரிக்கும் பணிகள்

மேற்படி பொதுநூலகத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பமான போதிலும், சிவநேசதுரை சந்திரகாந்தன் அவ்வேளையில் சிறைக்குச் சென்ற பின்னர், பல்வேறு அரசியல் காரணிகளால் கட்டட வேலைகள் தாமததாமாகின. எனினும் சிவநேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானதன் பின்னர் மீண்டும் அப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் நிறைவுறும் தறுவாயில் உள்ளன.

மேற்படி நூலகத்தைத் திறக்கும் போது குறைந்தது 03 இலட்சம் புத்தகங்களுடன் திறக்கப்பட வேண்டும் என்பதற்காக இராஜாங்க அமைச்சரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் உள்ள புத்திஜீவிகள், நூலகத்துறை மற்றும் ஆவணப்படுத்தல் பணிகளில் ஈடுபடுபவர்கள், எழுத்தாளர்கள் எனப் பல்வேறு தரப்பினர் அடங்கிய 'மட்டக்களப்பு நூலக புத்தகவள ஒருங்கிணைப்பு குழு' எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு, நூலகத்திற்கான புத்தகங்களைச் சேகரிக்கும் பணி உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கை, தமிழ்நாடு, லண்டன், கனடா, பிரான்ஸ், மலேசியா எனப் பல இடங்களிலுள்ள எழுத்தாளர்கள், இலக்கிய அமைப்புகளைச் சேர்ந்தோர் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

அதன் தொடர்ச்சியாக, மட்டக்களப்பில் உருவாகிவரும் பிரமாண்ட நூலகத்தில் வைக்கப்பட வேண்டிய புத்தகங்களை வாசகர்களைக் கவரும் வண்ணம் ஒழுங்கமைத்தல், காட்சிப்படுத்தல் மற்றும் அதனைப் பேணிப் பாதுகாத்தல் தொடர்பாகவும், அதே போன்று மட்டக்களப்பிலுள்ள ஏனைய நூலகங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாநகரசபை பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொதுநூலகங்களில் பணிபுரிகின்ற நூலகர்கள், நூலக சேவகர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு நூலகவியலாளர் என். செல்வராஜாவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அனுபவம் வாய்ந்த நூலகர்கள் மற்றும் நூலக உத்தியோகத்தர்களால் பல்வேறு ஆலோசனைகளும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

மட்டக்களப்பின் பிரமாண்ட நூலகம் எவ்வகையான நூல் சேகரிப்புக்களை கொண்டிருக்க வேண்டும்? அவற்றை எந்தெந்த வழிகளில் பெறலாம்? பின்னர் அவற்றை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் போன்றவை தொடர்பில் அனைவருக்கும் அறிவுரை வழங்கியதுடன், தனது நூல் மற்றும் நூலகத்துறை அனுபவத்தின் மூலம் பொது நூலகங்களை வளப்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் செல்வராஜா எடுத்துரைத்தார்.

எஸ்.ஏ.ஸ்ரீதர்
(வாழைச்சேனை தினகரன் நிருபர்)



# டெங்கு தொற்று அதிகரிப்பதால் பாதுகாப்புப் பெறுவது அவசியம்



டெங்கு என்பது ஈடிஸ் நுளம்பு வகையால் பரப்பப்படும் ஒரு தொற்றுநோயாகும். டெங்கு வைரஸ் தொட்டுக்குள்ளான பலர் எவ்வித நோய் அறிகுறிகளையும் ஆரம்பத்தில் வெளிப்படுத்த மாட்டார்கள்.

ஈடிஸ் நுளம்பானது தொற்று ஏற்பட்ட மனிதர்களிடமிருந்து குருதியை உட்கொள்வதன் மூலம் வைரசைப் பெற்றுக் கொள்கிறது. டெங்கானது காச்சல் தவிர பின்வரும் அறிகுறிகளுடன் தொடர்புடையது.

தலைவலி/ கன்னைச் சுற்றியுள்ள பகுதியில் வலி, குமட்டல் மற்றும் வாந்தி, தசை மட்டும் மூட்டுவலி, தோலில் சிவப்புத் திட்டுகள், இரத்தப்போக்கு வெளிப்பாடுகள் முரசு, மூக்கு, தோல் ஆகியவற்றிலிருந்து.

வாரத்துக்கு ஒரு முறை தமது வீடு, சுற்றாடல், வேலை செய்யும் இடங்கள் என்பவற்றை அவதானித்து நுளம்பு பெருகும்இடங்களை சுத்தப்படுத்த வேண்டும். அதிகமானோர் தமது வீட்டின் அருகில் உள்ள வடிகான்களைக் கூட சுத்தப்படுத்தாமல் இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனை உள்ளூராட்சி சபைதான் செய்ய வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். பலர் மண்வெட்டி பிடித்து வேலை செய்வதை தாழ்வாக நினைக்கின்றனர். எனவே சிந்தனை மாற்றங்கள் ஒவ்வொரு மனிதர்களிடமிருந்து வர வேண்டும்.

ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் பின்வரும் விடயங்களை செய்தல் வேண்டும்.

நுளம்பு நுழைவதைத் தடுக்க ஆழமற்ற கிணறுகள் ,நீர் சேகரிக்கும் கொள்கலன்கள், தொட்டில்கள் பீப்பாய்கள் என்பவற்றை சரியாக மூடுதல்வேண்டும்.

ஆளமற்றகிணறுகள், தொட்டில்கள், மற்றும் குளங்களுக்கு குடம்பிகளை உணவாக உட்கொள்ளும் மீன்களைப் போடுதல். அத்துடன் குழாய்க் கிணற்றின் மேற்புறத்தில் உள்ள நீர் சேகரிக்கும்பகுதியில் நுளம்பு இனப்பெருக்கம் செய்கிறதா என்தை தினமும் கவனமாக அவதானித்தல் வேண்டும். நுளம்பு முட்டைகளை அகற்றுவதற்காக தொடர்ச்சியாக தண்ணீர் சேகரிக்கும் கொள்கலன்கள், தொட்டில்கள், மலர்குவளைகள், செல்லப்பிராணிக்கு உணவளிக்கும் கோப்பைகள் அனைத்தையும் துடைத்து துப்புரவு செய்ய வேண்டும். மேலும் தவறாமல் குளிர்சாதன பெட்டி மற்றும் எயார்கண்டிசன் போன்றவற்றின் நீர்சேகரிப்பு தட்டுகளைத் துடைத்து சுத்தம் செய்தல் வேண்டும்


டயர்களை கூரை அறையின் கீழ் வைத்தல் அல்லது மண் நிறப்பி வைத்தல் நல்லது. செயற்பாடாகும். கூரைப் பீலிகளை சுத்தம் செய்தல் வேண்டும்.

மரத்துளைகள் மற்றும் மூங்கில் கட்டைகளை மணல் நிரப்பி வைத்தல் வேண்டும். அகற்ற முடியாத நீர் வைத்திருக்கும் கொள்கலன்களுக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அறிவுறுத்தலுடன் குடம்பி நாசினிகளைப் பயன்படுத்தல் வேண்டும். அத்துடன் நுளம்பு குத்துவதில் இருந்து பாதுகாப்புப் பெற வேண்டும். இவற்றைக் கடைப்பிடித்தாலேயே டெங்கு தொற்றில் இருந்து பாதுகாப்புப் பெறலாம்.

எனவே குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருநாளும் அல்லது வாரத்துக்கு ஒருமுறையும் இவற்றைக் கடைப்பிடித்து சுத்தம் செய்யவேண்டும். டெங்கு தொற்று தற்போது அதிகரிப்பதால் நாம் அனைவரும் பாதுகாப்புப் பெறுதல் அவசியம்.

இஸ்மாயில் ஹுஸைன்தீன் (Bed)
அம்பாறை விசேட நிருபர்

# உலகை மீண்டுமொரு தடவை ஆட்டுவிக்க ஆயத்தமாகின்றதா புதியவகை கொரோனா?



## 27 நாடுகளில் பரவியது!

உலகின் 27 நாடுகளில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவி உள்ளது. இச்செய்தி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டில் உலக நாடுகளை துவம்சம் செய்தது கொரோனா வைரஸ். கடும் பாதிப்பை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் தாக்கத்தால் பலியானவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியை தாண்டியது. இன்றளவும் ஒரு சில நாடுகளில் கொரோனா தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் அடுத்த அதிர்ச்சியாக XEC variant என்ற புதிய வகை கொரோனாவின் தொற்று உலக நாடுகளை ஆட்டுவிக்க ஆரம்பித்துள்ளது. பிரிட்டன், ஜெர்மனி, டென்மார்க், அமெரிக்கா, நெதர்லாந்து உள்ளிட்ட 27 நாடுகளில் இந்த கொரோனா பரவி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது. போலந்து, நோர்வே, சீனா, உக்ரைன், போர்த்துக்கல் ஆகிய நாடுகளிலும் பரவி இருக்கிறது.

அதிக தாக்கம் கொண்ட இந்த புதிய வகை திரிபு குறித்து பிரிட்டனில் மக்களுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு இருக்கிறது. ஜெர்மனியில்தான் இந்த திரிபு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

தற்போது 3 கண்டங்களில் 27 நாடுகளில் பரவி உள்ளது. உலகின் மற்ற நாடுகளுக்கு மேலும் பரவும் வாய்ப்பு இருப்பதாகவும், புதிய அலை ஒன்றை உருவாக்கலாம் என்றும் மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். மனித உடலில் xec கொரோனா திரிபு தாக்கினால் அதன் அறிகுறிகள் எப்படி இருக்கும் என்று சுகாதாரத்துறையினர் தெரிவித்துள்ளனர். மற்ற வகை கொரோனா பாதிப்பின் போது ஏற்படும் காய்ச்சல், தொண்டை வலி, இடைவிடாத இருமல், வாசனை நுகர்வை இழத்தல், உடல் வலி போன்றவை காணப்படும். புதிய வகை கொரோனா திரிபின் தன்மையை, செயல்பாட்டை தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும், மருத்துவ நிபுணர்கள் கூறி இருக்கின்றனர்.

# சி.ஐ.டி சகுந்தலா காலமானார்



இந்தியாவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் உள்ளிட்ட மொழிகளில் 600 படங்களுக்கு மேல் பணியாற்றிய நடிகை சி.ஐ.டி. சகுந்தலா நேற்றுமுன்தினம் காலமானார். சேலத்தை சேர்ந்த இவர் 1960ஆம் ஆண்டு வெளியான 'கைதி கண்ணாயிரம்' படம் மூலம் நடனக் கலைஞராக சினிமாவிற்கு அறிமுகமானார். அதற்கு முன்பு நாடகங்களில் நடித்து வந்தார்.

1970ஆம் ஆண்டு ஜெய்சங்கர் நடிப்பில் வெளியான 'சி.ஐ.டி. சங்கர்' படத்தில் இவர் நடித்த கதாபாத்திரம் பெருமளவு வரவேற்பைப் பெற, அதன் பிறகு 'சி.ஐ.டி. சகுந்தலா' என்று அழைக்கப்பட்டார்.

அப்போதைய முன்னணி நடிகர்களான எம்.ஜி.ஆர், சிவாஜி ஆகியோருடன் பல்வேறு படங்களில் நடித்துள்ளார். அதன் பிறகு சினிமாவில் இருந்து விலகி தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வந்தார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு நடிப்பிலிருந்தும் விலகி பெங்களூருவில் இருக்கும் மகள் வீட்டில் வசித்து வந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கு காலமானார். சி.ஐ.டி. சகுந்தலாவின் இறுதி சடங்குகள் நேற்று மாலை நடைபெற்றன. இவர் பெங்களூருவில் உள்ள ஜஸ்வந்த்பூரில் குடும்பத்துடன் வசித்து வந்தார். சகுந்தலா, சேலம் அரிசிபாளையத்தைச் சேர்ந்தவர். சென்னையில் லலிதா, பத்மினி, ராகினி சகோதரிகளுடன் இணைந்து நடனக் குழுவில் நாட்டியமாடி வந்தார். பின்னர் திரைப்படங்களில் சிறு சிறு வேடங்களில் தொடங்கி, முக்கிய வேடங்களிலும் வலம்வந்தார்.

படிக்காத மேதை, கைகொடுத்த தெய்வம், திருடன், தவப்புதல்வன், வசந்த மாளிகை, நீதி, பாரத விலாஸ், ராஜராஜ சோழன், பொன்னூஞ்சல், என் அண்ணன், இதயவீணை ஆகிய படங்கள் இவரின் நடிப்பில் வந்த குறிப்பிடத்தக்க படங்கள் ஆகும்.

பழம்பெரும் நடிகை சகுந்தலாவின் மறைவுக்கு திரையுலகினர் பலரும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# தனியார் துறை ஊழியர்களை நாம் மறந்துவிட போவதில்லை

## கடவத்தை பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச





தனியார்துறை ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 25,000 ரூபாவாக வேண்டும் என்று சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட ஒரே கட்சி ஐக்கிய மக்கள் சக்தி ஆகும். ரணசிங்க பிரேமதாச வின் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை களில் சேவையாற்றுகின்ற சகோதர சகோதரிகளைப் பாதுகாப்பதோடு, உங்களது உரிமைகளையும் பாது காப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த பேரணி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமை யில் நேற்றுமுன்தினம் 17ஆம் திகதி கடவத்தையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற் றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரி வித்தார்.

"கடவத்தையில் இருந்து மீரிகம வரையான அதிவேக வீதியின் மீதமுள்ள பகுதியை நிர்மா ணிப்போம். அனைத்துப் பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்று வதோடு, இலவசக் கல்வியையும் இலவச சுகாதார சேவையும் பாதுகாப்போம்.

புதிய தொழிற்துறைகளுக்கு முதலிடம் கொடுத்து ஒருமில்லியன் தொழில் முனைவோர்களை உரு வாக்குவோம். இல்லத்தரசிகளை மையமாகக் கொண்ட சுயதொழில் புரட்சி ஒன்றை ஏற்படுத்து வோம். நீதியையும் நியாத்தையும் நிலைநாட்டுவ தோடு, சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்போம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சட்டத்தரணி கள் சங்கமும் ஊழல் எதிர்ப்புக் குழுவும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றை தாக்கல் செய்து, நாட்டை வங்குரோத்த டையை செய்தது யார் என்பதை ஒரு தீர்ப் பின் ஊடாக வெளிப்படுத்தினோம்.

இன்று அரசியல் டீல்கள் வெளியாகி இருக்கின்றன. இந்த மோசமான அரசி யல் கொடுக்கல் வாங்கல்களை தோல்வி யடையச் செய்வதற்கு தொலைபேசிக்கு வாக்களித்து ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றியடைய செய்யுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

வறுமையைப் போக்குவதற்கான புதிய வேலைத்திட்டமாக 24 மாதங்க ளுக்கு ஐந்து தடவை மாதம் ஒன்றுக்கு இருபதாயிரம் ரூபாய் வீதம் வழங்கி வறுமையை ஒழிப்போம். தொடர்ந் தும் நிவாரணங்களை வழங்குவதற்கு பதிலாக குறுகிய காலத்திற்கு மாத்திரம் வழங்கி மக்களை மேம்படுத்தி வறுமை யில் இருந்து மீட்டெடுப்போம்."

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பும் வெற்றி பெற்ற பின்னர் வினயமாகவும் பணிவாகவும் வெற்றி கொண்டாட்டங்களை முன் னெடுங்கள். பொறுப்புடன் மக்களின் துன்பங்களை நீக்குகின்ற பயணத்தை முன்னெடுக்க வேண்டும்" என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.



# சஜித், அனுரகுமார நோக்கங்களை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

## திருக்கோவிலில் பொதுவேட்பாளர் அரியநேத்திரன்






சஜித் பிரேமதாசாவுக்கு வாக் களித்தால் கிழக்கிலும் அதிக விகாரைகள் உருவா கும். சஜித்தை ஆதரிக்கலாமா என்று சிந்தியுங்கள். அதேவேளை அனுரகு மார திசாநாயக்கா இணைந்த வடக்கு, கிழக்கைத் துண்டாடிய அரசியல் வாதி. இவற்றை தமிழ் மக்கள் விளங் கிக் கொள்ள வேண்டும் என ஜனாதிப தித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொதுவேட்பாளர் பா. அரியநேந்தி ரன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பொதுக் கட்டமைப் பின் அம்பாறை மாவட்டத்திற்கான ஜனாதிபதித் தேர்தல் பிரதான பிரசா ரக் கூட்டம் நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை இரவு திருக்கோவி லில் நடைபெற்றது .

இக்கூட்டத்திற்கு தமிழ் பிரதே சங்களிலிருந்து வருகை தந்திருந்த ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர். காரைதீவில் இருந்து தாயக செயலணி யின் அம்பாறை மாவட்ட இணைப் பாளர் கே.ஜெயசிறில் தலைமையில் மக்கள் வந்திருந்தனர்.

அங்கு அரியநேத்திரன் மேலும் உரையாற்றியதாவது:

"தமிழர்கள் எல்லாரும் ஒன்றுபட வேண்டிய தருணம் இது. இந்த தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் வந்த பிறகு ஜனாதிபதி தேர்த லில் முக்கிய வேட்பாளர்கள் அவர்களது இடங்களில் பிரசா ரம் செய்யாமல் வடக்கு, கிழக் கில் தற்போது நிலைகொண் டுள்ளனர்.

தற்போது பொதுவேட்பாள ரின் தாக்கம் உணரப்பட்டு வரு கின்றது. நடைபெறவுள்ள ஜனாதிப தித் தேர்தலில் அவர்களுக்கு விசேட பாடம் ஒன்றை புகட்ட வேண்டும். கடந்த கால ஜனாதிபதிகள் எமக்குச் செய்த துரோகத்திற்கு பரிசாகவே நாம் இந்த முறை சங்கு சின்னத்திற்கு வாக் களிக்கின்றோம் என்ற செய்தியை கொடுக்க வேண்டி இருக்கின்றது

இப்போது போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரே மதாச கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கில் நல்லாட்சிக் காலத்தில் அதிக பன்சலைகளை நிறுவியவர் ஆவார். நீங்கள் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்தால் கிழக்கிலும் அதிக பன் சலைகள் உருவாகும். சஜித்தை ஆத ரிக்கலாமா என்று சிந்தியுங்கள்.

அனுரகுமார திசாநாயக்கா இணைந்த வடக்கு, கிழக்கைத் துண்டாடி அவற்றுக்கான மாகாண சபைத் தேர்தலை நடத்த காரண மாக இருந்தவர். அனுரகுமாரவை ஆதரித்து வாக்கு கேட்டு வரும் அரசியல்வாதிகளின் கோமாளித்த னத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்".

இவ்வாறு வேட்பாளர் அரியநேத்தி ரன் தெரிவித்தார்.

**வி.ரி. சகாதேவராஜா**
**(காரைதீவு குறூப் நிருபர்)**

# பதவியை துறந்துவிட்டு அதிஷியை முதல்வராக்கினார் கெஜ்ரிவால்!

மதுபானக் கொள்கை வழக் கில் சிக்கி, தற்போது பிணையில் வெளிவந்தி ருக்கும் டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், பதவியை இராஜி னாமா செய்துவிட்டு, அமைச்சராக இருந்த அதிஷியை முதலமைச்சராக ஆக்கியிருக்கிறார்.

டெல்லி அரசின் புதிய மதுபா னக் கொள்கை, ஆம் ஆத்மி கட்சி யின் பல தலைவர்களைச் சிறையில் தள்ளியது. எம்.எல்.ஏ, எம்.பிக்கள் தொடங்கி கட்சியின் ஒருங்கிணைப் பாளரான அரவிந்த் கெஜ்ரிவால் வரை மதுபானக் கொள்கை வழக் கில் சிறை சென்றனர். அந்த வழக் கில் சிக்கி, தற்போது பிணையில் வெளிவந்திருக்கும் அரவிந்த் கெஜ் ரிவால், பதவியை இராஜினாமா செய்துவிட்டு, அமைச்சராக இருந்த அதிஷியை முதலமைச்சராக ஆக்கி யிருக்கிறார். கெஜ்ரிவாலின் இந்த அரசியல் நகர்வுகளின் பின்னணி யில் பல காரணங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

கடந்த ஜூலை 22, 2022 இல், டெல்லியின் தலைமைச் செயலா ளர் நரேஷ் குமார், 'புதிய மதுபானக் கொள்கையில் பல்வேறு முறைகே டுகள் இடம்பெற்றிருக்கின்றன. துணை முதல்வர் மணீஷ் சிசோடியா விற்பனையாளர்களுக்குத் தேவை யற்ற சலுகைகளை வழங்கியிருக்கி றார். இதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது' என்று துணை நிலை ஆளுநர் வி.கே.சக்சே னாவிடம் அறிக்கை சமர்ப்பித்தார். இதையடுத்து, ஜூலை 30 ஆம் திகதி அன்று சர்ச்சைக்குரிய மதுபானக் கொள்கையைத் திரும்பப் பெற்றுக் கொண்டது டெல்லி அரசு.

தொடர்ந்து, புதிய மதுபானக் கொள்கை தொடர்பான முறைகேடு களை சி.பி.ஐயும், அமலாக்கத்துறை யும் விசாரிக்கத் தொடங்கின. இந்த விசாரணையில், ஆம் ஆத்மி எம். பி சஞ்சய் சிங், டெல்லியின் துணை முதல்வர் மணீஷ் சிசோடியோ, பாரத் ராஷ்டிர சமிதியின் தலைவர் சந்திரசேகர் ராவ்வின் மகள் கவிதா வரை கைதாகினர். இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், டெல்லி முதல்வ ராக இருந்த அரவிந்த் கெஜ்ரிவாலும் கைதுசெய்யப்பட்டார்.



ஆறு மாத சிறைவாசத்துக்குப் பின்னர், பிணையில் விடுதலை யானார் கெஜ்ரிவால். உச்ச நீதிமன் றமோ, 'முதல்வர் அலுவலகத்துக் குச் செல்லக்கூடாது; கோப்புகளில் கையெழுத்துப் போடக்கூடாது' என்று கடும் நிபந்தனைகளுடன் பிணை வழங்கியிருந்தது. சிறையிலி ருந்து வெளியில் வந்த கெஜ்ரிவால், "நீதிமன்றத்தில் எனக்கு நியாயம் கிடைத்துவிட்டது. மக்கள் மன்றத்தி லும் நியாயம் கிடைக்க வேண்டும். எனவே, தேர்தலில் வென்ற பிறகு தான் முதல்வர் நாற்காலியில் அம ருவேன். எனது பதவியை இராஜி னாமா செய்யப்போகிறேன்" என்று அறிவித்தார். அதோடு, `பெப்ரவரி மாதத்தில் நடக்கவிருக்கும் டெல்லி சட்டமன்றத் தேர்தலை நவம்பர் மாதத்திலேயே நடத்த வேண்டும்' என்ற கோரிக்கையையும் தேர்தல் ஆணையத்திடம் முன்வைத்தார்.

வேறு எந்தத் தலைவருக்கும் விதிக்காத கட்டுப்பாடுகளை கெஜ் ரிவாலுக்கு விதித்திருக்கிறது நீதி மன்றம். உச்சநீதிமன்றம் விதித்த கட்டுப்பாடுகளால், முதல்வராக எந் தவொரு பணியையும் கெஜ்ரிவால் செய்ய முடியாது என்பதால்தான், பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்திருக்கிறார்.

"ஒரு குற்றவாளியைப் போலத் தான் கெஜ்ரிவாலை நீதிமன்றம் நடத் தியிருக்கிறது. அதிஷி முதல்வராக் கப்பட்டிருந்தாலும், ரிமோட்டை வைத்து அவரை இயக்கப்போவது கெஜ்ரிவால்" என்கின்றனர் அவதா னிகள். கெஜ்ரிவால் சிறையிலிருந் தபோதே, அதிஷிதான் கட்சியின் முகமாக இருந்தார். சிறையிலிருந்த கெஜ்ரிவால், "சுதந்திர தினத்தன்று எனக்குப் பதிலாக அதிஷியை கொடி யேற்ற அனுமதிக்க வேண்டும்" என ஆளுநருக்குக் கடிதம் எழுதினார். ஆனால், ஆளுநர் நிராகரித்ததால் அது நடக்காமல் போனது. 2013 முதலே ஆம் ஆத்மி கட்சியில் பயணிக்கும் அதிஷிதான், கெஜ்ரி வால் அமைச்சரவையிலிருந்த ஒரே பெண். ஆம் ஆத்மியின் முன்னாள் எம்.பி ஸ்வாதி மாலிவால் கெஜ்ரி வால் வீட்டில் வைத்துத் தாக்கப்பட் டதாகக் கிளம்பிய விவாகரத்தை எதிர்க்கட்சிகள் பூதாகரமாக்கின.

அப்போதே `பெண்களுக்கு எதிரான கட்சி ஆம் ஆத்மி' என்ற விமர்சனங்களும் எழுந்தன. இதனால், ஒரு பெண்ணை முன் னிறுத்த விரும்பினார் கெஜ்ரிவால். நன்கு படித்த மிடில் கிளாஸ் மக்கள் தான் ஆம் ஆத்மியின் வாக்கு வங்கி. அதை மனதில் வைத்து, ஆம் ஆத் மியிலேயே அதிகம் படித்தவரான அதிஷியை முதல்வராக்கியிருக்கி றார் கெஜ்ரிவால்.

பதவியை ராஜினாமா செய்து விட்டு, அதிஷியை முதல்வராக்கி யிருக்கும் கெஜ்ரிவாலின் முடிவு ஆம் ஆத்மிக்குக் கைகொடுக்குமா?' என்ற கேள்விக்கான விடையை எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் டெல்லி மக்கள் தெரிவிப்பார்கள்.

# நெருக்கடியிலிருந்து மக்களை சுவாசிக்க செய்த தலைவர் ரணில் மட்டுமே மக்கள் 21 ஆம் திகதி அவரது வெற்றியை உறுதி செய்ய வேண்டும்

## ஹோமாகம மக்கள் பேரணிக் கூட்டத்தில் அமைச்சர் பந்துல குணவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டையும் பொருளாதாரத்தையும் கட்டி யெழுப்பும் அனுபவமும் திறமை யும் மிக்க தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப் படுத்த நாட்டு மக்கள் முழுமையான ஆதரவை வழங்க வேண்டும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரி வித்தார்.

ஹோமாகம நகரில் நேற்று நடை பெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா'ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்கும் மக்கள் பேரணிக் கூட்டத்தில் உரையாற் றும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற் றிய அவர்,

நாட்டின் முக்கியமான தருணம் இது. நெருக்கடி நிலையில் இருந்த நாட்டை சவால்களுக்கு மத்தியில் பொறுப் பேற்று இயல்பு நிலையை ஏற்படுத் தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை வெற்றி பெறச் செய்வதற்கு ஹோமாகம,கடுவலை, மஹரகம உள் ளிட்ட மக்கள் தயாராகிவிட்டனர்.

அந்த வகையில் நெருக்கடியிலி ருந்து மீள இயல்பு நிலைக்கு கட்டியெ ழுப்பப்பட்டுள்ள நாடு முன்னோக்கி செல்வதா? அல்லது மீண்டும் பின்ன டைவை காண்பதா என்பதை எதிர்வரும் 21 ஆம் திகதி மக்கள் அளிக்கும் வாக் குகளே தீர்மானிக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன உள்ளிட்ட முக்கிய கட்சிகள், ஜீவன் தொண்டமான், அதாவுல்லா, சிவநேசதுரை சந்திரகாந் தன் ஆகியோரின் கட்சிகள் உட்பட பெரு மளவான கட்சிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றன.

வடக்கில் சுமந்திரனைத் தவிர ஏனைய தமிழ் அரசியல் தலைவர்கள் ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவை வழங்கி அவரின் வெற்றியை உறுதிப்ப டுத்த தீர்மானித்துள்ளனர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நாடு இருந்த நெருக்கடி நிலையை மக்கள் அறிவர். அந்த நிலையிலி ருந்து குறுகிய காலத்தில் இந்த நாட்டை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு



வர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவி னால் மட்டுமே முடிந்துள்ளது. முடியும் என்பதை செயலில் காட்டிய ஒரே தலைவர் அவர் மட்டுமே.

16 முறை கைவிடப்பட்டிருந்த சர்வ தேச நாணய நிதியத்திடம் சென்று பேச்சு வார்த்தை நடத்தி நாட்டு மக்களை சுவா சிக்க வழி வகுத்தவர் அவர் மட்டுமே.

அனுரகுமார திசநாயக்கவும் சஜித் பிரேமதாசவும் சர்வதேச நாணய நிதி யத்துடன் ஒப்பந்தம் செய்ய வேண்டாம் என கூறிய போதும் நாட்டின் எதிர்கா லத்தை கருத்திற் கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வந்த அனுபவமும் திறமையும் வாய்ந்த தலைவர் அவர்.

ஏனைய அரசியல்வாதிகள் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க செயற்பட்டபோது செயலிழந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டி யெழுப்பி மக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க வழி வகுத்தவர் அவர்.

## அடுத்த தவணைக்கான பணத்தை வழங்குவதற்காக

# IMF பிரதிநிதிகள் இரண்டு வாரங்களில் இலங்கை வருவர்

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை அரசாங்கம் ஏற்படுத்திய வேலைத்திட்டத்தின் படி அடுத்த தவணைக்கான பணத்தை வழங்குவ தற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இரண்டு வாரங்களில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள் ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மாற்றுவதற்கு இடமளிப்பதா அல்லது நாடு பெறப்போகும் சலுகைகளை இழப் பதா என்பதை மக்கள் செப்டெம்பர் 21 ஆம் திகதி தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

களுத்துறை பொது விளையாட் டரங்கில் நேற்று (18) பிற்பகல் இடம்பெற்ற "ரணிலுக்கு இயலும் " பேரணியில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட் டிருந்த இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

'இயலும் ஸ்ரீலங்கா' என்று கூறி அன்று பொருளாதார சவாலுக்கு முகம் கொடுத்து அதில் வெற்றி பெற்றதாகக் கூறிய ஜனாதிபதி, இன்று 'இயலும் ஸ்ரீலங்கா' என்பது நாட்டை அபிவிருத்தி செய்வதாகும் என்றும், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய தலைவ ரைத் தெரிவு செய்வது மக்களின் பொறுப்பாகும் எனவும் வலியுறுத் தினார்.

சஜித்தும், அநுரவும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் இருப்பதாகக் கூறினால், ஏன் அன்று நாட்டை பொறுப்பேற் கவில்லை என கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, தன்னிடம் சிறந்த அணி இருப்பதாக இன்று சஜித் கூறினா லும், அந்த அணியால்தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியவில்லை என பகிரங்கமாக கூறியதையும் அவர் நினைவு கூர்ந் தார். இந்த மக்கள் பேரணியில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக் ரமசிங்க மேலும் கூறியதாவது;

எங்களின் தேர்தல் பிரசாரம் இன் றுடன் நிறைவடைகிறது. செப்டெம் பர் 21ஆம் திகதி இந்நாட்டு மக்கள் தமது எதிர்காலம் குறித்துத் தீர்மா னிக்க வேண்டும். நான் ஒரு அரசி யல்வாதியாக வாழ்க்கையை எதிர் கொண்டேன்.

குடிமக்களாகிய நீங்கள் அரசியல் வாதிகளை நம்பினீர்கள். கடந்த இரண்டு வருடங்களில் ஒவ்வொ ருவருக்கும் ஒரு புதிய அனுபவம் கிடைத்தது. நீங்கள் நம்பிய தலை வர்கள் இந்நாட்டின் பிரச்சினைக ளுக்கு முகம் கொடுக்கத் தவறி, தங்கள் பொறுப்புகளில் இருந்து ஓடி விட்டனர்.

அரசியல்வாதிகளாக நாம் சவால் களை எதிர்கொள்ள வேண்டி யுள்ளது. மகிழ்ச்சியும் சோகமும் உண்டு. எமக்கு நல்லதும் கூறுகிறார் கள், கெட்டதும் கூறுகிறார்கள். நாம் பிரபலமாகினோம். அதேபோன்று, நம் பெயர் மறந்தும்விடும். அரசியல் செயல்பாட்டின் மூலம் இலாபம் அல்லது இழப்பும் ஏற்படும், அதே போன்று முடிவுகள் எடுக்க வேண்டி யேற்படும்.

மக்கள் என்னை நிராகரித்த போதும், என்னால் மக்களை நிரா கரிக்க முடியாது என்று முடிவு செய்தேன். நாட்டின் தலைவர் என்ற முறையில் மக்களை நிராகரிக்காமல் மக்களுக்கான சவாலை ஏற்றுக் கொண்டேன். என்னிடம் ஒப்படைக் கப்பட்ட கப்பலில் ஓட்டைகள் இருந்தன.

டைட்டானிக் கப்பல் போல் மூழ்கியிருக்கலாம். கப்பலுக் குள் தண்ணீர் புகுந்தது. கேப்டன் இல்லை. ஆனால் நாங்கள் கப்பலை எடுத்துக்கொண்டு மற்றவர்களுடன் சேர்ந்து பயணத்தைத் தொடங்கி னோம்.

கடனை அடைக்க முடியாத நாட்டை நான் பொறுப்பேற்றேன். வங்குரோத்தான நாடு, அந்நியச் செலாவணி இல்லாத நாடு. எங்கள் பிணைமுறிப் பத்திரதாரர்கள் எங்களை நிராகரித்தனர். ஆனால் கடந்த இரண்டு வருடங்களில் அந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்து எமது கடன் நிலைபேற்றுத் தன்மையையும் வங்குரோத்து நிலை யையும் நீக்குவதன் மூலம் அபிவி ருத்தியடைவதற்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்:...

ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நீர்கொழும்பில் (17) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு சஜித் பிரேம தாச மேலும் கூறுகையில், தற்போது நாட்டு மக்கள் தெளிவான தீர்மா னமொன்றை எடுத்திருப்பார்கள். ரணில் விக்கிரமசிங்கவும் அநுரகுமார திசாநாயக்கவும் அரசியல் ஒப்பந் தம் ஒன்றின் ஊடாக ஒரு பக்கமாக இருக்கின்றார்கள். ஐக்கிய மக்கள் சக்திதான் பொதுமக்களை பிரதிநி தித்துவப்படுத்தி இருக்கின்றது. டீல் செய்கின்ற அரசியல் சூழ்ச்சிக்காரர் களின் பக்கம் செல்வதா? அல்லது வெளிப்படையாக நின்று போராடி பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற் றுக்கொடுப்பவர்களின் பக்கம் இருப் பதா? என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

### தேர்தல் பிரசாரம் நேற்று...

ஆதரவாளர்கள் பொதுக்கூட்டங் கள் அல்லது கூட்டங்களை நடத்த அல்லது பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட தடை விதிக்கப்பட்டுள்ள தாக தேர்தல்கள் ஆணைக்குழு அறி வித்துள்ளது.

நேற்று (18) நள்ளிரவு 12 மணிக்கு பின்னர் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு ஐம்பதாயிரம் ரூபா அபராதம் மற்றும் ஒரு மாதத் திற்கு குறையாத சிறை அல்லது இரண்டும் விதிக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

### புலமைப்பரிசில் பரீட்சையை...

இதனைத் தொடர்ந்து இந்த தரப்பின் குழுவொன்றுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போதே இந்த விடயத்தை தெரிவித்ததாக வும் ஆணையாளர் கூறினார்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னர் மூன்று கேள்விகள் மாத்தி ரமே வெளியாகியதாக வந்திருந்த குழுவினர் கூறியதாகவும், ஆனால் சில ஆசிரியர்களினால் அதிக கேள் விகள் குறித்து பேசப்பட்டதாகவும் தகவல் உள்ளதாகவும் தெரிவித்த னர்


பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்த தகவல் கள் சரியானவை என மூன்று தினங் களில் நிருபிக்கப்பட்டால் அது தொடர்பில் பரீட்சைத் திணைக்க ளம் கடும் நடவடிக்கை மேற்கொள் ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

### மலையக மக்களுக்கு சஜித்...

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி யின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச, மலையக மக்களுக்கு நிறைவேற்ற முடியாத பொய் வாக் குறுதிகளையே வழங்குகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் வேலுகு மார் தெரிவித்துள்ளார். இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வேலைத்திட்டம் தேவை. அதன்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 'அஸ்வசும' நிவாரண கொடுப்பனவை மேலும் மலையக பகுதிகளுக்கு விரிவுபடுத்துவதற்கு முன்வந்துள்ளார்.

ஆனால், சஜித் பிரேமதாச உடன டியாக நிறைவேற்ற முடியாத சிறு தோட்ட உடமை பற்றி பேசுகின் றார். அதனை செய்வதற்குரிய ஒரு வேலைத்திட்டமும் அவர்களிடம் இல்லை. மாறாக 49 அம்ச ஒப்பந் தம் என்கின்றார்கள். இவை எல்லாம் தேர்தல் கால மூடி மறைப்புகள். அதனை விடுத்து இன்று எதிர்நோக் கும் பொருளாதார பிரச்சினைக்கான தீர்வை சொல்ல வேண்டும். குறைந்த பட்சம் தற்போதுள்ள சம்பள அதிக ரிப்பு குறைவென்கின்றார்கள், அவ் வாறாயின் அவர்கள் வழங்க முற்ப டும் சம்பள அளவை கூற வேண்டும். அதனை எவ்வாறு வழங்கப்போகின் றார்கள் என்ற திட்டத்தையும் கூற வேண்டும். ஆனால் ஒருபோதும் அது பற்றி பேச மாட்டார்கள். ஏனெனில் அவர்களிடம் வேலைத்திட்டம் ஒன்று இல்லை என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

### சிரேஷ்ட ஊடகவியலாளர் Leon Berenger காலமானார்



லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு உட் பட்ட எமது சகோதர பத்திரிகையான Sunday Observer யின் சிரேஷ்ட ஊட கவியலாளர் Leon Berenger நேற்று முன்தினம் (17) காலமானார். இறக் கும் போது அவருக்கு 63 வயது. அன் னாரது பூதவுடல் கந்தானையிலுள்ள மலர் சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட் டுள்ளது.

பூதவுடல் கப்புவத்த பொது மயானத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லடக்கம் செய்யப் படவுள்ளதாக குடும்ப உறுப்பினர் கள் அறிவித்துள்ளனர்.

### IT மூலம் 05 பில். டொலர்...

உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட் டுள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அனுரகு மார திஸாநாயக்க இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

### IGPக்கு எதிரான தடை உத்தரவு...

நிராகரித்தது. திரு. யசந்த கோதாகொட, திரு அச்சல வெங்கப் புலி மற்றும் திரு. மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்ட போதே இவ்வாறு தீர்மானிக் கப்பட்டது.

### வாக்காளர் அட்டைகளை...

வழி பதிவு மூலம் பார்வையிட முடியும். வாக்களிப்பதற்கான உத்தி யோகபூர்வ வாக்காளர் அட்டையை இதுவரை பெறாத வாக்காளர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி குறிப்பிட்ட வாக்களிப்பு நிலையத் தில் வாக்களிக்கலாம்.

தபால் மூலம் வாக்காளர் அட் டைகளை இதுவரை பெறாத வாக் காளர்கள் சம்பந்தப்பட்ட தபால் நிலையங்களில் அவை தொடர்பான விபரங்களை கண்டறியுமாறும் தேர் தல்கள் ஆணைக்குழு அறிவுறுத் தியுள்ளது.

### பெண்கள் பெற்ற கடன்களின்...

கண்டியில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தின் மைய மானது, இலங்கையின் பெண்களை தொழில் முனைவோர் மூலம் வலு வூட்டுவது ஆகும்.

அதற்காக, உங்களுக்குத் தேவையான மூலதனத்தை அரசாங் கம் வழங்கும் விதம், உங்களுக்குத் தேவையான பலத்தை அது எவ்வாறு வழங்குவதுடன், சில காரணங்க ளால் தொழில் முனைவோர் ஆரம் பித்து அது நஷ்டமடைந்தால் அதை முன்னெடுத்து செல்ல அரசு உதவும் வழியை குறிப்பிட்டுள்ளோம்.

அதுமட்டுமல்லாது இன்று நுண்நிதி கடன்களால் இன்னல்களுக்குள்ளா கும் இலங்கைப் பெண்களை மீட்பதற் காக நுண்கடன் மீது சுமத்தப்பட்டுள்ள நியாயமற்ற கடன் வட்டியை முற்றாக நிறுத்துவதற்கு முன்மொழிந்துள் ளோம்.

முன்மொழியப்பட்ட திட்டத்தை எவ்வாறு செய்வது என்பதும் உள்ளது என்றார்.

இதேவேளை, 13வது அரசியல மைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி யின் முயற்சிகளை தோற்கடிக்க நடவ டிக்கை எடுப்பதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

# இன்றைய பலன்கள்

## (19.09.2024)

**கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா**
**(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)**





**மேஷம்:**
இதுநாள் வரை பலமுறை பஞ்சாயத்து செய்தும் முடி வுக்கு வராத பாக பிரிவினை இப்போது முடிவடையும்.

**ரிஷபம் :**
புதிய தொழில் ஒன்றை தொடங்க முன் வருவீர்கள். காரி யங்கள் கடைசி நேரத்தில் கை கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மிதுனம்:**
நில புலன்கள் சம்பந்தப்பட்ட வகையில் லாபம் கிடைக் கும். கூடுதல் கவனத்துடன் செயல்பட வேண்டும்.

**கடகம்:**
இடம் பூமி வாங்குவது கட்டிய வீட்டை பழுது பார்ப் பது கல்யாண காரியங்களை முடிப்பது போன்று சுப காரி யங்களை மேற்கொள்ளுங்கள்.

**சிம்மம்:**
கொடுக்கல் வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். எந்த ஒரு காரியத்தையும் நினைத்த மாத்திரத்தில் செய்து முடிப் பீர்கள்.

**கன்னி:**
அழியாத புகழுக்கு அஸ்திவாரம் அமைத்துக் கொடுக் கும் விதத்தில் நல்ல காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள்.

**துலாம்:**
விரயங்களும் பயணங்களும் அதிகரிக்கும். வெளிநாடு அல்லது வெளி மாநிலம் சென்று பணிபுரிய அழைப்புகள் வரலாம்.

**விருச்சிகம்:**
லாபம் குவியும் தொழில் வெற்றி நடை போடும். செல் வாக்கு உயரும். உடன்பிறப்புகளும் உடன் இருப்பவர்க ளும் உங்கள் ஆலோசனைகளை கேட்டு நடப்பார்.

**தனுசு:**
தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தங்கு தடைகள் தானாக விலகி தன வரவு பெருகும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.

**மகரம்:**
பாகப்பிரிவினையில் எதிர்பார்த்த பங்கு கிடைத்து மகிழ்ச்சி அடைவீர்கள். தொழிலை விரிவு செய்ய பெற் றோரின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:**
புதியவர்களை நம்பி செய்த காரியம் அறைகுறையாக நிற்கும். பிள்ளைகளின் வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சியில் தாமதம் ஏற்படும்.

**மீனம்:**
வரன்கள் வாசல் வரை வந்து கைநழுவி போகிறது என்ற மனவாட்டம் மறையும். தங்களுக்கோ தங்களை சார்ந்த வர்களுக்கோ தங்கள் பிள்ளைகளுக்கோ திருமணம் கூடி வரும்.

### உலகளாவிய சமுத்திர... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

'உலகளாவிய சமுத்திர உடன்ப டிக்கை 2023 செப்டம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுக் கூட்டத்தில் கையொப்பமிடுவதற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் 92 நாடுகள் கையொப்பமிட்டுள்ளதுடன், 8 நாடுகள் அதனை அங்கீகரித்துமுள் ளது.

இதில், இலங்கையும் ஒரு அங்க மாக சேரும் வரையில் கையெழுத்திட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்' என்றுள்ளார்.

### ஆட்டோ –பவுசர் மோதி ... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

பொலிஸார் குறிப்பிட்டனர். கிளி நொச்சி உதயநகர் கிழக்கு பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஏழு வயது சிறுமியொருவரே விபத்தில் உயிரி ழந்தார் என்பது தெரியவந்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய பவுசர் வண்டியின் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை மதவாச்சி பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

### அமெரிக்க டொலரின்...

பெறுமதி 405.73 ஆகவும் பதிவாகி யுள்ளது. யூரோ (Euro) ஒன்றின் கொள் முதல் பெறுமதி 327.81 ஆகவும் விற் பனைப் பெறுமதி 343.19ஆகவும் பதிவாகியுள்ளது.

# தொடர்ந்து உயரும் அமெரிக்க டொலரின் பெறுமதி

கனேடிய டொலர் (Canadian dollar) ஒன்றின் கொள்முதல் பெறுமதி 217.49 ஆகவும் விற்பனைப் பெறுமதி 227.30 ஆகவும் பதிவாகி யுள்ளது. அவுஸ்திரேலிய டொலர் (Australian Dollar) ஒன்றின் கொள்மு தல் பெறுமதி 199.41 ஆகவும் விற்ப னைப் பெறுமதி 207.21 ஆகவும் பதி வாகியுள்ளது.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள் முதல் பெறுமதி 224.48 ஆகவும் விற் பனைப் பெறுமதி 209.58 ஆகவும் பதிவாகியுள்ளது.

### நிறைவேற்ற முடியாத வாக்குறுதி...

போதே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார். "சிலர் பல்வேறு விடயங் களைக் குறைப்பதாக கூறுகிறார் கள். அரசியல் வாக்குறுதிகள் பற்றி மக்களுக்கு தெரியும். இதுபோன்ற விசித்திரக் கதைகளை மக்கள் கேட்டி ருக்கிறார்கள். அரசியல் மேடையில் கோமாளியை தேடும் தேர்தல் அல்ல இது. எங்களின் தேர்தல் அறிக்கையில் முடியாதது எதுவுமில்லை" என்றார்.

### வாக்காளர் அட்டைகள்...

அதன்படி, ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்தைச் சமர்ப்பித்து காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரையான காலப்பகு தியில் வாக்காளர் அட்டையைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 21ஆம் திகதி வரை அஞ்சல் நிலையங்களில் வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தகுதி பெற்ற அனைவருக்கும், ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்ப தற்கான வாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அதேநேரம், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாத வாக் காளர்கள், வாக்களிப்பு நிலையத்தில் செல்லுபடியாகும் அடையாள அட் டையைக் காண்பித்தும் வாக்களிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

### யாழ். மீனவர்கள் மூவர்...

கைது செய்தனர். இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மண்ட பத்தில் உள்ள கடலோர காவல்படை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப் பாணம் கொழும்புத்துறை நெடுங்கு ளத்தைச் சேர்ந்த ஆர்.நிரோஷன் (34), யாழ்ப்பாணம் உடுத்துறை, தாளைய டியைச் சேர்ந்த டி.பால ரமேஷ் (37) மற்றும் அதே பகுதியைச் சேர்ந்த பி.பு லைகுமார் (44) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்பில் கூட்டு விசாரணை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மக்கள் என்னை நிராகரித்தாலும் என்னால் மக்களை நிராகரிக்க முடியாது

## எதிர்வரும் 22 ஆம் திகதி புதிய பயணத்தை ஆரம்பிப்போம் மாத்தறையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

**மாத்தறையிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் நாம் அனைவரும் ஒன்றிணைந்து புதிய பயணத்தை ஆரம்பிப்போம். நாட்டு மக்கள் அதற்கு நம்பிக்கையுடன் தயாராக வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று மாத்தறை உயன்வத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இங்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி;

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் எமக்கு புதிய அனுபவம் கிடைத்தது. நாட்டில் நிலவிய மிக மோசமான நெருக்கடி நிலையில் நாட்டின் தலைவரும் நெருக்கடிக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் நாட்டை விட்டே போய் விட்டார்.

எமது வாழ்வில் சவால்கள் உள்ளன. ஒரு காலத்தில் பெரிய பிரசித்தமாகும் பெயர் பின்னர் மக்களால் மறக்கடிக்கப்பட்டு விடும். சில சந்தர்ப்பங்களில் அரசியல் ரீதியான இலாபத்திற்கும் பின்னர் அரசியல் ரீதியான நட்டத்திற்கும் முகம் கொடுக்க நேரும். அந்த வகையில் மக்கள் என்னை நிராகரித்தாலும் என்னால் மக்களை நிராகரிக்க முடியாது. அதனால் தான் நான் மக்களுக்காக சவால்களை பொறுப்பேற்றேன்.

நாடு என்ற கப்பலில் ஓட்டை விழுந்து நீரில் மூழ்கும் வேளை அது. கப்பலில் மாலுமியும் இல்லை அவ்வாறான ஒரு தருணத்திலேயே நான் அந்தக் கப்பலை பாரமெடுத்தேன். ஏனையோர் இது வங்குரோத்து நாடு எனக் கூறி அதனை பாரமெடுக்காமல் நிராகரித்து விட்டனர்.

நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக நான் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினேன். உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்தி கடன் மறு சீரமைப்புக்கு இணக்கத்தைப் பெற்றுக் கொண்டோம். அவர்கள் என்மீது நம்பிக்கை வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்கினர். 18 நாடுகளுடன் அதற்கான இணக்கப்பாட்டை மேற்கொண்டோம். அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

கஷ்டமான தீர்மானங்களை எடுக்க நேர்ந்தது. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக வரி அதிகரிப்பை மேற்கொள்ள நேர்ந்தது.வரிசை யுகம் ஆரம்பித்து மக்கள் எரிபொருள்,சமையல் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் காத்துக் கிடந்தனர். ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினைகள் உருவாகின.

நாம் நாட்டுக்காக சிந்தித்து மேற்கொண்ட நடவடிக்கைகளினால் சுமார் ஆறு மாத காலங்களில் அந்த நிலையிலிருந்து எம்மால் மீண்டுவர முடிந்தது. நம் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்தோம் அஸ்வெசும திட்டத்தை ஆரம்பித்து சுமார் 20 இலட்சம் மக்களுக்கு அதன் மூலம் நிவாரண கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

நாட்டில் படிப்படியாக பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.மக்களின் இயல்பு வாழ்க்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அடுத்த வருடத்தில் மேலும் நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும்.

இத்தகைய சூழ்நிலையில் நாம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த நடவடிக்கை எடுப்பதா? அல்லது மீண்டும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இருந்த நெருக்கடி நிலைக்கு செல்வதா? என்பது தொடர்பில் நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை அதிகரிப்பதே எமது எதிர்கால திட்டமாகும். அத்துடன் விவசாயத் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளையும் முன்னேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.







தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான அனுரகுமார திசாநாயக்க சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை மாற்றுவதாக தெரிவித்து வருகிறார் அவ்வாறு இடம்பெற்றால். அந்த உடன்படிக்கை இரத்தாகி மீண்டும் புதிய உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு பல வருடங்கள் எடுக்கலாம். இந்த நிலையில் நடைமுறையிலுள்ள உடன்படிக்கையை கைவிட்டு புதிய உடன்படிக்கைக்கு செல்வதா என மக்கள் தீர்மானிக்க வேண்டும். அதற்கு நாட்டு மக்கள் விருப்பமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

அந்த உடன்படிக்கை மீறப்பட்டால் சர்வதேசம் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கை இழக்கப்படும்.

நாம் எமக்குத் தெரிந்த பாதையில் பயணிப்பதா அல்லது தெரியாத பாதையில் பயணிப்பதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

அனுரகுமார திசாநாயக்க, சஜித் பிரேமதாச போன்றோர் அவர்களிடம் தீர்வு உள்ளது என தற்போது தெரிவிக்கின்றனர். அவ்வாறு அவர்களிடம் தீர்வு இருந்தால் ஏன் நாடு நெருக்கடி நிலையில் இருந்த போது நாட்டைப் பொறுப்பேற்காமல் ஓட வேண்டும். அனுரகுமார திசாநாயக்க அப்போது மௌனமாக இருந்துவிட்டு இப்போது ஜனாதிபதியாக விரும்புகின்றார்.

இந்த நாட்டுக்கு யாரால் தலைமைத்துவம் வழங்க முடியும்? யாரால் இந்த நாட்டை முன்னேற்றி மக்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியும்? என்பது தொடர்பில் மக்கள் சிந்திக்க வேண்டும்.

எமது வாழ்க்கையில் நாம் முன்னேறுவதா? அல்லது எப்போதும் பிச்சைக்காரர்களாகவே இருப்பதா? மக்கள் எல்லாக் காலத்திலும் அஸ்வெசும பெறும் மக்களாக இருக்க முடியாது. அவர்களது வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும்.

நாம் நம்பிக்கையுடன் பயணத்தை முன்னெடுப்போம் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் புதிய பயணத்தை தொடர்வதற்கு நாட்டு மக்கள் தயாராக வேண்டும். நாமும் எமது நாடும் பெருமை மிக்கதாக திகழ வேண்டும்.

நாட்டின் எதிர்காலத்தை சுபீட்சமயமாக்குவதற்கும் மக்களின் எதிர்காலத்தை சிறப்பாக்குவதற்கும் இம்முறை தேர்தலில் கேஸ் சிலிண்டருக்கு வாக்களித்து எனக்கு ஆதரவு வழங்குங்கள். நாம் புதிய பாதையில் பயணிப்போம் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

# மலைச்சாரல்

## உயிரிழந்த யுவதியின் உறுப்புகள் தானம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மூளைச்சாவால் உயிரிழந்த 21 வயதான சுகன்யா வீரகோன் என்ற யுவதி, தனது உறுப்புக்களை உயிர் வாழ்கின்றவர்களுக்கு வழங்கியுள்ள சம்பவமொன்று, கலிகமுவ மகபாகே பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

தலைவலி காரணமாக கேகாலை போதனா வைத்தியசாலையில், கடந்த 9 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட குறித்த யுவதி, சிகிச்சை பலனின்றி கடந்த 13 ஆம் திகதி உயிரிழந்துள்ளார். எனினும்,இந்த யுவதியின் இரண்டு கண்கள், இரண்டு சிறுநீரகங்கள், கல்லீரல் போன்ற உடல் உறுப்புக்களை, உயிருடன் குறைபாடு உள்ளவர்களுக்கு தானம் செய்ய, யுவதியின் பெற்றோர் விரும்பியுள்ளனர்.

அதன்படி, கல்லீரல் மற்றும் ஒரு சிறுநீரகம் என்பன நோயாளர்களுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் சந்தன வீரகோன் நேற்று முன்தினம் (17) தெரிவித்தார்.

## மிஸ் இன்டர்நேஷனல் – 2024 முதலிடம் வென்ற திலினி



இந்தோனேசியாவில் நடைபெற்ற மிஸ் இன்டர்நேஷனல் 2024 சர்வதேச அழகிப் போட்டியில் கலந்துகொண்டு முதலிடத்தைப் பிடித்த திலினி குமாரி நேற்று முன்தினம் (17) நாட்டை வந்தடைந்தார்.

உலகின் 20 நாடுகளைச் சேர்ந்த அழகுராணிகள் பங்கேற்ற இப் போட்டி, இந்தோனேசியாவின் பாலி தீவில் கடந்த 9ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில், கண்டி, பிரிமத்தலாவ பிரதேசத்தை சேர்ந்த திலினி குமாரி முதலிடத்தை தனதாக்கி கொண்டார். இவர் நடிகையாகவும், அறிவிப்பாளராகவும் பல துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### செப்டெம்பர் 21 எமது வெற்றி உறுதி

## மலையகத்தை இனி காங்கிரஸே ஆளும் வேறு எவரும் இங்கு இருக்க முடியாது

### அமைச்சர் ஜீவன் தொண்டமான்



**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

சவாலை ஏற்காது தப்பியோடிய தலைவர்களுக்கு மத்தியில், சவாலை ஏற்று மக்களை பாதுகாத்த தலைவர் பக்கம் நின்று, செப்டெம்பர் 21 ஆம் திகதி அவரை நாம் வெற்றிபெற வைப்போம் என இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், சுயேட்சை வேட்பாளரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, பூண்டுலோயா நகர மைதானத்தில் நேற்று முன்தினம் (17)நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் இதனை தெரிவித்த அவர், மலையகத்தை இனி காங்கிரஸ்தான் ஆளும், வேறு எவரும் இங்கு இருக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது தந்தை இறந்திருந்தாலும், மக்கள் உறவுகளை எனக்கு தந்துவிட்டே சென்றுள்ளார். அந்த மக்கள் பலம் எனக்கு போதும்.

தோட்டங்களை கிராமங்களாக்கும் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும். காணி உரிமைதான் பிரதான பிரச்சினை. அதனை வென்றெடுத்துவிட்டால் அனைவரும் வீடுகளை அமைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் ஒரே வருடத்தில் வீட்டுப் பிரச்சினையை தீர்க்க முடியாது. ஆனால் காணி உரிமை கிடைத்துவிட்டால் நிச்சயம் மாற்றம் வரும்.

சலுகைகள்மூலம் அல்ல கல்வி உரிமையை வழங்குவதன்மூலம் மலையகத்தில் நாம் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம். சிலர் மலையகத்தின் பெருமையை பற்றி பேசாமல், வறுமையை பற்றி மட்டுமே பேசுகின்றனர். எமக்கும் அடையாளம் உள்ளது. அந்த அடையாளத்தை நாம் நிச்சயம் பாதுகாப்போம். நாம் நன்றி உணர்வு உள்ள சமூகம் என்ற அடிப்படையில் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவோம்.

ஜெயிக்கிற பக்கத்தில் நிற்பது வீரம் கிடையாது. நிற்கும் பக்கத்தை ஜெயிக்க வைப்பதே உண்மையான வீரம். அதனை நாம் செய்துகாட்டுவோம் என அவர் தெரிவித்தார்.

### மலையக பெருந்தோட்ட மக்கள்

## தேசிய இனப்பிரிவுக்குள் உள்வாங்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போப்பகே

**பொகவந்தலாவை நிருபர்**



மலையக பெருந்தோட்ட மக்கள் தேசிய இனப்பிரிவுக்குள் உள்வாங்கப்பட வேண்டுமெனவும் அப்போதே இம் மக்களின் சுதந்திரத்துக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியுமெனவும் ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போப்பகே தெரிவித்தார்.

இராகலையில் நேற்று (18) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த அவர், மலையக மக்களுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி வேட்பாளர் நுவான் போப்பகே,

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பிரதான பிரச்சினையாக நாம் தெரிவு செய்துள்ளோம்.

200 வருடங்களாக காணப்படுகின்ற பிரச்சினைக்கு இன்னும் தீர்வினை பெற்றுக்கொடுக்க முடியாதமைக்கு காரணம் என்ன? வீட்டுரிமை மற்றும் ஆயிரம் ரூபாய் சம்பளத்துக்கு வருடக்கணக்கில் போராடிய சமூகமாகவே மலையக சமூகம் காணப்படுகிறது. மலையக அரசியல் தலைவர்கள் தூசி அளவுக்குக்கூட இச் சமூகத்தை கண்டுகொள்வதில்லை.

மலையக தலைவர்கள், மக்களின் தேவைக்கேற்றவாறு செயற்படுவதில்லை. தலைவர்களுக்கு ஏற்றாற்போல் மக்களை தன்வசப்படுத்தி கொள்கின்றார்கள்.

## அரசியலில் முதிர்ச்சியும் அனுபவமுள்ள தலைவரையே தேர்ந்தெடுக்கவேண்டும்

### இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ்

**(ஊவா சுழற்சி நிருபர்)**



நாடு பல்வேறுபட்ட நெருக்கடிகளை சந்தித்தபோது, அதனை சாதுரியமாக மீட்டெடுத்த பெருமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். எனவே அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வது நம் அனைவரினதும் கடமையாகும் என, தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

கடந்த 16 ஆம் திகதி ஹப்புதளையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர்,

அரசியலில் முதிர்ச்சியும் அனுபவமுள்ள ஓர் தலைவரையே நாம் மீண்டும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தூர நோக்குடைய சிந்தனையில் தோட்டத் தொழிலாளிகளின் வீட்டு உரிமை, காணி உரிமை மற்றும் தோட்டங்களை கிராமங்களாக்கும் திட்டம் என பல நல்ல பயனளிக்கும் திட்டங்கள் உள்ளன. அதனால்தான் நாம் அவருடன் இணைந்து பணியாற்றுகிறோம்.

பதுளை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு எனக்கு பல மில்லியன் ரூபாக்களை ஜனாதிபதி ஒதுக்கி தந்துள்ளார்.

இந்த நிதியினை, எவ்வித வேறுபாடின்றி இம் மாவட்டத்தில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள கிறிஸ்தவ மக்களின் மத ஸ்தாபனங்களுக்கு ஒதுக்கியுள்ளேன்.

எனவே அரசியல் அனுபவமும் முதிர்ச்சியுமுடைய ஒருவர்தான் இந் நாட்டின் ஜனாதிபதியாக வர வேண்டும். புதிய ஒருவரால் இந் நாட்டை நிர்வகிக்க முடியாது. எனவே இன்னும் ஓர் இரு நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவது நிச்சயம் என அவர் தெரிவித்தார்.






# திருகோணமலை தேர்தல் பாதுகாப்புக்காக 10,000 பொலிஸார் கடமை

## ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி - மாவட்ட அரசாங்க அதிபர்

**(கிண்ணியா மத்திய நிருபர்)**

திருகோணமலை மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் பணிக்காக 10000 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான சாமிந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக நேற்று (18) மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அத்துடன் தேர்தல் தினத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைமைகள் தொடர்பாக வேட்பாளர்களின் முகவர்கள், பொலிசார், தேர்தல் கண்காணிப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட ஏனைய தரப்புக்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.



திருகோணமலை மாவட்டத்தில் 315,925 வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில் மூதூர் தொகுதியில் இருந்து 123,363வாக்காளர்களும்,

திருகோணமலை தேர்தல் தொகுதியில் இருந்து 105,005 வாக்காளர்களும், சேருவில தொகுதியில் இருந்து 87,557 வாக்காளர்களும் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், திருகோணமலை மாவட்டத்தில் 318 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் 34 வாக்கெண்ணும் நிலையங்களும், இதில் அஞ்சல் வாக்கெண்ணும் பணிக்காக 10 நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதோடு, வாக்கெண்ணும் மத்திய நிலையமாக திருகோணமலை விபுலானந்தா கல்லூரி செயற்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வாக்கெண்ணும் பணிகளுக்காக 1632 உத்தியோகத்தர்களும், வாக்களிப்பு நிலையங்களுக்கு 1908 உத்தியோகத்தர்களும் பயன்படுத்தப்படவுள்ளதாக அவர், மேலும் தெரிவித்தார்.

பொத்துவில் சுகாதார பிரிவில்

# டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்கள் அடையாளம்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலைகளில் புகை விசுறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி அலுவலக மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்.எம்.எஸ்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார்.

பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப்.எம். உவைஸின் ஆலோசனைக்கமைய முதற் கட்டமாக பாடசாலைகளில் டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக புகை விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.





அரச, தனியார் நிறுவனங்கள், மதத்தலங்கள் உட்பட டெங்கு நுளம்பு பரவும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் புகை விசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொது இடங்களில் காணப்படும் தென்னம் குறும்பை, யோகட் கப், வெற்றுப் போத்தல்கள், வெற்று டயர்கள், பொலித்தீன் கழிவுகள் போன்றவற்றை முறையாக அகற்ற வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருப்பவர்கள் அவற்றை துப்புரவு செய்யுமாறும் அதனை மீறுபவர்களுக்கெதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

பொது மக்கள் ஒன்று கூடும் இடங்கள், பாடசாலைகள், மதத்தலங்கள், அரச,தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் வார நாட்களில் சிரமதான பணிகளை முன்னெடுக்குமாறு கேட்டுள்ளார்.

## அநுரவுக்கு ஆதரவு தெரிவித்து சாய்ந்தமருதில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுப்பு



**(சாய்ந்தமருது விசேட நிருபர்)**

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவுக்கு ஆதரவு தெரிவித்து பிரசார நடவடிக்கைகள் சாய்ந்தமருதில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக அக்கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் ஏ. ஆதம்பாவா தலைமையில் சாய்ந்தமருது பிரதேசத்தில் பொது இடங்கள், வீதிகள் பலவற்றிலும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் விநியோகிக்கப்பட்டு, அநுரவுக்கு ஆதரவளிக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

இதில் தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

# ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவித்து வாழைச்சேனையில் பேரணி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பேரணி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் வாழைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படம்.

# காரைதீவில் மீண்டும் ஈ.பி.டி.பி அரசியல் அலுவலகத்தை திறப்போம்

## அமைச்சர் டக்ளஸ்

ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் காரைதீவு கலாசார நிலையத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1990 ஆண்டு ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பகுதியில் ஈ.பி.டி.பியின் அரசியல் அலுவலகம் அமைக்கப்பட்டு இப்பகுதி மக்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து வந்தோம். துரதிஷ்டவசமாக இவ்வலுவலகம் பின்னர் மூடப்பட்டது.

அதுமாத்திரமின்றி அந்த காலப் பகுதியில் இருந்த பிரபாகரனின் இயக்கத்தை சேர்ந்தவர்களால் ஈ.பி.டி.பி உறுப்பினர்களை கொலை செய்யப்பட்டமையால் இவ்வலுவலகத்தை மூட வேண்டி ஏற்பட்டது. ஆனால் மிக விரைவில் இம்மாவட்டத்துக்குரிய அலுவலகத்தை திறக்கவுள்ளோம்.

பிரதான வேட்பாளர்களாக மூவர் களத்தில் இருக்கின்றார்கள்.

இம்மூவரில் எமது ஈ.பி.டி.பி கட்சி விரும்புகின்ற ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார்.





நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்து செல்லக் கூடிய ஆற்றல் அறிவு ரணில் விக்கிரமசிங்கவிடம் தான் இருக்கின்றது. அவர் கடந்த 2 வருடங்களில் தன்னால் நாட்டை கட்டியெழுப்ப முடியும் என நிரூபித்திருக்கின்றார்.

அவர் கடந்த காலங்களில் நாட்டை பொறுப்பேற்கும் போது விலையேற்றங்கள் பொருள் தட்டுப்பாடு, வரிசை யுகம் என்பன இருந்தன.தெற்கில் கூட சில வன்முறைகள் தலைவிரித்தாடியது.

எனினும் கடந்த 2 வருடங்களில் எல்லாவற்றையும் முடிவிற்கு கொண்டு வந்து நாட்டை முன்னோக்கி செல்கின்ற வழிகளை ஏற்படுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வசதிகளை பெறக்கூடாது என தென்னிலங்கை பகுதியிலுள்ள சில தரப்பினர்கள் கூறிய போதிலும் ரணில் விக்கிரமசிங்க தர்க்க ரீதியாக பதிலளித்து அக்கடன்களை பெற்று நாட்டை அபிவிருத்தி செய்தார்.

ஆனால் நாட்டை புதியவர்கள் பொறுப்பேற்கும் போது நாங்கள் மீண்டும் பூச்சியத்திலிருந்து தான் தொடங்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**(பாறுக் ஷிஹான்)**

# இந்திய துணை தூதர அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் இடையே சந்திப்பு

**(தம்பலகாமம் குறூப் நிருபர்)**

யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைக்கான இந்திய துணை தூதர அதிகாரிகள், திருகோணமலையிலுள்ள ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் திருகோணமலையிலுள்ள தனியார் சுற்றுலா ஹோட்டலொன்றில் நடைபெற்றது.

இதில் யாழ்.துணை தூதுவர் ஸ்ரீ சாய் முரளீஸ் மற்றும் தூதரக அதிகாரி நாகராஜன் ராம சுவாமி ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் தற்போதைய தேர்தல் களநிலவரம் தொடர்பிலும் இலங்கை, இந்தியா உறவு தொடர்பிலும் நீண்டநேரமாக பிரதேச ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.



நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் வடகிழக்கு மக்களின் தாக்கம் எவ்வாறு செல்வாக்கு செலுத்தப்போகின்றது? சிறுபான்மை இன கட்சிகளின் மூலமாக களமிறக்கப்பட்டுள்ள தமிழ் பொது வேட்பாளர் எவ்வாறான தாக்ககங்களை செலுத்தப் போகிறார் என்பது பற்றியும், இது சிறுபான்மை சமூகத்துக்கு சாதகமானதா? பாதகமானதா? போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. இலங்கை இந்திய தொடர்பில் அரசியல் ரீதியான உறவு சுற்றுலாத்துறை அபிவிருத்தி, ஊடகவியலாளர்களுக்கான எதிர்கால பயிற்சிகளை வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன் தமிழ் மக்களுடைய சமூக பொருளாதார பிரச்சினைகள் இலங்கை தமிழரசு கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பிலும் கிழக்கு மாகாண அபிவிருத்திக்கு இந்தியாவின் பங்களிப்பு தொடர்பிலும் மேலும் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

# தேசிய அரசியல் நீரோட்டத்தில் பயணிப்பதன் மூலமே முஸ்லிம்களின் உரிமைகளை வெற்றி கொள்ள முடியும்

## ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஜெமீல்

**(சாய்ந்தமருது விசேட நிருபர்)**



முஸ்லிம் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள போலித் தலைமைகளை புறமொதுக்கி விட்டு தேசிய அரசியல் நீரோட்டத்தில் பயணிப்பதன் மூலமே முஸ்லிம்கள் தமது உரிமைகளையும் அபிலாஷைகளையும் வென்றெடுக்க முடியும் என ஜனாதிபதியின் கல்முனைத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

கல்முனைத் தொகுதிக்கான தேர்தல் ஒருங்கிணைப்புக் காரியாலயத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமது சுயநல அரசியலுக்காகவே இரண்டு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்களும் சமூக நலன் கருதிய கோரிக்கைகளை முன்வைக்காமல், நிபந்தனை எதுவுமின்றி சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றனர். இதனால் முஸ்லிம் சமூகத்திற்கோ நாட்டுக்கோ எவ்வித நன்மையுமில்லை.

இவர்களின் பிடியிலிருந்து சமூகத்தை பாதுகாப்பதற்கு இளைஞர்கள் எம்முடன் இணைந்து தேசிய அரசியலில் பயணிக்க முன்வர வேண்டும்.

இனவாதம் பேசி பேசி எமது சமூகத்தை இன்னுமின்னும் படுகுழியில் தள்ளுவதற்கு இடமளிக்கக் கூடாது. பேரினவாத சக்திகளிடமிருந்து முஸ்லிம் சமூகம் பாதுகாக்கப்பட வேண்டுமாயின் எமது இளைஞர்களை உசுப்பேற்றும் வகையில் இனவாதக் கருத்துகளை விதைக்கின்ற தலைமைகளை நாம் முதலில் நிராகரிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.



நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் குறித்து வாழைச்சேனை, கறுவாக்கேணி பிரதேச மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளர் மங்கள செனரத் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடலில் அமைச்சர் அலி சாஹிர் மௌலானா விஷேட அதிதியாகக் கலந்து கொண்டிருப்பதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.



## கல்முனை – அம்பாறை பிரதானத் வீதியில் வாகன விபத்து 14 வயது மாணவி உயிரிழப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கல்முனை அம்பாறை பிரதான வீதியில் மாவடிப்பள்ளி பெரிய பள்ளிவாசலுக்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் தரம் 9 இல் கல்வி பயிலும் சம்மாந்துறையைச் சேர்ந்த 14 வயதுடைய மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.

தனது தந்தையின் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிள் மீது தனியார் பஸ்ஸொன்று மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.விபத்து நடந்த இடத்திலிருந்து பஸ் சாரதி தப்பி ஓடியதாகவும் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாகவும் காரைதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்து சம்பந்தமாக காரைதீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொக்கட்டிச்சோலையில் தேரோட்டம்

**(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)**

கிழக்கில் வரலாற்று பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 04 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ மு.கு. சச்சிதானந்தக் குருக்கள் தலைமையில் இவ்வாலய உற்சவம் நடைபெற்று வருகிறது.

இங்கு எதிர்வரும் 22 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தேரோட்டப் பெருவிழா நடைபெறவுள்ளது. தேரோட்டத்தை காண்பதற்கு ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அன்று இரவு 8 மணிக்கு முனைக்காடு வீரபத்திர சுவாமி ஆலய முன்றலில் திருவேட்டை திருவிழா நடைபெற்று தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகம் நடைபெறும்.

எதிர்வரும் 23ஆம் திகதி அதிகாலை 5 மணி தொடக்கம் திருப்பொற்சுண்ணம், தீர்த்தம், யாக கும்பாபிஷேகம், பூசை முதலியன நடைபெற்று மாலை 6 மணிக்கு திருக்கல்யாணம், பொன்னூஞ்சல், கொடியிறக்கம் சந்தி விசர்ச்சனம், சண்டேஸ்வர உற்சவம், ஆசிர்வாதம், ஆசாரியோற்சவம் முதலியன நடைபெறவுள்ளன. 24 ஆம் திகதி காலை 7. 30 மணிக்கு ஏர் பூட்டு விழா நடைபெறவுள்ளது.

உற்சவ காலங்களில் இரவு வேளைகளில் கலை, பண்பாட்டு, இசை நிகழ்ச்சிகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள், மட்டக்களப்பு வழி நாட்டுக்கூத்துக்கள் என்பன நடைபெறும். ஆலய உற்சவ காலங்களில் பிரத்தியேக போக்குவரத்துக்கள், தனியார், இலங்கை போக்குவரத்து சபை பஸ் விசேட சேவைகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# நகர்வலம்



அரசியல் அனுபவம், சர்வதேச உறவுகள் விடயத்தில்

# ஜனாதிபதி ரணிலுக்கு நிகராக எந்த வேட்பாளர்களும் இல்லை

கம்பஹா கூட்டத்தில் அமைச்சர் பிரசன்ன





அரசியல் அனுபவத்திலும் சர்வதேச உறவுகளிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இணையான, 39 ஜனாதிபதி வேட்பாளர்களில் எவரும் இல்லை என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி மிகவும் முக்கியமானது என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

சுயேச்சைக்குழுவில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து மினுவாங்கொடை அலிஸ் பார்க் மைதானத்தில் (17) நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" ஜனாதிபதி பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளரும், நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க உட்பட கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளினால் இந்த பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்க;

எதிர்காலத்தில் நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தலைவர் நீங்கள் தான். அந்த நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. நாடு வீழ்ந்தபோது, இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு யார் தகுதியானவர் என்று மொட்டுக் கட்சியாகிய நாம் சிந்தித்தோம். அதன்படி இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு மிகவும் பொருத்தமானவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை நாம் அறிந்துகொண்டோம்.

அதனால் தான் கடவத்தை கூட்டத்தில் தேர்தலில் போட்டியிடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்புவிடுத்தேன். நீங்கள் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டீர்கள். உங்கள் கட்சியை கைவிட்டு, நாங்கள் அனைவரும் ஒன்றிணையக்கூடிய ஒரு அரசியல் மேடையை உருவாக்க கடுமையாக உழைத்ததற்கு நன்றி.

நான் எப்போதும் என் தந்தையின் கொள்கைகளை வைத்துத்தான் அரசியல் செய்கின்றேன். நான் எப்போதும் கட்சியை விட நாட்டைப் பற்றியே சிந்தித்தேன். அதனால்தான் உங்களை வெற்றி பெறச் செய்ய நாங்கள் முன்னோடியாக இருந்தோம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ, கம்பஹா மாவட்டத்தில் மூன்றரை இலட்சம் வாக்குகளால் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். இம்முறை கம்பஹா மாவட்டத்தில் இருந்து இன்னும் கூடுதலான வாக்குகளில் ஜனாதிபதி ரணிலை வெற்றிபெறச் செய்வோம். அரசியலில் உங்களுக்கு நிறைய அனுபவம் இருக்கிறது. சர்வதேச தொடர்புகள் பெரியவை. எனவே, இந்த 39 வேட்பாளர்களில் உங்களுக்கு இணையான வேட்பாளர் யாரும் இல்லை. இந்த ஜனாதிபதி தேர்தலில் நிச்சயம் ஜனாதிபதி ரணில் வெற்றி பெறுவார். அந்த வெற்றி நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் ஒரு தீர்க்கமான காரணியாகும். கம்பஹாவிலுள்ள நாங்கள் நாட்டை மீட்பதற்கான உங்களது வேலைத் திட்டத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறோம் என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

## குளத்துக்கு குளிக்கச்சென்ற இளைஞன் நீரில் மூழ்கி பலி!

மரண வீட்டுக்கு சென்றிருந்தவேளை சம்பவம்

**திறப்பனை தினகரன் அ .புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்**

அநுராதபுரம் விஜயபுர பிரதேசத்தில் இடம்பெற்ற மரண வீடொன்றுக்கு வருகை தந்த அகங்கம பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், மரணச்சடங்குகள் நிறைவுற்ற பின் அநுராதபுரம் நுவரவெவ குளத்துக்கு குளிக்கச் சென்று நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று அநுராதபுரத்தில் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்த நபர் அகங்கம பிரதேசத்தைச் சேர்ந்த சதீஷ் மகேஷ் (24) என்ற இளைஞராவார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; குறிப்பிட்ட இளைஞர் அநுராதபுரம் விஜயபுர பகுதியில் இடம்பெற்ற மரண வீட்டின் மரணச்சடங்கு வேலைகள் நிறைவுற்றதும், அங்கிருந்த சில இளைஞர்களுடன் சேர்ந்து குளிப்பதற்காக அநுராதபுரம் நுவரவெவ குளத்துக்குச் சென்றிருந்தபோதே நீரில் மூழ்கியதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறிப்பிட்ட இளைஞனை காணாத ஏனைய இளைஞர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் காணாமல் போன இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார்.

## அநுராதபுரம் மாவட்ட ஐ.ம.ச அமைப்பாளராக தேசமான்ய தாரிக் நியமனம்

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் ஹொரவபொத்தான தேர்தல் தொகுதிக்கு ஐக்கிய மக்கள் கூட்டணியின் பிரதான அமைப்பாளராக தொழிலதிபர் தேசமான்ய ஏ.ஆர்.எம் தாரிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனம் எதிர்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாசவினால் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பாக கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது அநுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரகுமான், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளதால் அந்த வெற்றிடத்துக்கு தொழிலதிபரும் சமூக சேவையாளருமான ஏ.ஆர்.எம். தாரிக் நியமிக்கப்பட்டுள்ளார்.

## தென் மாகாணத்தில் வாக்குகள் எண்ணும் பாடசாலைகளுக்கு விடுமுறை

**வெலிகம தினகரன் நிருபர்**

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு தென் மாகாணத்தில் வாக்குகள் எண்ணும் மத்திய நிலையங்களாக உபயோகிக்கப்படும் பாடசாலைகளுக்கு விசேட விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் காலி மாவட்டத்தில் சவுத் லண்ட் கல்லூரி, சென்ட் அலோசியஸ் கல்லூரி, எதிர்வரும் 22ம் திகதி வரை மூடப்பட்டுள்ளன. மாத்தறை மாவட்டத்தில் ராஹுல கல்லூரி 23ம் திகதி வரையும், ஸுஜாதா கல்லூரி 20ம் திகதி முதல் 22ம் திகதி வரையும் மாத்தறை மத்திய கல்லூரி 19ம் திகதி முதல் 21ம் திகதி வரையும் மூடப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஸுசீ தேசிய பாடசாலை 23 ம் திகதி வரை மூடப்பட்டுள்ளது.

# நாட்டு மக்களின் 50 வீத வாக்குகளை பெற்று சஜித் பிரேமதாச ஜனாதிபதியாவார்

தேர்தல் பிரசார கூட்டத்தில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

**பேருவளை விசேட நிருபர்**

ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணி வேட்பாளர் சஜித் பிரேமதாச 50% வீத வாக்குகளைப் பெற்று நிச்சயம் ஜனாதிபதியாக தெரிவாவார் என பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள அகலவத்த தொகுதியில், நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர் ஜகத் விதான தலைமையில் நடைபெற்ற இக்கூட்டங்களில் அவர் மேலும் கூறியதாவது,

ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களுள் சஜித் பிரேமதாஸ முதல் நிலையில் உள்ளார். மூவின மக்களின் பேராதரவுடன் வெற்றி பெற்று ஜனாதிபதி கதிரையில் அமர்வார்.



நாட்டு மக்கள் 21 ஆம் திகதி சிறந்த முடிவை எடுக்க வேண்டும். நாம் எடுக்கும் முடிவு இந்த நாட்டினதும், எதிர் காலச் சந்ததியினருக்குமான முடிவாகும். தவறான முடிவை எடுத்து பின்னர் கவலைப்படக்கூடாது. கடந்த தேர்தல்களில் தவறான முடிவை எடுத்ததால் நாடு அதலபாதாளத்திற்கு சென்றது. தலைவர்கள் நாட்டை விட்டே ஓடினார்கள். நாம் ஒரு முக்கியமான தருணத்தில் உள்ளோம். நாம் விவேகமாக சிந்தித்து புத்திசாலித்தனமான முடிவை எடுக்காவிட்டால் நாடு பின்னடைவை எதிர் கொள்ளும்.

நாட்டையும், மக்களையும் காப்பாற்றி நாட்டை கட்டியெழுப்பக் கூடிய சிறந்த தலைவர் சஜித் பிரேமதாசவே. வறுமையின் விளிம்பில் வாழ்வோர் மத்தியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய தலைவர் சஜித் பிரேமதாச மட்டுமே என்பதை கவனத்தில் கொண்டு அவரின் வெற்றிக்கு வாக்களியுங்கள். சகல சமூகங்களையும் அரவணைத்து நாட்டை துரிதமாகக் கட்டியெழுப்பக் கூடிய தலைவர் சஜித் பிரேமதாச மட்டுமே என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள் என தெரிவித்தார்.



ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து பேருவளை மஹகொடையில் தேர்தல் பிரசார அலுவலகமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் ஹஸன் பாஸி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஐக்கிய மக்கள் சக்தி பேருவளை பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜமீல், மாவட்ட அமைப்பாளர் எம்.எம்.எம் அம்ஜாத், உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.
**படம்: பேருவளை விசேட நிருபர்**

## மாவனல்லை பதுரியாவில் 'ரீசேட்' அறிமுக நிகழ்வு



மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில், 2024 அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள மாணவர்களுக்கான "ரீசேட்" அறிமுக நிகழ்வு பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எம். வை. ஹிஜாஸ் தலைமையில் கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. சப்ரகமுவ மாகாணத்தில் இருந்து அகில இலங்கை ரீதியாக 18 வயதின் கீழ் போட்டியிட தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரே ஒரு பாடசாலை இது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களும் பழைய மாணவியர் சங்க உறுப்பினர்கள் உட்பட பெற்றோர், நலன் விரும்பிகளும் கலந்து சிறப்பித்தனர்.

## லைலா அக்ஷியாவுக்கு கௌரவ விருது



சர்வதேச மனித உரிமைகள் அமைப்புடன், சர்வதேச பௌத்த சம்மேளனம் இணைந்து நடத்திய கௌரவிப்பு நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வானொலி அறிவிப்பாளரும் எழுத்தாளரும் ஆசிரியருமான பாணந்துறை லைலா அக்ஷியா மொஹிடீன் தேசபந்து, லங்கா புத்திர, மக்கள் ஒளி ஆகிய பட்டங்களை பிரதம அதிதியான ஜனாதிபதியின் தொழிற்சங்கங்கள் தொடர்பான பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னபிரியவிடமிருந்து பெற்றுக் கொள்வதை படத்தில் காணலாம்.

## புத்தளத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற இரத்ததான முகாம்

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் குழுவினரான 2003 க.பொ.த. (சா/த) "சஹீரியன்ஸ் ட்யூட்ஸ்" அமைப்பினர் ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் அண்மையில் புத்தளம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்தப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும், அவசரமாக இரத்தம் தேவைப்படுவதாகவும் அண்மையிலே புத்தளம் தள வைத்தியசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதனை கருத்தில் கொண்டே இந்த பழைய மாணவர் சங்கம்

இரத்த தான நிகழ்வினை உடனடியாக ஏற்பாடு செய்திருந்தது.

பெண்களும் இரத்தம் தானம் செய்வதற்கான விரிவான பிரத்தியேகமான இட அமைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்த இரத்ததான நிகழ்வில் 64 பேர் இரத்த தானம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## மீலாத்தின விசேட நிகழ்வில் பள்ளிவாசல் இமாம் கௌரவிப்பு

**கொழும்பு தினகரன் நிருபர்**

மீலாதுன் நபி விசேட நிகழ்வும் பள்ளிவாசல் இமாமை கௌரவிக்கும் நிகழ்வும் மட்டக்குளி கதிரானவத்தை எக்கமுத்துபுரவில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் இலாஹியாவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

பள்ளிவாசலின் தலைவர் சியாட் அப்பாஸ் தலைமையில் (16) திங்கட்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வின்போது மஸ்ஜிதுல் இலாஹியாவில் கடந்த முப்பது வருடங்களாக பள்ளிவாசல் நிருவாகத்தோடும் அப்பகுதி மக்களோடும் அன்பாக பழகி சிறப்பாக சேவையாற்றிக் கொண்டிருக்கும் பள்ளிவாசலின் பிரதம இமாம் மௌலவி றஸாக் மொஹமட் பாயிஸ் பள்ளிவாசல் நிருவாகம் மற்றும் அப்பகுதி ஜமாத்தார்களினால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். நினைவுச் சின்னத்தை பள்ளிவாசலின் முன்னாள் தலைவர் அக்பர் அலியும் தற்போதைய தலைவர் சியாட் அப்பாசும் வழங்கி கௌரவித்தனர். மேலும் அப்பகுதி ஜனாஸா சங்கத்தினாலும் மௌலவிக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச செய்திகள்

# தேர்தலை நடத்தக் கோரி பங்களாதேஷில் ஆர்ப்பாட்டம்





ஜனநாய ரீதியிலான அரசியல் பரிமாற்றம் ஒன்றைக் கோரி பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் ஆயிரக்கணக்கான செயற்பாட்டாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசிய கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். பங்களாதேஷில் புதிய தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்த திட்டத்தை இடைக்கால அரசு இன்னும் அறிவிக்காத நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

டாக்காவில் உள்ள பங்களாதேஷ் தேசிய கட்சி தலைமையத்திற்கு முன்னால் கடந்த செவ்வாயன்று கூடிய ஆதரவாளர்கள் புதிய தேர்தலைக் கோரி கோசம் எழுப்பினர்.

இதன்போது பெரும் கூட்டம் திரண்டதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பங்களாதேஷ் தேசிய கட்சி நிறுவனரான முன்னாள் ஜனாதிபதி சியா உர் ரஹ்மானின் பெயரைக் கூறி முழக்கமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பதவி கவிழ்க்கப்பட்ட பிரதமர் ஷெய்க் ஹசீனாவுக்கு எதிராகவும் கோசம் எழுப்பினர்.


நோபல் பரிசு வென்ற முஹமது யூனிஸ் தலைமையிலான பங்களாதேஷ் இடைக்கால அரசு, தேர்தல் ஆணையம் தொடக்கம் நிதி நிறுவனங்கள் வரை நாட்டின் பல துறைகளிலும் சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறது. எனினும் முன்னாள் பிரதமர் காலிதா சியாவின் பங்களாதேஷ் தேசிய கட்சி உட்பட அரசியல் கட்சிகள் விரைவில் தேர்தலை நடத்த எதிர்பார்க்கின்றன.

கடந்த மாதம் இடம்பெற்ற அரச எதிர்ப்புப் போராட்டத்தை அடுத்து பிரதமர் ஷெய்க் ஹசீனா பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்தே யூனிஸின் இடைக்கால அரசு நியமிக்கப்பட்டது. எனினும் புதிய தேர்தல் எப்போது நடக்கும் என்பது பற்றி யூனிஸின் அண்மைய உரையிலும் எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. மக்கள் விரும்புவதால் தொடர்ந்து அதிகாரத்தில் நீடிப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் யூனிஸ் தீர்க்கமான சீர்திருத்தங்களை செய்து, குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருப்பார் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மூன்று மாதத்தில் தேர்தலை நடத்தும்படி ஆரம்பத்தில் கோரிய பங்களாதேஷ் தேசிய கட்சி, பின்னர் இடைக்கால அரசின் சீர்திருத்தங்களை அனுமதிப்பதாக குறிப்பிட்டது. எனினும் காலிதா சியா கட்சியுடன் முன்னர் கூட்டணியில் இருந்த பிதான இஸ்லாமியவாத கட்சியான ஜமாதே இஸ்லாமி கட்சி இந்த சீர்திருத்தங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளது. இந்நிலையில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் இருந்து வெளியேறி லண்டனில் வசித்து வரும் பங்களாதேஷ் தேசிய கட்சியின் பதில் தலைவர் தாரிக் ரஹ்மான், இடைக்கால அரசின் சீர்திருத்தங்களை ஆதரிப்பதாகவும் ஆனால் இவ்வாறான மாற்றங்கள் மக்கள் விரும்பினாலேயே நிலையானதாக அமையும் என்றார்.

புதிய தேர்தல் எப்போது நடத்த வேண்டும் என்பது குறித்து அவர் குறிப்பிட்டு கூறாதபோதும், எந்த சீர்திருத்தமும் அடுத்த பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றார். 'சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் மாத்திரமே மக்களின் அரசியல் அதிகாரத்தை உறுதி செய்வதாக இருக்கும்' என்று அவர் வலியுறுத்தினார்.

# பங்களாதேஷுக்கான இந்திய ஏற்றுமதிகளில் பெரும் வீழ்ச்சி



பங்களாதேஷில் ஆர்ப்பாட்டம் மற்றும் அரசியல் பதற்றத்திற்குப் பின்னர் அண்டை நாடான இந்தியாவில் இருந்து இடம்பெறும் ஏற்றுமதிகளில் 28 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த ஓகஸ்டில் பங்களாதேஷுக்கான இந்தியாவின் ஏற்றுமதிகள் 681 மில்லியன் டொலர்கள் இருந்ததோடு இதுவே கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடுகையில் 943 மில்லியன் டொலர்களாக இருந்ததாக உத்தியோகபூர் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் பங்களாதேஷின் அண்மைய நிகழ்வுகள் அந்த நாட்டுடனான இந்தியாவின் வர்த்தகத்தில் முக்கிய பாதிப்புகளை ஏற்படுத்தாதபோதும் நீண்டகால இடையூறு பாதிப்பை செலுத்தக்கூடும் என்று மதிப்பீட்டு நிறுவனமான சிறில் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷுக்கான இந்தியாவின் பிரதான ஏற்றுமதிப் பொருளான பருத்தி ஏற்றுமதி இந்த ஆண்டு ஓகஸ்டில், கடந்த ஆண்டு ஓகஸ்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 10 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது. அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து பங்களாதேஷின் ஆடை உற்பத்தியில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

பங்களாதேஷின் கொள்வனவுக் கோரல் குறைந்திருப்பது அந்நாட்டு ஆடை உற்பத்திக்கான மூலப்பொருட்களை வழங்கும் இந்தியாவின் ஆடைத் தொழிற்துறையிலும் சரிவை ஏற்படுத்தியுள்ளது. எனினும் பங்களாதேஷில் இருந்து ஆடைகளைக் கொள்வனவு செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள் தற்போது இந்தியா பக்கம் திரும்பி வருகின்றனர்.

# பாக். இளைஞர்கள் இடையே வேலையின்மை அதிகரிப்பு



பாகிஸ்தானில் இளைஞர் தொகை வேகமாக அதிகரித்து வரும் நிலையில் வேலையற்றோர் அதிகரித்து வருவதாகவும், அந்நாட்டின் பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடையக் கூடும் என்றும் அந்நாட்டின் திட்டமிடல் ஆணைக் குழுவின் செனட் குழு எச்சரித்துள்ளது.

மந்தமான பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் தொகை வேகமாக அதிகரிப்பது அந்நாட்டு இளைஞர்கள் இடையே மன அழுத்தம் அதிகரிப்பதற்கு காரணமாகக் கூடும் என்று பாகிஸ்தான் திட்டமிடல் ஆணைக் குழு அரசிடம் சுட்டிக்காட்டியுள்ளது. பாகிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி தற்போது 3.5 வீதம் என்பதோடு பேண்தகு பொருளாதார அபிவிருத்திக்கு 7 வீத உற்பத்தி வளர்ச்சி தேவை என்றும் அந்த ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. பகிஸ்தானின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வெளிநாட்டு முதலீடு, வலுசக்தித் துறையின் முன்னேற்றம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி முக்கிய காரணிகளாக குறிப்பிட்டு தனியார் துறையில் முதலீடு மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறையை மேம்படுத்துவதற்கு பல திட்டங்களும் திட்டமிடல் குழுவினால் அரசுக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

# புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிவோம்; மன்னாரில் விழிப்புணர்வு நடவடிக்கை





**மன்னார் குறூப் நிருபர்**

'வருமுன் காப்போம், முழுமையாக குணப்படுத்த ஆரம்ப நிலையில் கண்டறிவோம்!' எனும் தொனிப்பொருளின் கீழ் *Shanu Foundation* நிறுவனத்தின் ஏற்பாட்டில் புற்றுநோய் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கை மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்நோய் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தும் நிலையமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. முன்கூட்டியே புற்றுநோயை கண்டறியும் நிலையமானது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியிலும் சரி இலங்கையிலும் சரி இறப்புகளுக்கான காரணமாக இரண்டாவது இடம் வகிக்கும் நோயாக புற்றுநோய் காணப்படுகிறது. எனவே இந்நோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்து நோயை தடுப்பதன் மூலம் இறப்புகளை கட்டுப்படுத்த முடியும். இந்த நிலையத்தில் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா என்று கண்டறியும் வகையில் பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென்பதுடன், புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்னர் அந்நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு அல்லது அந்நோயை ஆரம்ப நிலையில் கண்டறிவதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படும்.

இந்த நிலையமானது வாரத்தில் 7 நாட்களும் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் இயங்கும். புற்றுநோய் தொடர்பாக பொதுமக்கள் தமது சந்தேகத்தை இந்த நிலையத்தில் கேட்டறிய முடியுமென, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் *Roll Ball Association Mannar, Ria Money Transfer, Shanu Foundation* ஆகியவை இணைந்து மன்னார் மாவட்டத்தில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றன.

## வடக்கின் உதயம்

# பருத்தித்துறை வீதியில் விபத்து; 15 பேர் காயம்



**சாவகச்சேரி விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தின் போது கோயிலுக்கு சென்ற 15 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்கு வாகனமொன்றில் பயணம் செய்தவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக தெரிவித்த பொலிஸார், கொடிகாமத்துக்கும் வரணிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாகவும் கூறினர்.

இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பான விசாரணையை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வல்லிபுர தீர்த்த திருவிழாவில் கடலில் நீராடிய ஒருவர் மரணம்

## மற்றுமொருவர் நீரில் மூழ்கி காணவில்லை

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில் சமுத்திர தீர்த்த திருவிழாவின் போது கடலில் நீராடியவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்த மகோற்சவ திருவிழாவின் சமுத்திர தீர்த்த திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பிரதேசத்தை சேர்ந்த 54 வயதுடைய கந்தசாமி வினோகரன் என்பவர் உயிரிழந்துள்ளார். இதேவேளை நுணாவில் பிரதேசத்தை சேர்ந்த 30 வயதுடைய ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். நீரில் மூழ்கி காணாமல் போனவரை தொடர்ந்து தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தீர்த்தத் திருவிழாவின் போது பெருமளவானோர் கடலில் நீராடினர். இந்நிலையில் நீரில் மூழ்கிய கந்தசாமி வினோகரனை அருகில் நின்றவர்கள் மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக, வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

# தொழிலுக்கு சென்ற மீனவரை காணவில்லையென முறைப்பாடு

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலுக்கு சென்ற முதியவர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் இவரது குடும்பத்தினர் முறைப்பாடு செய்துள்ளனர்.

காரைநகரை சேர்ந்த 74 வயதுடைய முருகேசு விநாயகமூர்த்தி என்பவரே காணாமல் போயுள்ளதாக இவர்கள் செய்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனது வீட்டிலிருந்து கடற்றொழிலுக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சென்ற இவர், மாலை வேளையாகியும் வீடு திரும்பாத நிலையில் ஊர்காவற்றுறை பொலிஸில் இவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். இம்முறைப்பாட்டின் அடிப்படையில் இவரை தேடிக் கண்டுபிடிக்கும் வகையில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## வடக்கில்

# தேர்தல் சுவரொட்டிகளை அகற்றிய பொலிஸார்



**வவுனியா விசேட நிருபர்**

வடமாகாணத்தில் தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கையில் பொலிஸார் தொடர்ந்து ஈடுபட்டனர். இந்நிலையில் வடமாகாணத்தில் வவுனியா மாவட்டத்திலேயே அதிகளவான தேர்தல் சுவரொட்டிகளை அகற்றியுள்ளதாகவும் அதிகூடியளவான தேர்தல் சுவரொட்டிகளை வவுனியா பொலிஸார் அகற்றியுள்ளதாகவும், வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரையில் தேர்தல் சுவரொட்டிகள் சுமார் 9,000 வரை அகற்றியுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

வவுனியா தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக்கொடி தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் நேற்றையதினமும் (18) தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வவுனியா நகரம், குருமன்காடு, திருநாவற்குளம், யாழ். வீதி, தாண்டிக்குளம் நகரப்பகுதி உள்ளிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்ட தேர்தல் சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

## மேலும் ஐந்தாண்டுகள்...
# ஜனாதிபதி ரணிலுக்கு அதிகாரத்தை வழங்குவதே நாட்டுக்கு நன்மை தரும்
## மருதபாண்டி ராமேஷ்வரன்



*ஹட்டன் சுழற்சி நிருபர்*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் ஐந்தாண்டுகள் ஆளும் அதிகாரத்தை வழங்கினால் மாத்திரமே நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நன்மைதரும். இல்லையேல் நாடும், நாமும் பல நெருக்கடிகளை சந்திக்க நேரிடும் என்பது கசப்பான உண்மையென, இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், சுயேட்சை வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து, பூண்டுலோயா நகர மைதானத்தில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்த அவர்,

இது உள்ளூராட்சிமன்ற தேர்தலோ அல்லது மாகாணசபைத் தேர்தலோ அல்ல. நாட்டின் தலைவிதியையே தீர்மானிக்கப்போகின்ற தேர்தலாகும். நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலம் நீங்கள் வழங்கும் வாக்குகளிலேயே தங்கியுள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு நீங்கள் ஆணை வழங்கி இருந்தீர்கள். குறுகிய காலப்பகுதிக்குள் நாம் பல சேவைகளை மக்களுக்கு செய்துள்ளோம். ஜனாதிபதி தேர்தல் சமரில் ரணில் விக்கிரமசிங்கவே முன்னிலையில் உள்ளார். நுவரெலியா மாவட்டத்திலும் அவரின் வெற்றி உறுதி. ஜனாதிபதியின் வெற்றிக்காக முழுமையாக உழைத்து வருகின்றோம். மக்களும் எமது பக்கமே நிற்கின்றனர். எனவே, செப்டம்பர் 21 ஆம் திகதி ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குங்கள் என அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி வேட்பாளர்களின் விளம்பரங்களை அகற்றல்

*மாத்தளை சுழற்சி நிருபர்*

மாத்தளை மாவட்டத்தில் பொது இடங்கள் மற்றும் அரச வளாகங்களில் ஒட்டப்பட்டு, அகற்றப்படாத ஜனாதிபதி வேட்பாளர்களின் விளம்பரங்கள் மற்றும் பதாகைகள் அகற்றப்படாமை குறித்து ட்ரான்ஸ் பேரன்ஸ் இன்டனெஷனல் ஶ்ரீலங்கா மாத்தளை மாவட்ட தேர்தல் கண்காணிப்பாளர்கள் அவதானம் செலுத்துயுள்ளனர்.

இது குறித்து மாத்தளை மாவட்ட தேர்தல் அலுவலகத்துக்கு விடுத்த கோரிக்கைக்கமைய, தேர்தல் அலுவலக அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு குறித்த பதாதைகள் மற்றும் சுவரொட்டிகளை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். மாத்தளை மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் பஸ் தரிப்பு நிலையம் பாலங்கள் பொதுக்கட்டிடம் அரச வளாகங்கள் மற்றும் பொதுக் கட்டிடங்களில் திறக்கப்பட்ட தேர்தல் காரியாலயங்களில் இவ்வாறு ஒட்டப்பட்டு, அகற்றப்படாத சுவரொட்டிகள், பதாகைகளை துரித கதியில் அகற்றும் நடவடிக்கையில் தேர்தல் அலுவலகம் அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக, கண்காணிப்பு குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## ஜனாதிபதி தேர்தலில்...
# வன்முறைகள் ஏற்பட்டால் பெறுபேறுகளை பாதிக்கும்
## கெபே தேர்தல் கண்காணிப்பு நிறுவனம்



இதுவரை காலமும் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில், வன்முறைச் சம்பவங்கள் குறைந்தளவிலேயே பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் நெருங்கும்போது இச் சம்பவங்கள் அதிகரிப்பதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நிறுவனமான கெபே நிறுவனத்தின் பணிப்பாளர் எச்.பாணகல தெரிவித்தார்.

ஹட்டனில், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்களை தெளிவுபடுத்தும், ஊடகசந்திப்பில் இதனை தெரிவித்த அவர், நியமான தேர்தல் ஒன்றினை நடத்துவதற்காக நாடளாவிய ரீதியில் சுமார் 3500 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் இதில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் சிலரும் ஈடுபடுவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த தேர்தல் இலங்கை மக்களை பொறுத்தவரையில் மிகவும் முக்கியமான தேர்தலாக காணப்படுகின்றது. தேர்தல் காலத்திலும் தேர்தல் முடிந்த பின்னரும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக்கூடும்.

இதற்கு சிறந்த உதாரணமாக சமூக ஊடகங்களில் பகிரப்படும் வைராக்கிய கருத்துக்கள் காணப்படுகின்றன. இதனூடாக வன்முறை சம்பவங்கள் பதிவானால் அது வெற்றி பெரும் வேட்பாளருக்கோ அல்லது தோல்வியுறும் வேட்பாளருக்கோ பாதிப்பல்ல. மாறாக தேர்தல் பெறுபேற்றினையே பாதிக்கும்.

இதேவேளை, தேர்தல் வெற்றியை மிகவும் அமைதியான முறையில் கொண்டாடும் அதே நேரம், தோல்வியை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையினையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். எக் காரணத்துக்காகவும் சமூகத்தை பாதிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என வேட்பாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

## அறிவித்தல்

**2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க மோசடி தடுப்புச் சட்டத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை தடை செய்யும் கட்டளை கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் 2024-09-18ஆம் திகதி முதல் 03 மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

**வழக்கு இலக்கம்:** HC/SPL/B/2024

**தடை செய்வதற்குள்ள ஆதனத்தின் பட்டியல்:**

01. வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் நுவரகம் கோரளை இல. 282 பஹலகம கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள அரச நில அளவையாளர் சீ. எ.்.ப். தென்னகோன் உத்தியோகத்தரினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2024/மநுப/11(ii) எனும் உபஅட்டவணைக்கு இயைபாக 04 ஏக்கர், 02 றூட், 18.5 பேர்ச் கொண்ட மேட்டுநிலக் காணி.

- **வரைபட இலக்கம்** - **652 மற்றும் 660 (ஆ.வ.இ)**
- **கிராம சேவையாளர் பிரிவு** - **இல. 282 பஹலகம**
- **சிறு பிரிவு** - **நுவரகம் கோரளை**
- **பிர.செ. பிரிவு** - **மத்திய நுவரகம் பலாத்த**
- **மாவட்டம்** - **அநுராதபுரம்**
- **மாகாணம்** - **வடமத்திய**

**காணியின் எல்லை:** வடக்கில் சுசந்த பிரதீப் ஜயசிங்க அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி மற்றும் டீ. பிரேமலால் அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி, கிழக்கில் டீ. பிரேமலால் அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி மற்றும் வீதி (பிர.ச) தெற்கில் வீதி (பிர.ச) மேற்கில் ஒத்மினி புறுட் பார்ம் காணிக்குச் செல்லும் வீதி.

02. வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மாவட்டத்தில் மத்திய நுவரகம்பலாத்த பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் நுவரகம் கோரளை இல. 282 பஹலகம கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள அரச நில அளவையாளர் சீ. எ.்.ப். தென்னகோன் உத்தியோகத்தரினால் அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 2024/மநுப/11(i) எனும் உபஅட்டவணைக்கு இயைபாக 01 ஏக்கர், 01 றூட், 4.68 பேர்ச் கொண்ட காணி.

- **வரைபட இலக்கம்** - **516 மற்றும் 517 (ஆ.வ.இ)**
- **கிராம சேவையாளர் பிரிவு** - **இல. 282 பஹலகம**
- **சிறு பிரிவு** - **நுவரகம் கோரளை**
- **பிர.செ. பிரிவு** - **மத்திய நுவரகம் பலாத்த**
- **மாவட்டம்** - **அநுராதபுரம்**
- **மாகாணம்** - **வடமத்திய**

**காணியின் எல்லை:** வடக்கில் நதீகா சுமுதினி அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி, சம்பத் நந்தன சமரதுங்க அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி மற்றும் குடாகம குளத்திற்குச் செல்லும் வீதியாகும் என்பதுடன் கிழக்கில் குடாகம குளத்திற்குச் செல்லும் வீதி, பீ.ஜீ.எஸ்.ஏ. யாபா அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணியாகும் என்பதுடன் தெற்கில் பீ.ஜீ.எஸ்.ஏ. யாபா அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி, நதீகா சுமுதினி அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணியாகும் என்பதுடன் மேற்கில் நதீகா சுமுதினி அவர்களால் பயிரிடப்பட்டுள்ள காணி.

03. CBC 7199 இலக்கம் கொண்ட கார்
04. CAA 8210 இலக்கம் கொண்ட கார்
05. LL 9825 இலக்கம் கொண்ட லொறி

**கௌரவ நீதிமன்றத்தின் கட்டளையின் பிரகாரம்,**
**பதிவாளர்,**
**மேல் மாகாண மேல் நீதிமன்றம்,**
**கொழும்பு.**
**2024-09-18.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
### உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
### பெறுகை அறிவித்தல்

**LENOVO 36551K1, HP COMPAQ ELITE 8300MT, DELL OPTIPLEX 990 மற்றும் DELL OPTIPLEX 5040 கணனிகளுக்கான விரிவான பராமரிப்பு (மொனிட்டர், கீபோர்ட், மவுஸ் போன்றன...)**
**ஒப்பந்த இலக்கம்: IR/PAM/20/28/110/2024**

1. ''2024/2025ஆம் வருடங்களில் LENOVO 36551K1 (210 எண்ணிக்கை), HP COMPAQ ELITE 8300MT (34 எண்ணிக்கை), DELL OPTIPLEX 990 (33 எண்ணிக்கை), DELL OPTIPLEX 5040 (500 எண்ணிக்கை) கணனிகளுக்கான (மொனிட்டர், கீபோர்ட், மவுஸ் போன்றன...) விரிவான பராமரிப்பு'' எனும் பெறுகைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் (மேல்நிலை) பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. இதில் உள்ளடங்கும் பராமரிப்பு சேவைக் காலமானது 2024-10-25ஆம் திகதி முதல் ஆரம்பமாகி ஒரு வருட காலமாகும்.
3. தேசிய போட்டி ரீதியிலான செயற்பாடுகளுக்கமைய விலைக்கோரல் நடைமுறைகள் இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கு பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   i. விலைக்கோரும் நேரத்தில் மற்றும் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் நேரத்தில் ஒப்பந்தக்காரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் இது தொடர்பில் சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
   ii. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வியாபார நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   iii. இலங்கையின் அரசாங்கத் திணைக்களங்கள்/ அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட / தன்னாட்சி அமைப்பு / கூட்டு நிறுவனங்களுடன் குறைந்தபட்சம் 3 வருடங்கள் முன்னைய பராமரிப்பு சேவை ஒப்பந்தக்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   iv. விலைமனுதாரர் கொழும்பு மற்றும் ஏனைய பிராந்திய கிளைகளில் பரீட்சித்தல் / திருத்தவேலை நிலையத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   v. விலைமனுதாரர்கள் LAN கீழ் Windows சூழலைக் கொண்ட 100 எண்ணிக்கைக்கும் மேற்பட்ட கணனிகள் சார்புடையவற்றை பராமரிப்பதை குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் திருப்திகரமாக நிறைவேற்றியிருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் இரண்டு வகை LENOVO, HP அல்லது DELL கணனிகளுக்காகவிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 7ஆம் மாடியிலுள்ள தகவல் தொழில்நுட்ப நிர்வாக சேவைக் கிளை ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 011-2134701) மற்றும் 2024-09-19ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-02, ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 15ஆம் மாடி, பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ ஆணையாளரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. ஆர்வம் கொண்ட விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத எண்ணாயிரம் ரூபாவைச் (ரூபா 8,000.00) செலுத்துவதன் பேரில் கொழும்பு-02, ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்துருவிலான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-09-19ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாக மட்டுமே ஆகும்.
7. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-10-10ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவப் பிரிவு, 15ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல்கள் முடிவுற்ற உடனடுத்து அவைகள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவுசெய்யப்பட்ட அவரது பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
8. விலைமனுக்கள் 2025-01-10ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
9. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வங்கி உத்தரவாதமாக மட்டும் ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபா (120,000.00 ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது 2025-02-10ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவக் கிளை,**
**15ஆம் மாடி,**
**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**ஶ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**
**திகதி: 2024-09-19**

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மனுப் பாதுகாப்பு தொகை (ரூ). |
|---|---|---|
| RDA/RM&M/NP/RMI/ 2024/26 | குறிகட்டுவான் - நயினாதீவு படகுச் சேவைக்கான உருக்கிரும்பு கலப்பு உலோகத்திலான படகு ஒன்றைக் கொள்வனவு செய்தல் (வடிவமைப்பு, புனையமைப்பு, வழங்கல் மற்றும் செயற்படுத்தல்) | 2,000,000.00 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.09.19 ஆம் திகதி முதல் 2024.10.09 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு இணையத்தளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**பாஸ்டியன் மாவத்தை பேருந்து முனையம்**
**ஐபி அடிப்படையிலான கண்காணிப்பு தீர்வு அமைப்பின்**
**வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல் மற்றும் இயக்குதல்**
**NTC/2024/G/11**

மேலே குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் கோரப்பட்ட விலைமனுக்கோரல் திறக்கப்படும் திகதி **2024.09.18 ஆம் திகதி 1500 (பி.ப.3:00)** மணியாக திருத்தப்பட்டு **2024.09.26 ஆம் திகதி 1500 (பி.ப.3:00)** மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. குறித்த விலைமனுவிற்கான நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களை 011-2503969 என்ற தொலைபேசி இலக்கத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

SELACINE

## 2011 இல 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 05 எனும் நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 08 (3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

இல. 241, அருனோதயகம, அக்மீமன என்ற முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 895523534V கொண்ட எலபடகே சமந்திகா, இல. 644, விஜயானந்த மாவத்த, ஆனன்கொட என்ற முகவரியில் ராஜா பிரியங்க ஹேவா கொடகமகே 702753694V, பாலத்திற்கு அருகில், தொட்டகமுவ, ஹிக்கடுவ முகவரியில் அளுத்வலகெய்குஷான் ஹேமந்த 903183136V என்ற பெயருடையவர்களின் பெயரில் பதிவு செய்துள்ள கீழ்க்காணும் சொத்துக்கள்/ முதலீடுகளை அகற்றுதல் அல்லது கையகப்படுத்தலை தவிர்க்கும் முகமாக 2024.08.28ம் திகதி உதவிப் பொலிஸ் அதிகாரி காலி மாவட்டம் (1) இனால் 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 05 என்ற நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 07(1) இன் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை காலி உயர்நீதிமன்றத்தினால் SPL/16/2024 என்ற வழக்கின் கீழ் 2024.09.09ம் திகதி உறுதி செய்யப்பட்டது.

அவ்வாறே உறுதிசெய்யப்பட்ட செயற்பாடற்றதாக்கும், செயற்பாடற்றதாக்கும் கட்டளை மேற்படி சட்டத்தின் 8(2) பிரிவின் பிரகாரம் 2024.09.02 முதல் 2024.12.01 வரை 03 மாதம் அமுலாகுமாறு மேலும் நீடித்து கௌரவ நீதிமன்றம் காலி இனால் கட்டளையொன்று வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் மேற்படி சொத்து தமது உரிமைகோரும் சட்டத்தின் 14ம் பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்காக உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகளை வழங்கும் முகமாக இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது.

ராஜா பிரியங்க ஹேவாகொடி கமகே பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்து,

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தின் போபெ பொத்தல பிரதேச செயலாளர் அதிகார எல்லையில் மற்றும் போபெ பொத்தல பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குச் சொந்தமான இல. 123 சீ. அபேசுந்தரவத்த கிராம அதிகாரி பிரிவிற்கு சொந்தமான கிதுலம்பிட்டிய என்ற ஊரில் அமைந்துள்ள சேர்வே ஜெனரல் சார்பாக காலி பிரிவுப் பொறுப்பு அளவை அதிகாரியினால் 1989.08.24ம் திகதி உறுதி செய்யப்பட்ட இல.கா. 2288 என்ற அடிப்படை வரைபடத்தின் விவரமாக குறிப்பிடப்படும் (இல மு.பி.கா 2287 என்ற அடிப்படை வரைபடத்தின், வரைபடம் 2 ஆகிய காணித்துண்டின் ஒரு பகுதியான) பொரலிய தொலவத்த என்ற காணி பிரித்து வேறாக்கப்பட்ட இல.28 துண்டிற்கு அனுமதிபெற்ற நில அளவையாளர் திரு. எச்.எல். ஆர். ஜயசுந்தரவினால் 2014 மார்ச் 30ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 3742 என்ற வரைபடத்தின் பிரகாரம் துண்டு இல பி என்ற துண்டையும் மீண்டும் இணைத்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. எச்.எல்.ஆர். ஜயசுந்தரவினால் 2019 ஜூன் 02ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 5276 என்ற வரைபடத்தின் பிரகாரம் துண்டு இல.டி '(D)" என்ற துண்டிற்கு எல்லையான அளவில் பதினேழு தசம் ஐந்து (ஏ:00 ரூ.00 பே.17.5) அளவு கொண்ட காணியின் நிலம் மற்றும் அதற்குள் அமைந்துள்ள வீடு. கட்டிடம், மரங்கள், பழங்கள் போன்ற சகலதும் ஆகும்.

அளுத்வலகெய் குஷான் ஹேமந்த பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள சொத்து,

தென் மாகாணத்தின் காலி மாவட்டத்தின் அக்மீமன பிரதேச செயலகப் பிரிவில் மற்றும் அக்மீமன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் இல. 130 - B ஹாலிவல கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. ஜி.டபிள்யூ.ஜி ஆனந்தவினால் 2024.11.12ம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இல. 194 என்ற வரைபடத்தின் பிரகாரம் அளவில் பத்தொன்பது தசம் இரண்டு (ஏ.00 ரூ.00 பே.19.2) விசாலமான காணி இல. 76 என்ற வீடு கட்டிடங்களும் ஆகும். காணியின் நிலம் மற்றும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பழங்கள் போன்ற சகலதுமாகும்.




# பெறுகை அறிவித்தல்

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்அபிவிருத்தி அமைச்சு

## தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

DNCWS

# கேள்வி மனுக்கோரல்

திணைக்கள குழுவின கொள்முதல் தலைவரினால் பின்வரும் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| Name & Number of the Contract | Cost of Estimate (Million | Qualifications | Non Refundable Fee in LKR | Bid Validity (Days) | Bid Security in LKR | Bid Security Validity (days) |
|---|---|---|---|---|---|---|
| Civil Works at Kurunegala District, Bamunukotuwa, Ganthiriyawa , Ganthiriyawa CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KN/02** | 85 | CIDA Grade C3 and above | 14,500 | 91 | 850,000 | 06.02.2025 |
| Civil Works at Kurunegala District Polgahawela, Lihinigiriya , Randiyadahara CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KN/03** | 23 | CIDA Grade C4 and above | 8,000 | 77 | 350,000 | 23.01.2025 |
| Civil Works at Kurunegala District , Ahatuwewa, Nithogama , Nithogama CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KN/04** | 40 | CIDA Grade C4 and above | 11,500 | 91 | 600,000 | 06.02.2025 |
| Civil Works at Kurunegala District , Weerambugedara, Dehikumbura, Manawa Hithawadi CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KN/05** | 22 | CIDA Grade C4 and above | 7,500 | 77 | 325,000 | 23.01.2025 |
| Civil Works at Vauniya District, Samankulam, Ananthapuram Water User Association<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/VU/02** | 65 | CIDA Grade C4 and above | 12,500 | 91 | 700,000 | 06.02.2025 |
| Civil Works at Vauniya District, Periyakattu Periyakattu Community Water Consumer Organization<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/VU/03** | 23 | CIDA Grade C5 and C4 | 6,500 | 77 | 350,000 | 23.01.2025 |
| Civil Works at Galle District, Elpitiya, 31 B, Thalgaspe, Udaka CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/GA /06** | 47 | CIDA Grade C4 and above | 10,500 | 91 | 600,000 | 06.02.2025 |
| Civil Works at Mullaithivu District , Alampil South , MU / 47, Alampil Water User Association<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/MU/02** | 47 | CIDA Grade C4 and above | 10,500 | 91 | 600,000 | 06.02.2025 |
| Civil Works at Kegalle District , Dehiowita ,Kanangama , Kanangama CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KG/06** | 13 | CIDA Grade C5 or C4 | 4,000 | 77 | 175,000 | 23.01.2025 |
| Civil Works at Kandy District , Medamahanuwara , Wathuliyadda, Samagi CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KA/05** | 36 | CIDA Grade C4 and above | 9,500 | 91 | 500,000 | 06.02.2025 |
| Civil Works at Kandy District Doluwa , Godawela , Diyath CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/KA/06** | 82 | CIDA Grade C3 and above | 17,000 | 91 | 850,000 | 06.02.2025 |
| Civil Works at Rathnapura District Kolonna,Sooriya Kanda, Sinharaja Randiya Dahara CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/RT/03** | 90 | CIDA Grade C3 and above | 15,000 | 91 | 900,000 | 06.02.2025 |
| Civil Works at Nuwaraeliya District , Kothmale Dombagasthalawa ,Randiya CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/NE/05** | 46 | CIDA Grade C4 and above | 11,000 | 91 | 600,000 | 06.02.2025 |
| Civil Works at Puttallama District, Mahawewa, Panagoda, Randiya CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/PU/06** | 16 | CIDA Grade C5 or C4 | 6,000 | 77 | 225,000 | 23.01.2025 |
| Civil Works at Puttallama District , Madampe, Henepola , Nildiya Dahara CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/PU/07** | 31 | CIDA Grade C4 and above | 9,500 | 91 | 460,000 | 06.02.2025 |
| Civil Works at Puttallama District ,Madampe, Galmurawa North , Shakthi CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/PU/08** | 20 | CIDA Grade C5 or C4 | 7,000 | 77 | 300,000 | 23.01.2025 |
| Civil Works at Puttallama District ,Arachchikattuwa , Mahama eliya, Ranathisara CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/PU/09** | 36 | CIDA Grade C4 and above | 10,000 | 91 | 500,000 | 06.02.2025 |
| Civil Works at Monaragala District , Madagama, Kongolla, Kongolla CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/MO/01** | 99 | CIDA Grade C3 and above | 19,500 | 91 | 1,000,000 | 06.02.2025 |
| Civil Works Batticaloa District , Koralaipattu South ,Punanai West , 210 E CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/BT/05** | 23 | CIDA Grade C4 and above | 8,000 | 77 | 350,000 | 23.01.2025 |
| Civil Works Batticaloa District , Koralaipattu South ,Punanai West ,Vidiyal CBO<br>**Contract No: DNCWS/PRO/2024/CV/BT/06** | 19 | CIDA Grade C5 or C4 | 6,500 | 77 | 300,000 | 23.01.2025 |
| நீர் வழங்கல் மற்றும் கழிவுநீருக்கான CIDA பதிவு கட்டாயமாகும் | | | | | | |

மேல் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கான பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :

1. கேள்விப்பத்திரங்கள் **கடிதத்தலைப்பில்** எழுதப்பட்ட **கோரிக்கை** மற்றும் **மீள்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் 2 வது மாடியில் உள்ள கொள்முதல் பிரிவில்** சமர்ப்பித்து மனு ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம் (மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள கொள்முதல் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்).
2. மனு ஆவணங்கள் **2024.10.09 ஆம் திகதி வரை** வழங்கப்படும். (**மு.ப.09.00 மணி முதல் பி.ப. 3.00 வரை**)
3. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்வதுடன் **சாதாரண வேலை நாட்களில் (மு.ப.09.00 மணி முதல் பி.ப.3.00 வரை)** ஆவணங்களை வழங்கும் இடத்தில் **மனு ஆவணங்களை** இலவசமாகப் பரிசீலனை செய்யலாம்.
4. கேள்வி மனுக்களை திணைக்களத்தின் 2வது மாடியில் **(கொள்முதல் பிரிவில்)** வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியினுள் இடல் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு **2024.10.10** ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு **பதிவுதபால் மூலமாக அல்லது விரைதூதர் மூலமாக** அனுப்பிவைக்க வேண்டும்.
5. மேலதிக தகவலுக்கு, பணிப்பாளரை **(கொள்முதல்)** தொடர்பு கொள்ளவும் - **தொலைபேசி 011 2 774927.**
6. கேள்வி மனுக்கள் கேள்வி மனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள அதே முகவரியில் **2024.10.10** ஆம் திகதி **மு.ப.10.15** மணிக்கு மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கும் மனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். **தாமதமான ஏலங்கள் திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.**
7. **மனுப் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம், இல-1114, பன்னிபிட்டிய வீதி, தலவத்துகொடைக்கு** முகவரியிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகை குழு,**
**தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்,**
**இல-1114, பன்னிபிட்டிய வீதி,**
**தலவத்துகொட.**
**2024.09.19**

SELACINE

---

**சர்வதேச போட்டி ரீதியிலான**
**விலைமனுக்களுக்கான அழைப்பு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**(சுத்திகரிப்புப் பிரிவு)**
**பகிரங்கக் கேள்வி – 4445T**

**SUPPLY OF FLAME SCANNER WITH SPARES**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன, இலங்கை, களனிய, சப்புகஸ்கந்த சுத்திகரிப்புப் பிரிவு, திணைக்களப் பெறுகைக் குழுத் தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வெளிநாடுகளிலுள்ள அவர்களது அதிகாரம்பெற்ற ஏற்றுமதியாளர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து (உற்பத்தியாளர்கள் அல்லது ஏற்றுமதி முகவர்கள்) விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரக்குறிப்புகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முழுமையாக அமையும் மேற்கூறிய உருப்படியை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

எந்தவொரு கேள்விதாரரும் கேள்வியைச் சமர்ப்பிக்கும்போது வேண்டுகோள் கடிதத்துடன் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 1,000.00 ரூபாவை 2024 ஒக்டோபர் 14ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் எந்தவொரு அலுவலக நாட்களில் கொழும்பு - 09, இல. 609, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தின் 05ஆம் மாடியிலுள்ள காசாளரிடம் செலுத்துதல் வேண்டும் அல்லது களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பணியகத்தின் காசாளரிடம் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். மேலும் சகல கொடுப்பனவுகளையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலக்கத்தின் ஊடாக கேள்வி இலக்கம் மற்றும் கேள்விதாரரின் பெயரை சுருக்கமாகக் குறிப்பிட்டு பணத்தை செலுத்தலாம்.

கேள்வி நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புகள் அடங்கிய கேள்வி ஆவணங்கள் www.ceypetco.gov.lk மற்றும் www.dgmarket.com எனும் இணையதளங்களில் கிடைக்கத்தக்கதாக உள்ளன.

மாற்றுவழியாக கேள்வி ஆவணங்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்கள் 2024 ஒக்டோபர் 16ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, அன்றைய தினமே உடனடியாக அவைகள் சுத்திகரிப்பு நிலைய மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்.

**முகாமையாளர் (பொருள்வளம்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**சுத்திகரிப்புப் பிரிவு,**
**சப்புகஸ்கந்த,**
**களனி, இலங்கை.**

**தொலைபேசி: 0094-11-2400110**
**மின்னஞ்சல்: ref.materials@ceypetco.gov.lk**




---

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்

விற்பனைக்கு

NC - AAP-1857 BAJAJ THREE WHEELER - 2014 - ECO GREEN கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ .பே. 0812-081033. 064012

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள்

சந்தைப்படுத்தல்

கொழும்பில் பிரபலமான ஹாட்வெயார் ஸ்தாபனத்திற்கு விற்பனை உத்தியோகத்தர்கள் தேவை. அனுபவம் இல்லாத, இம்முறை பரீட்சை எழுதி முடிந்த ஆண்கள் விண்ணப்பிக்கலாம். மோட்டார் சைக்கிள் லைசன்ஸ் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. சான்றிதழ்களுடன் நேரில் வரவும். NO. 05, QUARRY ROAD, COLOMBO-12 . T.P. 0773600132. 063053

### 310 வெற்றிடங்கள்

எழுது வினைஞர்/ செயலாளர்கள்

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க்குழாய் கம்பனியான Allied Traing International (pvt) Ltd நிறுவனத்திற்கு ஆங்கில மொழி மற்றும் கணனி அறிவுடைய ஆண்/பெண் இலிகிதர்கள் தேவை. கொழும்புக்கு அருகில் இருப்போர் மட்டும் அழையுங்கள். 070 3598858/ 011 7397777/ 077 7776095 (இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு - 12. ) 063292

---

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 30.06.2024 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் திகதியில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 26-09-2024 | அளுத்கம, அம்பலாங்கொட, அம்பலாந்தோட்டை, அம்பாறை, அனுராதபுரம், அதுருகிரிய, அவிசாவளை, பதுளை, பலாங்கொடை, மட்டக்களப்பு, பொகவந்தலாவ, பொரளை சுப்பர், சங்கானை, சாவகச்சேரி, சுன்னாகம், தம்புள்ளை, தெஹியத்தகண்டிய, தெனியாய, எம்பிலிபிட்டிய, கலேவெல, கல்கமுவ, காலி, கம்பஹா, கம்பளை, கணேமுல்ல, ஹட்டன், ஹிங்குராக்கொட, ஹோமாகம, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரக் கிளை, கடவத்தை, கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, களுத்துறை, களுவாஞ்சிகுடி, கேகாலை, களனி, கிளிநொச்சி, கிரிபத்கொட, கிரிந்திவெல, கொஹுவல, குளியாப்பிட்டிய, குருமன்காடு, மஹரகம, மஹியங்கனை, மாலபே, மன்னார், மாத்தளை, மாத்தறை, மதவாச்சி, மொனராகலை, முழங்காவில், நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நிக்கவெரட்டிய, நிட்டம்புவ, நுவரெலியா, பாணந்துறை, பராக்கிரமபுர, பசறை, பிலியந்தலை, பருத்தித்துறை, பூகொடை, புதுக்குடியிருப்பு, புத்தளம், புத்தளம் 2, ராகலை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, தலவாக்கலே, தம்புத்தேகம, திருநெல்வேலி, திருகோணமலை, திருகோணமலை-2, உடப்புவ, வவுனியா, வார்ட் பிளேஸ், வெலிமடை, வெல்லவாய, வென்னப்புவ, கல்முனை, சிலாபம் | இந்த ஏலம் ராஜகிரியவில் உள்ள அலையன்ஸ் ஃபைனான்ஸ் பிஎல்சி எண். 722 கோட்டே வீதியின் வளாகத்திலும் அந்தந்த கிளை வளாகத்திலும் தனித்தனியாக நடைபெறும். |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டுவர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும் எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோபி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றிணைக்க உரிமை உள்ளது.

65 1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

**அடகுச் சேவைத் தலைவர்**
**எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**தொலை : 0115 573600**

## 2025 டெண்டர் விண்ணப்பிப்பதற்கான காலத்தை நீடிப்பது தொடர்பாக கல்பிட்டி பிரதேச சபை

2024.09.11ம் திகதிய பத்திரிகையில் விளம்பரமிடப்பட்ட “டெண்டர் அறிவித்தல் 2025 கல்பிட்டி பிரதேச சபை” அறிவித்தலின் படி உரிய காலத்தை கீழே காட்டப்பட்டுள்ளவாறு நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

- **கேள்வி மனு விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளல் :** 2024.09.09 தொடக்கம் 2024.10.01ம் திகதி வரை மு.ப. 8.30 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை
- **கேள்வி மனு பத்திரம் ஏற்றுக்கொள்ளல் :** 2024.10.02ம் திகதி பி.ப. 12.30 வரை
- **கேள்வி மனு பத்திரம் பரிசீலனை செய்தல் :** 2024.10.02ம் திகதி பி.ப.12.30

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு காரியாலய நேரத்தில் கீழே காட்டப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம் ஊடாக அல்லது கல்பிட்டியில் அமைந்துள்ள பிரதான காரியாலயத்திலும் மற்றும் உப காரியாலயத்திலும் வருகை தந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தொலைபேசி இலக்கம் - 032 2260274, 032 2260275**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2025ஆம் வருடத்தில் மருந்துகள், சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் சத்திரசிகிச்சை Dressing உருப்படிகளை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் மருந்துகள், சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் சத்திரசிகிச்சை Dressing உருப்படிகளை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணி வரை தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | உருப்படிகள் | | கேள்விகள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|
| | **DRUGS** | | |
| **Q137(25DR)/24** | **Drugs used in the treatment of Cardiovascular System – 8** (Amiodarone 100mg Tab. , Amlodipine 5mg Tab. , Aspirin 75mg Enteric Coated Tab. , Atorvastatin 10mg Tab. , Atorvastatin 20mg Tab.Carvedilol 6.25mg Tab. , Clopidogrel 75mg Tab. , Digoxin 250mcg (0.25mg) Tab. , Diltiazem Hydrochloride 30mg Tab. , Enalapril Maleate 5mg Tab.) | Lot | |
| **Q138(25DR)/24** | **Drugs used in the treatment of Cardiovascular System – 11** (Adrenaline 1mg / 1ml inj. ,Dopamine 200mg / 5ml inj. , Frusemide 20mg / 2ml inj. ,Hydralazine HCL 20mg / ml inj. ,Labetalol 100mg / 20ml inj. , Noradrenaline 2mg / 1ml inj. - 2ml , Streptokinase 1500000 IU inj. ,Verapamil HCL 5mg / 2ml inj.) | Lot | |
| **Q139(25DR)/24** | **Drugs used in the treatment of Infections – 10** (Meropenem 500mg inj.) | Lot | |
| **Q140(25DR)/24** | **Drugs used in the treatment of Infections - 13** (Azithromycin 250mg Tab. , Co - trimoxazole 480mg Tab. , Flucloxacillin 250mg Caps. ,Flucloxacillin 500mg Caps. , Itraconazole 100mg Caps. ,Metronidazole 200mg Tab. , Oseltamivir 30mg Caps. , Oseltamivir 45mg Caps. , Oseltamivir 75mg Caps. , Phenoxymethyl penicillin 250mg Tab.) | Lot | |
| **Q141(25DR)/24** | **Drugs used in the treatment of Infections – 14** (Ampicillin 250mg inj. ,Benzyl Penicillin 600mg (1MU) Inj. , Flucloxacillin 500mg inj. , Metronidazole 500mg /100ml inj.) | Lot | |
| **Q142(25DR)/24** | **Drugs Affecting Nutrition & Blood – 4** (Calcium Resonium Sachets - 17g ,Ferrous Sulphate 200mg Tab. , Folic acid 1mg Tab. , One Alfacalcidol 0.25mg Cap. , Potassium chloride 600mg Tab. , Pyridoxine 25mg Tab.) | Lot | |
| **Q143(25DR)/24** | **Drugs Affecting Nutrition & Blood – 5** (Erythropoietin 4000IU inj. ,Phytomenadione 1mg / 0.5 ml inj. , Phytomenadione 10mg / ml inj. , Water For Injection - 10ml ampoule) | Lot | |
| **Q144(25DR)/24** | **Drugs used in the treatment of Central Nervous System – 4** (Amitriptyline 25mg Tab. ,BetahistineDihydrochloride 16mg Tab. , Gabapentin 100mg Caps. ,Paracetamol 500mg Tab. , Paracetamol Syrup - 100ml , Phenytoin sodium 100mg Tab. , Sodium Valproate 200mg Tab. , Tramadol 50mg Caps.) | Lot | |
| **Q145(25DR)/24** | **Drugs used in the treatment of Central Nervous System – 5** (Diazepam 10mg / 2ml inj. ,Phenobarbitone 200mg inj. , Phenytoin Sodium 250mg / 5ml inj. ,Tramadol 100mg / 2ml inj. , Paracetamol suppositories 250mg, Paracetamol suppositories 500mg) | Lot | |
| **Q146(25DR)/24** | **Drugs - Antihistamines – 1** (Chlorpheniramine maleate 10mg /1ml inj. , Promethazine HCL 25mg/ ml or 50mg/2ml inj. ) | Lot | 10.10.2024 |
| **Q147(25DR)/24** | **Drugs used in the treatment of Musculoskeletal System & Joint Diseases – 2** (Celecoxib 100mg Caps. ,Diclofenac sodium 50mg Tab. , Diclofenac Sodium Suppositories 100mg, Diclofenac Sodium Suppositories 25mg, Diclofenac Sodium Suppositories 12.5mg) | Lot | |
| **Q148(25DR)/24** | **Drugs used in Anesthesia – 5** (AtracuriumBesilate 25mg/2.5ml inj. , Atropine Sulphate 600mcg/1ml inj. , Bupivacaine 0.5% - 10ml inj. , Ketamine HCL 200mg inj. ,Midazolam 5mg / ml inj. , Suxamethonium Chloride 100mg /ml inj. , Lignocaine Hydrochloride 2% Jelly - 30g) | Lot | |
| **Q149(25DR)/24** | **Drugs used in the treatment of Diseases of the Ear, Nose & Oropharynx – 1** (Oxytetracycline with Hydrocortisone - 15g Ointment) | Lot | |
| | **SURGICAL DRESSING ITEMS** | | |
| **Q018(25DE)/24** | **Sodium Bicarbonate Powder**(1g), **Sodium Chloride Powder B.P.** (1g), **Magnesium Sulphate Crystals** | Lot | |
| | **SURGICAL CONSUMABLE ITEMS** | | |
| **Q012(25SR1)/24** | **Vacuum Stabilizer** | Lot | |
| **Q013(25SR1)/24** | **Guide Wire** (150cm x 0.35 J Tip) (150cm x 0.35 Hydrophilic Coated) (260cm x 0.35 J Tip) (260cm x 0.35 Hydrophilic Coated) | Lot | |
| **Q014(25SR1)/24** | **Angiographic Needles** (18G Thin/7cm/ Length/Smooth) **Angiographic Puncture Needles** (20G (Radial) - Surflo IV Catheter Puncture Needle 20G 32mm) **Control Syringe** (12ml) **Disposable Cuvettes** **Inflation Device Kit** (Encore 26 advance kit) **Manifold** | Lot | |
| **Q042(25SR2)/24** | **Suture Material for ENT** Polyglactine 2/0, precut Glyconate monofilament 3/0, 3/8c, 26mm, cutting, 70cm | Lot | |

முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை வைத்தியசாலையின் வழங்கல்கள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது பின்வரும் இணையதள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இணைப்பு: https://sjgh.health.gov.lk/tenders.php. மேலதிக விபரங்களுக்கு வைத்தியசாலையின் வழங்கல்கள் அதிகாரி - மருத்துவம் அவர்களைத் தொடர்புகொள்ளவும். தொலைபேசி: 0112778624, 0112778610 - நீடிப்பு 3143

02. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களில் மற்றும் தரப்பட்டுள்ள விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம் அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் மேற்கூறிய திகதியில் மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

07. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



# பெறுகை அறிவித்தல்

## களனி பிரதேச சபை

### களனி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உள்ள கீழ்க்காணும் இல 01 முதல் 06 வரையான சொத்துக்களை 2024.11.01 முதல் 2027.10.31 வரை மற்றும் இல 07 இன் கீழான சொத்துக்களை 2024.11.01 முதல் 2026.10.31 வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி அழைப்பு

களனி பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சொத்துக்களை குத்தகைக்கு விடுவதற்காக கேள்வி விண்ணப்பங்கள் 2024.10.02 ஆம் திகதி பி.ப.3.00 வரை களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2024.10.03 மு.ப.10.00 வரை ஏற்கப்படும்.

கேள்வி சமர்ப்பிக்கும் மாதிரிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவது எழுத்து மூல விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத ரூ.3000.00 படிவக்கட்டணம் மற்றும் கீழே தரப்பட்டுள்ள வேண்டப்படும் சொத்துடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் மட்டுமேயாகும்.

கேள்வி விண்ணப்பங்கள் இரு பிரதிகளுடன் வழங்கப்படுவதுடன் அவ் இரு பிரதிகளும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிடப்பட்டு, வேறுவேறாக முத்திரையிடப்பட்டு மீண்டும் அவ் உறைகளை ஒரு உறையில் இட்டு பொறியிடப்பட்டு செயலாளர், களனி பிரதேச சபை என்ற முகவரிக்கு 2024.10.03 மு.ப.10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது குறித்த நேரத்திற்கு முன்பு களனி பிரதேச சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடலாம்.

கேள்விதாரர்களால் கேள்வி உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி விடயத்தையும் குறிப்பிடுதல் வேண்டும். குறைந்தபட்ச கேள்விக்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்பட்டு பிணைத்தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

2024.10.03 ஆம் திகதி மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்வதுடன் அது முடிவடைந்தவுடன் கேள்விகள் திறத்தல் இவ் அலுவலகத்தில் இடம்பெறும். அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது கேள்விதாரரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

சித்திகரமான கேள்விதாரருக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அனுப்பிய பின்னர் கேள்விதாரரால் அங்கீகரிக்கப்பட்ட கேள்வித் தொகையின் மாதாந்த வாடகை போன்று 03 மாதத் தொகையை இவ் அலுவலகத்தில் வைப்புச் செய்து ஒப்பந்தமொன்றிற்கு வரல் வேண்டும். அவ்வாறே அரசிற்கு செலுத்த வேண்டிய தொகையையும் செலுத்துதல் வேண்டும். மேலும் கேள்விதாரரால் களனி பிரதேச சபையினால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் இதன் பின்னர் விதிக்கப்படும் இடைக்கால யாப்பு மற்றும் நிபந்தனைகளுக்கும் உட்படுதல் வேண்டும் கேள்வியை ஏற்றுக்கொள்ளல் பற்றிய இறுதித்தீர்மானம் களனி பிரதேச சபை கேள்விச் சபைக்கு உரியது.

தொலைபேசி இலக்கம் - 0112914110.

**அட்டவணை**

| தொடர் இல | விற்பனை நிலையம் | குறைந்தபட்ச கேள்வி | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | தொரணசந்தி முன்னால் நிலம் பகுதி மற்றும் கட்டிடம் | 252,000.00 | 5,000.00 | 3,000.00 | 2024.11.01 - 2027.10.31 |
| 02 | களனி தொரண சந்தியில் சிறிய காணி மற்றும் கட்டிடம் | 648,000.00 | 6,500.00 | 3,000.00 | 2024.11.01 - 2027.10.31 |
| 03 | களனி தொரண பொதுச் சந்தையின் முன்னால் சிறிய நிலப் பகுதி மற்றும் கட்டிடம் | 180,000.00 | 5,000.00 | 3,000.00 | 2024.11.01 - 2027.10.31 |
| 04 | ஹுணுப்பிட்டிய ஜயந்தி மஹால் சந்தி 0.95 பேர்ச் சொத்து | 252,000.00 | 5,000.00 | 3,000.00 | 2024.11.01 - 2027.10.31 |
| 05 | ராணி திஸாநாயக்க சந்தியில் அமைந்துள்ள டிரான்ஸ்போமர் அருகில் அமைந்துள்ள 0.95 பேர்ச் சொத்து | 342,000.00 | 5,000.00 | 3,000.00 | 2024.11.01 - 2027.10.31 |
| 06 | ராணி திஸாநாயக்க சந்தியில் அமைந்துள்ள டிரான்ஸ்போமர் அருகில் அமைந்துள்ள 0.99 பேர்ச் சொத்து | 403,200.00 | 5,000.00 | 3,000.00 | 2024.11.01 - 2027.10.31 |
| 07 | ஹுணுப்பிட்டிய புதிய வர்த்தகக் கட்டிடத் தொகுதியின் கீழ் மாடியில் திறந்துள்ள 20X12 சொத்து | 372,000.00 | 5,000.00 | 3,000.00 | 2024.11.01 - 2026.10.31 |

**ஈ.என். சுபசிங்ஹ**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**களனி பிரதேச சபை**
**2024.09.19**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிக்காக முன் தகைமை கொண்ட விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விலைமனு இலக்கம் | பெறுகை இலக்கம் | வேலை விபரம் | பொறியியலாளர் மதிப்பீட்டு பெறுமதி (வெட் இன்றி) (ரூபா மில்.) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/08/2024 | கல்லோய தேசிய பூங்கா அலுவலகத்தின் கழிப்பறை கட்டமைப்பை நிர்மாணித்தல் | 6.8 | C8/C7/C6 (கட்டிடம்) | 2500.00 | 105,000.00 2024.12.06 அன்று வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். |

02. விலைமனுக் கோரல் தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரலின் கீழ் மேற்கொள்ளப்படும்.
03. விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத விலைமனுதாரர்களாக இருத்தல் வேண்டும்.
04. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களை 2024.10.14 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சிக்க முடியும்.
05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் குறித்த திட்ட வளவை பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.
06. ஒப்பந்தம் வழங்குவதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    - கடந்த 05 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் வருடாந்த அளவு குறைந்தது 32.0 மில்லியன் ரூபா இருத்தல் வேண்டும்.
    - ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ள முடியுமான எந்த ஒரு முற்கொடுப்பனவையும் தவிர்த்து மற்ற ஒப்பந்தக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட பின் குறைந்தபட்ச திரவச் சொத்து மற்றும்/ அல்லது கடன் வசதியின் அளவு 5 மில்லியன் ரூபாவுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
07. விலைமனுக்களை சமர்ப்பிக்கின்ற அனைத்து விலைமனுதாரரினாலும் கடந்த 06 மாதங்களின் வங்கி அறிக்கை, 05 ஆண்டு கணக்கு அறிக்கை மற்றும் 05 ஆண்டுகளுக்குள் நிறைவு செய்யப்பட்ட இதற்கு இணையான 02 வேலைகளை சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, 10 மில்லியனை விஞ்சிய வேலைக்காக விலைமனு ஆவணங்களில் கோரப்பட்ட தகைமையை உறுதி செய்வதற்கு அங்கீகரிக்க முடியுமான அறிக்கைகளை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. விலைமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை 2024.10.14 ஆம் திகதி வரையில் வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் என்ற பெயரில், குறித்த நிறுவனத்தில் முத்திரை பொறிக்கப்பட்ட கடிதத் தாளில் மேற்கொள்ளும் எழுத்துமூல கோரிக்கை மற்றும் CIDA பதிவுப் புத்தகத்துடன் திணைக்கள சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத பண வைப்பு ஒன்றை மேற்கொண்ட பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் குறித்த விலைமனு ஆவணத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
09. மேல் குறிப்பிடப்பட்ட விலைமனு பிணையை வங்கி ஒன்றின் மூலம் முன்வைப்பதாயின் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் வகையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை பணமாகச் செலுத்துவதாயின் திணைக்கள சிறாப்பருக்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை இணைத்தல் வேண்டும். விலைமனு ஆவணத்துடன் விலைமனு பிணையை சமர்ப்பிக்காத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 1987 இன் 03 ஆம் இலக்கம் கொண்ட பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக நிறுவன பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA 03 சான்றிதழை விலைமனு ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு இல்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறாக கடித உறைகளில் இட்டு முத்திரை இட்டு மீண்டும் ஓர் உறையில் இட்டு முத்திரை இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2024.10.15 ஆம் திகதி பி.ப. 2.00க்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட முடியும் என்பதோடு, தாமதித்துக் கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களைத் திறப்பது அன்றைய தினம் (2024.10.15) பி.ப. 2.30க்கு மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.
11. விலைமனுக்கள் தொடர்பில் மேலதிக விபரங்களை 0112-871537 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் திணைக்கள உதவிப் பணிப்பாளரை (நிதி) அழைத்துப் பெற்றுக்கொள்ள முடியும். விலைமனுக்கள் தொடர்பில் முடிவு எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழு வசமானது என்பதோடு, இந்த அறிவித்தலில் அல்லது விலைமனு படிவத்தில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத இந்தப் பெறுகை பணிகள் தொடர்பில் ஏதேனும் விடயம் ஒன்று தொடர்பில் முடிவை வழங்கும் அதிகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வசமானதாகும்.
12. விலைமனுக்களை தயாரிப்பது தொடர்பில் ஏற்படும் எந்த ஒரு செலவுக்கும் திணைக்கள பெறுகைக் குழு, தலைவர் பொறுப்பேற்க மாட்டார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இலக்கம் 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்லை.**

TEGOSL
ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

25th anniversary

# மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் 2023

தேசிய பத்திரிகையொன்றில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்குமிடையில் தமது ஆக்கங்கள், கேலிச் சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் பிரசுரமான விண்ணப்பதாரிகளுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 என்ற அடிப்படையில் பத்திரிகையிலிருந்து வெட்டப்பட்ட தமது ஆக்கங்கள், கேலிச்சித்திரங்கள் மற்றும் புகைப்படங்களின் பகுதிகளை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட அசல் விடயதானங்களைப் பெறுவது சாத்தியமற்றிருப்பின் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர் சபை உறுப்பினர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பக் கோரப்படுகிறது.

சுயாதீன நடுவர்கள் குழுவொன்று வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கான பிரிவுகளுக்காக அல்லது விண்ணப்பப்படிவத்துக்கு இதனுடன் இணைக்கப்பட்ட கியூ.ஆர். குறியீட்டை ஊடுருவல் செய்யவும். மேலதிக தகவல்களுக்கு www.slpi.lk அல்லது www.pccsl.lk க்கு பிரவேசிக்க வேண்டும்.

**விடயதானங்களைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 30, 2024 ஆகும்.**

அனைத்து விடயதானங்களும் சரியான முறையில் கோப்பாக்கம் செய்யப்பட்டு (தளர்வான கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) அவைத் தலைவர், அதிசிறந்த ஊடகவியல் விருதுகள் 2023, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை (கிருள்ள வீதி), கொழும்பு 5 என்ற முகவரியில் கையளிக்கப்பட வேண்டும்.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
## நீர்ப்பாசன அமைச்சு
# விலைமனுக்களுக்கான அழைப்பு
## நீர்ப்பாசனத் திணைக்களம்

### "நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் தகைமை அலுவலக இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குதல்"

**ஒப்பந்த இலக்கம்: ID/HO/CT/Janitorial/NCB/2024/05**

1. பின்வரும் சேவைக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை நீர்ப்பாசன திணைக்களத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத தலைவர் அழைக்கின்றார்.

**அட்டவணை இல. 01**

| ஒப்பந்த இல. | வேலையின் பெயர் | விலைக்கோரல் செல்லுபடியாக வேண்டிய காலம் | பிணை முறி (இல. ரூபா) | பிணை முறி செல்லுபடியாக வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| ID/HO/CT/ Janitorial/ NCB/2024/05 | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் தலைமை அலுவலக இடப்பரப்பிற்குள் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு துப்புரவேற்பாட்டுச் சேவையை வழங்குவதற்கான பெறுகை | 2024-12-27 | 180,000.00 | 2025-01-24 |

2. மீளளிக்கப்படாத 5,000.00 ரூபா கட்டணத்தை 2024-09-19ஆம் திகதி முதல் 2024-10-10ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையில் செலுத்தியும் மற்றும் நிறுவனக் கடிதத் தலைப்பில் (மூலப் பிரதி) எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கொழும்பு-07, இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனத் திணைக்களம், 02ஆம் தளம், அறை இல. 213, நீர்ப்பாசனப் பணிப்பாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு முன்னராக, அவைகளை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக தகவலை நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி 011-2582897/011-2583305
4. பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டவாறு விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயங்கள் இடம்பெறும். வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளங்களைப் பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**அட்டவணை இல. 02**

| வேலைத்தள விஜயத்திற்கு உதவும் பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் | வேலைத்தள விஜயத்திற்கான திகதி மற்றும் நேரம் | விலை கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கான திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் (கட்டிடங்கள் மற்றும் கட்டிட சேவைகள்) தொ.பே. 011 2581802 | 2024-09-26ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு, பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் (கட்டிடங்கள் மற்றும் கட்டிட சேவைகள்) அலுவலகத்தில் | 2024-09-26ஆம திகதி ந.ப. 12.00 மணிக்கு கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, நீர்ப்பாசனத் திணைக்களம், 318ஆம் இலக்க அறை, நீர்ப்பாசனப் பணிப்பாளர் (WG & BS) அலுவலகத்தில் |

5. விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள வடிவத்திலேயே விலைமனுப் பிணை முறிகள் இருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் விலைமனுப் பிணை முறிகள் அற்ற விலைமனுக்கள் பதிலளிக்கப்படாதவையாகக் கருதப்படும் என்பதுடன் அவைகள் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
6. விலைமனு ஆவணங்களின் சகல பக்கங்களிலும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவரின் முத்திரைக்குறி பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்களை 2024-10-11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னராகக் கிடைக்கும் வகையில், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை 230ஆம் இலக்க நீர்ப்பாசனத் திணைக்களம், 3ஆம் மாடியிலுள்ள பிரதான நிதியிடல் அலுவலரின் 311ஆம் இலக்க அறையில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில், தலைவர், திணைக்கள பெறுகைக் குழு என முகவரியிட்டு மேற்படி முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.10.11 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் **(IFB No)** ஆகியவற்றை தயவு செய்து எழுதவும்.
8. சுய விருப்பத்தின் பேரில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதியானதும் மற்றும் தீர்க்கமானதாகும். எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் சுய தீர்மானத்தின் பேரில் நிராகரிக்கும் அதிகாரத்தை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பொறி. அஜித் குணசேக்கர,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர் நாயகம்,**
**நீர்ப்பாசனத் திணைக்களம்,**
**இல. 230, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07**
**2024-09-19ஆம் திகதி.**

## பொல்பித்திகம பிரதேச சபை
# 2025 ஆம் வருடத்தில் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடத்தினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக மற்றும் நிர்மாண வேலைகளுக்காக இந்த சபையில் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனையின் கீழாக, 2024.12.31 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. அனைத்து விண்ணப்பங்களும் பதிவுசெய்ய உத்தேசித்துள்ள ஒவ்வொரு விடயத்தின் பொருட்டும் பதிவுக்கட்டணத்தை காசோலைகள் அல்லது ரொக்கப்பணமாக தமது பெயர் மற்றும் வியாபாரத்தின் விபரங்களுடன் "செயலாளர் பிரதேச சபை, பொல்பித்திகம" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். (காசுக்கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
02. பதிவுசெய்து கொண்டவர்களின் பட்டியலிலிருந்து விலைகள் கோரப்பட்டு குறித்த சேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கு பொதுவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதுடன் தேவையான வேளையில் அதற்கு புறம்பாகவும் விலைகள் கோரும் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
03. ஒப்பந்தக்காரர்களாக தம்மைப் பதிவுசெய்துகொள்ள உத்தேசிக்கும் நபர்கள், அது தொடர்பாக தமது தகைமைகளை எழுத்துமூல சாட்சியங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.
04. வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தங்களை குறித்த காலத்தினுள் நிறைவேற்றத்தவறும் நபர்களின் பதிவு இரத்துச் செய்யப்படும்.

| தொடர் இலக்கம் | விபரம் | பதிவுக் கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|
| 01 | காகிதாதிகள் | 2000.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் | 5000.00 |
| 03 | மின்சாரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள், வீதி விளக்குகள் திருத்தவேலைகளுக்கான அனைத்து உபகரணங்கள் | 5000.00 |
| 04 | சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் (முகக்கவசம், கிளவுஸ், பூட்ஸ், கிருமிநாசினி, சுத்திகரிப்பு பொருட்கள் போன்றவை) | 1000.00 |
| 05 | கட்டிட, வீதி நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (கருங்கல், செங்கல், சீமெந்து, இரும்பு, கிரவல், மண், கற்தூள், சிப்ஸ், தார் போன்றவை) | 3000.00 |
| 06 | கணனி இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் | 5000.00 |
| 07 | அச்சிடும் வேலைகள், இறப்பர் முத்திரை, பெனர், பெயர்ப்பலகை, அறிவித்தல் பலகை, டுப்ளோ அச்சு வேலைகள் | 1000.00 |
| 08 | வாகன உதிரிப்பாகங்கள், டயர் வகைகள், பற்றரி வகைகள், டியூப் வகைகள் இயந்திராதி உதிரிப்பாகங்கள் | 2000.00 |
| 09 | நீர்க்குழாய் துணைப்பாகங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 1000.00 |
| 10 | ஆயுதம் மற்றும் கருவிகள் (மண்வெட்டி, அரிவாள், கத்தி, வீச்சுக்கத்தி, வீல்பரோ, சவல்) | 1000.00 |
| 11 | ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள் போன்ற சீமெந்தினாலான தயாரிப்புகள் | 1000.00 |
| 12 | அலுவலக உபகரணங்கள், கணனி, தட்டச்சு, ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள், தொலைபேசி முறைமை, வளிச்சீராக்கி முறைமை திருத்தவேலைகள் | 1000.00 |
| 13 | நிறப்பூச்சு வகைகள், பிரஷ் வகைகள், பசை வகைகள் | 2000.00 |
| 14 | தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பம், குப்பைத்தொட்டிகள் | 1000.00 |
| 15 | நிர்மாண வேலைகளுக்காக தொழிலாளர்களை வழங்குதல் (பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத) | 1000.00 |
| 16 | வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் | 1000.00 |
| 17 | வாகன திருத்தவேலைகள், சேர்விஸ்கள், டயர், டியூப் மாற்றும் வேலைகள் | 1000.00 |
| 18 | வீதிகளை அமைப்பதற்கு பெகோ இயந்திரம், மோட்டார் கிரேடர் இயந்திரம், JCB, வீதிகளை அழுத்தும் இயந்திரம், பாரந்தூக்கி இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் | 3000.00 |
| 19 | ஆழமான குழாய் கிணறுகளை துளைத்தல், குழாய் உபகரணங்கள், நீர் மோட்டர் | 5000.00 |
| 20 | தைக்கப்பட்ட ஆடைகள், துணிகள் ஏனைய துணி வகைகள் | 2000.00 |
| 21 | மரம் வெட்டுபவர்கள் மற்றும் இழுத்துச் செல்பவர்கள் | 1000.00 |
| 22 | அனைத்து வேல்டிங் வேலைகள் மற்றும் பார்டிஷன் வேலைகள் | 1000.00 |
| 23 | உத்தரவு பெற்ற நில அளவையாளர் வேலைகள் | 1000.00 |
| 24 | மொழிபெயர்ப்பு செய்தல் | 1000.00 |
| 25 | உள்ளக தொலைபேசி முறைமையை பொருத்துதல் | 5000.00 |
| 26 | CCTV கமரா முறைமையை பொருத்துதல் | 5000.00 |
| 27 | கணனி வலையமைப்பிடுதல் | 5000.00 |
| 28. | சிறுவர் பூங்கா உபகரணங்களை வழங்கி நிறுவுதல் | 5000.00 |
| 29. | தரகர்கள் / வழங்குநர்கள் | 3000.00 |
| **நிர்மாண ஒப்பந்தம் - ஒப்பந்த மதிப்பீட்டு எல்லை CIDA தரம் பிரகாரம்** | | |
| 01 | C 9 | 5000.00 |
| 02 | C 8 | 5500.00 |
| 03 | C 7 | 6000.00 |
| 04 | C 6 | 6500.00 |
| 05 | C5 | 7000.00 |
| 06 | C4 | 7500.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரர்கள் 2024.12.31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒரு உருப்படிக்கு தரப்பட்டுள்ள பதிவுக்கட்டணத்தை ரொக்கப் பணமாகவோ அல்லது காசோலைகள் மூலமாகவோ செலுத்தி, "வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025ஆம் வருடம்" என தபாலுறையில் குறிப்பிட்டு, "செயலாளர், பிரதேச சபை, பொல்பித்திகம" பெயரில் பதிவுத்தபால் மூலம் அலுவலக நேரத்திற்குள் அனுப்பி வைக்க வேண்டும்.
02. தமது வியாபாரத்தின் தகவல்களுடன் கூடியதாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரமொன்றை அந்த விடயம் தொடர்பாக வெவ்வேறாக தயார் செய்து வியாபாரப் பதிவுச்சான்றிதழுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்பித்திகம**

**2024.09.03 ஆம் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில்.**

* Trusted Marketplace of Classified Advertisers...
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377
WE ACCEPT
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

# கேள்விகளுக்கான அழைப்பு
## மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்
# சமைத்த உணவு வழங்குதல்/ அழுக்குத் துணிகளைச் சலவை செய்தல் – 2025

மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திற்குச் சொந்தமான கண்டி, மாத்தளை நுவரெலிய ஆகிய மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு 2025ம் ஆண்டிற்கு சமைத்த உணவு வழங்குதல் மற்றும் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக தேசிய போட்டி முறையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

02. அனுபவமுள்ள தகைமையுடைய அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாத ஆர்வமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன.
03. 2025 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளுக்கு கேள்விகள் கோருவதுடன் சம்பந்தப்பட்ட வேலைகள் கீழே அட்டவணையில் 2ம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதனோடு சம்பந்தப்பட்ட சகல கேள்விப் பத்திரங்களையும் 2024.09.19 முதல் 2024.10.09 வரை மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| கேள்விகள் விநியோகிக்கப்படும் நிறுவனம் | வைத்தியசாலைக்கு சொந்தமான மாவட்டம் (1) | மேற்கொள்ளப்படும் வேலைகள் (2) |
|---|---|---|
| மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் | மாத்தளை மாவட்டம் | சமைத்த உணவு / அழுக்குத் துணி |
| | கண்டி மாவட்டம் | சமைத்த உணவு / அழுக்குத் துணி |
| | நுவரெலியா மாவட்டம் | சமைத்த உணவுகள் மட்டும் |

04. கேள்விதாரர்களுடன் சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை கண்டி, சங்கராஜ மாவத்தை, த.பெ.163 இல் மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.081-2222856)
05. மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக்கட்டணமாக சமைத்த உணவிற்காக ரூபா.2500.00 உம், அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்காக ரூ.1000.00 தொகையையும் (தம்புள்ள வைத்தியசாலையில் அழுக்குத் துணிகளை சலவை செய்யும் கேள்விப் பத்திரங்களுக்காக மட்டும் ரூ.2500.00 தொகையையும் செலுத்துதல் வேண்டும்) மாகாண சுகாதார சேவைத்திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு காசாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டொன்றை மாகாண சுகாதார சேவைத்திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்து மேற்படி வாரத்தில் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும் அட்டவணை இல.1,2,3 இல் தரப்பட்டுள்ளவாறு கேள்விப்பிணையொன்றை காசாக செலுத்துவதுடன் அதனை மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் காசாளரிடம் வைப்புச்செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் உறுதி செய்த பிரதியொன்றை கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
07. சமைத்த உணவிற்காக ஒவ்வொரு கேள்வியுடனும் குறித்த பெறுமதியுடைய தான் வசிக்கும் அதிகார பிரதேசத்தின் பிரதேச செயலாளரினால் விநியோகிக்கப்படும் சொத்துச் சான்றிதழொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
08. முறையாக பூர்த்தி செய்த பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை 2024.10.10ம் திகதி மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் மத்திய மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், த.பெ 163, சங்கராஜ மாவத்தை, கண்டி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது சுகாதார சேவைத் திணைக்களத்தின் கணக்குப்பிரிவில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வேறுவேறாக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விகளை உள்ளிடலாம்.
09. கேள்விப் பத்திரங்களை சரியாக பூர்த்தி செய்து பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட வேண்டியதுடன் சகல உறைகளிலும் இடதுபக்க மேல் மூலையில் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்கும் மாவட்ட வைத்தியசாலை மற்றும் உருப்படி (சமைத்த உணவு / அழுக்குத் துணி) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
10. 2024.09.30 மு.ப10.00 இற்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் சுகாதார சேவை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.
11. 2024.10.10 மு.ப.10.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
12. தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
13. சகல கேள்வியும் தொழில்நுட்ப மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவதுடன் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**2024 செப்டெம்பர் 19ம் திகதி**

**மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**இல.163, சங்கராஜ மாவத்தை,**
**கண்டி**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை
## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| விளக்கம் | நாளொன்றிற்கான தொழிலாளர்களின் எண்ணிக்கை | கால எல்லை (மாதங்கள்) | கேள்விப் பிணை |
|---|---|---|---|
| CE/RDA/KG/SS/TB/2024/09 கேகாலை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (அம்பேபுஸ்ஸ அலகு) | 11 | 12 | 85,800.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/10 கேகாலை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (அம்பங்பிட்டிய அலகு) | 15 | 12 | 117,000.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/11 கேகாலை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (தேவாலேகம அலகு) | 14 | 12 | 109,200.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/12 கேகாலை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (ரம்புக்கன அலகு) | 14 | 12 | 109,200.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/13 கேகாலை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (மோலகொட அலகு) | 11 | 12 | 85,800.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/14 கேகாலை நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (ஹெட்டிமுல்ல அலகு) | 15 | 12 | 117,000.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/15 ருவான்வெல்ல நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (வேகட அலகு) | 16 | 12 | 124,800.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/16 ருவான்வெல்ல நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (மொரவத்த அலகு) | 17 | 12 | 132,600.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/17 ருவான்வெல்ல நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (எட்டியாந்தொட்ட அலகு) | 16 | 12 | 124,800.00 |
| CE/RDA/KG/SS/TB/2024/18 ருவான்வெல்ல நிறைவேற்று பொறியியலாளரின் பிரிவிற்கு தொழிலாளர்களை வழங்கல் (தெஹியோவிட்ட அலகு) | 16 | 12 | 124,800.00 |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் தேர்ச்சியற்ற தொழிலாளர்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பான ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக விபரங்களை 2024.09.19 ஆம் திகதியிலிருந்து 2024.09.26 ஆம் திகதி வரையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் **www.rda.gov.lk** என்ற இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகை குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கேகாலை.**

### பெயர் மாற்றம்

மத்தியமுகாம் - 03 சாளம் பேக்கேனி, 12/23ஐச் சேர்ந்த சிரானி புஸ்பலதாவாகிய நான் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை பாத்திமா நிஹாரா என மாற்றியுள்ளதாகவும் இனிமேல் சகல ஆவணங் களிலும் அவ்வாறே ஒப்பமிடுவதாகவும் - இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**பாத்திமா நிஹாரா**

### பெயர் மாற்றம்

இல. 78/2, ஹிஜ்ரா மாவத்தை வெலிபென்னயில் வசிக்கும் Shiritharan shalini தே.அ.அ.இல: 200365413580 ஆகிய நான், சொந்த விருப்பத்தின் பெயரில் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை Fathima Shaliha என மாற்றிக் கொண்டேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தகவல் Fathima Shaliha**

## கொழும்பு மாநகர சபை
## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | ME/ME/ DR/14/2024 | கொழும்பு 06, வெள்ளவத்தை, பெட்ரிகா வீதியில் திறந்த வடிகானின் மீள்நிர்மாணம் | 5,900.00 | 238,000.00 ரூபா (நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி) | C 05, C 06 எனும் CIDA தரத்தைக் கொண்ட மழை நீர் அப்புறப்படுத்துதல் மற்றும் நில வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
- சகல வட்டார அலுவலகங்கள்

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையும் 2024-10-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2024-10-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனு முறி/ பிணை 2025.05.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.04.08ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. விலைமனுக்களின் விபரங்கள் விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைமனுக்களுக்கு விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு
## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
### மருந்துகள், சத்திரசிகிச்சை Dressing உருப்படிகள் மற்றும் சத்திரசிகிச்சை பொருட்களை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் மருந்துகள், சத்திரசிகிச்சை பாவனைப் பொருட்கள் மற்றும் Dressing உருப்படிகளை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத வைப்புக் கட்டணம் (ரூபா) | கேள்விப் பிணை முறித் தொகை |
|---|---|---|---|---|
| Q015(25SR1)/24 | Vitalitec Clip 9 {Titanium Liga Clip (Small)}<br>Liga Clips LT- 100 {Titanium Liga Clip (Small) Vesocclude for special long clip applicator}<br>Liga Clips LT- 200 {Titanium Liga Clip (Medium)} | Lot | 3500.00 | |
| Q016(25SR1)/24 | Introducer Sheath<br>(5F M Coated 10cm), (6F 10cm)<br>(6F M Coated 10cm), (7F 10cm), (8F) | Lot | 3500.00 | |
| Q017(25SR1)/24 | PTCA Guide Wire<br>(Fielder FC), (Fielder XT – A), (Fielder XT - R), (Rinato), (Sion Black), (Sion Blue) | Lot | 3500.00 | |

பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து ஆவலுள்ள தகுதி வாய்ந்த எந்த முகவரும் அல்லது கேள்விதாரரின் சார்பாக பெயரிடப்பட்ட நபரும் கொள்வனவு செய்த முழுமையான கேள்வி ஆவணங்களில் இரு நகல்களில் பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை பணிப்பாளருக்கு எழுதப்பட்ட எழுத்து மூலமான ஒரு விண்ணப்பம்
(ii) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை கணக்காளருக்கு மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தல்
(iii) வியாபாரப் பதிவுச் சான்றிதழின் ஒரு புகைப்படப்பிரதி

01. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களிலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. வைத்தியசாலை வழங்கல்கள் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. 2024-09-23ஆம் திகதி முதல் 2024-10-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் 2024-10-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
06. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**மேலதிக தகவல் : தொடர்பிலக்கம்: தொலைபேசி: 011-2778624, 0112778610 நீடிப்பு 3143**
**தொலைநகல்: 011-2778624**
**மின்னஞ்சல்: somedical@sjghsrilanka.lk**



**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**

## பெறுகை அறிவித்தல்
### மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்
## நிதியளிப்பு: பொதுவான கல்வி நவீனமயப்படுத்துதல் செயற்றிட்டம் (GEMP) - 2024 (உலக வங்கி)

இங்கு பின்வருமாறு காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (இல. ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபாயில்) | ஒப்பந்தக் காலம் - நாட்கள் | பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | அ/எப்பாவல ஸ்ரீ ராகுல வித்தியாலயத்தில் 20’x20’ புதிய விசேடக் கல்விப் பிரிவின் திருத்தவேலைகள் | 120,000.00 | 3,000.00 | 105 நாட்கள் | C06 மற்றும் C07 |

01) விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்கள் மூலமாக இடம்பெறும். இந்தப் பெறுகையின் மொத்த செலவுக் கிரயம் 50 மில்லியன் ரூபாவிற்கும் குறைவாக இருப்பதால் 2016/13(ii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA தர முன்னுரிமை வழங்கப்படும்.

02) விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் சகல விலைமனுதாரர்களும் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) செல்லுபடியாகும் பதிவைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உள்ளாகாதவர்களாக இருத்தல் வேண்டும்.

03) நிர்மாண ஒப்பந்தங்களுக்கு இயைபான சகல விலைமனு ஆவணங்களை அநுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் (நிதி) அவர்களிடம் (தொலைபேசி இலக்கம் 025-2222432 தொலைநகல் இலக்கம் 020-2222432 மற்றும் மின்னஞ்சல் முகவரி: ncpedpro@gmail.com) அலுவலக நேரங்களில் 2024 ஒக்டோபர் 10ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையில்) பரீட்சித்துப் பார்க்கலாம்.

04) நிர்மாண ஒப்பந்தங்களுக்கு இயைபான சகல வேலை விபரங்கள் மற்றும் திட்டங்கள் தொடர்பானவற்றை அனுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண பொறியியல் திணைக்களத்தின் கட்டிடப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்த அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும் வசதிகள் கீழே தரப்பட்டுள்ளன. (தொலைபேசி இலக்கம் 025-2225916 தொலைநகல் இலக்கம் 025-2226157) மின்னஞ்சல் முகவரி: ncpengineering@gmail.com

05) தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் அனுராதபுரம் வடமத்திய மாகாணத்தின் மாகாண கல்வித் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் மற்றும் பொலன்னறுவை வலய கல்வித் திணைக்களத்தின் கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனுக்கள் 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 10ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும்.

06) விலைமனுக்களை ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘இரண்டாம் பிரதி’’ என வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர், இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என்பவற்றை உள்ளடக்கிய உறையை வேறொரு உறையில் இட்டு, தலைவர், பெறுகைக் குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அனுராதபுரம் எனும் முகவரிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும் அல்லது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

07) விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலம், தகைமை மற்றும் ஏனைய நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

08) விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2024 ஒக்டோபர் 11ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைமனு முறியானது நிபந்தனையற்றதாகவும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் அல்லது நிர்மாணப் பாதுகாப்பு நிதியத்தியத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாகவிருத்தல் வேண்டும். அல்லாவிட்டால் ரொக்கப் பணத்தில் செலுத்தலாம். விலைமனுப் பிணை முறியானது விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இந்நாட்டில் மாற்றக்கூடியதாகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட திகதி நேரம் முடிவடைந்த உடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

10) கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்களில் ஒன்றை அல்லது அனைத்தையும் அல்லது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்தவொரு வேளையிலும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் அதன் காரணமாக விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு கடப்பாடு அல்லது பொறுப்பு இல்லையென்பதுடன் அவ்வாறான தீர்மானத்தை எடுப்பதற்கான காரணம் தொடர்பில் பிரகடனமொன்றைச் செய்வதற்கான கடப்பாடு இல்லை.

**தலைவர் / மாகாண கல்விப் பணிப்பாளர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண கல்வித் திணைக்களம்,**
**வடமத்திய மாகாணம்,**
**அநுராதபுரம்.**

**திகதி: 2024-09-19.**

# கமிந்துவின் சாதனைச் சதத்துடன் இலங்கை அணி ஸ்திர நிலையில்



கமிந்து மெண்டிஸின் அபார சதத்தின் உதவியோடு நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 302 ஓட்டங்களைப் பெற்று ஸ்திரமான நிலையில் உள்ளது.




காலி சர்வதேச அரங்கில் நேற்று (18) ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் வேகப்பந்து வீச்சாளர் மிலான் ரத்னாயக்கவுக்கு பதில் சுழற்பந்து சகலதுறை வீரர் ரமேஷ் மெண்டிஸ் இடம்பெற்றார். விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரராக அணியில் இணைக்கப்பட்ட குசல் மெண்டிஸ் துடுப்பாட்டத்தில் மத்திய பின் வரிசைக்கு தள்ளப்பட்டார்.

இந்நிலையில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி 20 ஓட்டங்களிலேயே முதல் விக்கெட்டை பறிகொடுத்தது. திமுத் கருணாரத்னவினால் 2 ஓட்டங்களையே பெற முடிந்தது.

தொடர்ந்து பத்தும் நிசங்க (27), முதல் வரிசையில் வந்த தினேஷ் சந்திமால் (30) மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் (36) தமது ஓட்டங்களை அதிகரிக்க தவறினர். என்றாலும் மீண்டும் ஒருமுறை தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய கமிந்து மெண்டிஸ் தனது நான்காவது டெஸ்ட் சதத்தைப் பெற்றார்.

வழக்கமாக ஏழாவது வரிசையில் களமிறக்கப்படும் அவர் இந்தப் போட்டியில் ஐந்தாவது வரிசையிலேயே துடுப்பெடுத்தாட வந்தார். குசல் மெண்டிஸுடன் இணைந்து 6 ஆவது விக்கெட்டுக்கு 103 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்துகொண்டார். குசல் மெண்டிஸ் 50 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்போது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்த கமிந்து மெண்டிஸ் தனது முதல் ஏழு டெஸ்ட் போட்டிகளிலும் அரைச் சதத்திற்கு மேல் ஓட்டங்கள் பெற்று உலக டெஸ்ட் சாதனையை சமன் செய்தார்.

அதேபோன்று அவர் 11 இன்னிஸ்களுக்குள் நான்கு சதங்களைப் பெற்று வேகமாக நான்கு சதங்களை பெற்ற இலங்கை வீரர் என்ற ஜென்பரி வென்டர்சேவை பின்தள்ளியதோடு இது கிரிக்கெட் ஜாம்பவான் டொன் பிரட்மனின் சாதனையை சமன் செய்வதாகவும் இருந்தது.

இதில் பாகிஸ்தானின் சவூத் ஷகீலுக்கு அடுத்து தனது முதல் ஏழு டெஸ்ட் போட்டிகளிலும் 50க்கும் மேல் ஓட்டங்கள் பெற்ற முதல் வீரராகவே கமிந்து சாதனை படைத்தார்.

இதில் அவர் தனது முதல் ஆறு டெஸ்ட்களிலும் 50க்கும் மேல் ஓட்டங்கள் பெற்ற சுனில் கவாஸ்கர், சயீட் அன்வர் மற்றும் பசில் புட்சர் ஆகியோரை பின்தள்ளினார்.

நேற்று முதல் நாள் ஆட்டத்தின் கடைசி நேரத்தில் தனது விக்கெட்டை பறிகொடுத்த கமிந்து மெண்டிஸ் 173 பந்துகளில் 11 பௌண்டரிகளுடன் 114 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டநேர முடிவில் இலங்கை அணி 88 ஓவர்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ரமேஷ் மெண்டிஸ் 14 ஓட்டங்களுடனும் பிரபாத் ஜயசூரிய ஓட்டம் இன்றியும் களத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து அணி சார்பில் வில்லியம் ஓருக் 3 விக்கெட்டுகளையும் கிளென் பிலிப்ஸ் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இன்று (19) போட்டியின் இரண்டாவது நாளாகும்.



## சர்வதேச செய்திகள்

# ஹிஸ்புல்லா போராளிகளின் பேஜர்கள் வெடித்து 12 பேர் பலி: பலரும் காயம்

## இஸ்ரேலின் மொசாட் உளவுப் பிரிவு சதி

லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு ஒரு மாதத்திற்கு முன் வாங்கிய 5,000 பேஜர் சாதனத்தில் இஸ்ரேலின் மொசாட் உளவு நிறுவனம் வெடிபொருட்களை பொருத்திய நிலையில் கடந்த செவ்வாயன்று அவை வெடித்து 12 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் பாதுகாப்பு வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இந்த பேஜர்களின் தயாரிப்பு மற்றும் விநியோகத்தில் தாய்வான் தொடக்கம் புடபாஸ்ட் வரை தொடர்புபட்டுள்ளது. இவை முன்னெப்போதும் இல்லாத வகையில் ஹிஸ்புல்லா அமைப்பின் பாதுகாப்புக் கட்டமைப்பை முறியடித்துள்ளது. நாடெங்கும் ஆயிரக்கணக்காக பேஜர்கள் வெடித்த நிலையில் சுமார் 3,000 பேர் வரை காயமடைந்துள்ளனர். இதில் ஹிஸ்புல்லா போராளிகள் மற்றும் லெபனானுக்கான ஈரான் தூதுவ அதிகாரிகளும் உள்ளனர்.

இந்தப் பேஜர்கள் தாய்வானைத் தளமாகக் கொண்ட கோல்ட் அப்பலோ நிறுவனத்துடையது என்று லெபனான் பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டபோதும், அந்த சாதனத்தை தாம் தயாரிக்கவில்லை என்று குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது. ஹங்கேரி தலைநகரில் உள்ள பி.ஏ.சி. என்று அழைக்கப்படும் நிறுவனமே அதனை தயாரித்ததாகவும் அதற்கு வர்த்தக உரிமம் அந்த நிறுவனத்திடமே இருப்பதாகவும் கோல் அப்பலோ நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக பழிதீர்ப்பதாக ஈரான் ஆதரவு ஹிஸ்புல்ல அமைப்பு சூளுரைத்துள்ளது. எனினும் வெடிப்புகள் குறித்து அது விளக்கம் தர மறுத்துள்ளது.

காசா போரை ஒட்டி ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையே பதற்றம் அதிகரித்திருக்கும் சூழலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஓர் ஆண்டை நெருங்கும் காசா போர் பிராந்தியத்தில் போர் பதற்றத்தை அதிகரித்துள்ளது.

ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று வெளியிட்ட அறிக்கையில், 'காசா மற்றும் அங்குள்ள மக்களுக்கு ஆதரவாக எதிர்ப்புப் போராட்டம் மற்ற நாட்களைப் போன்று தொடரும் என்பதோடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற படுகொலைக்கு பதிலளிக்கும் வகையில் குற்றவாளியான எதிரி (இஸ்ரேல்) கடுமையான தண்டனைக்கு காத்திருக்க வேண்டி இருக்கும்' என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

கோல்ட் அப்பலோ நிறுவனத்திடம் இருந்து ஹிஸ்புல்லா அமைப்பு 5000 பேஜர்களை வாங்கி இருப்பதாகவும் அவை இந்த ஆண்டு ஆரம்பத்தில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் லெபனானின் மூத்த பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெடி பொருளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பேஜர்கள் ஐரோப்பிய நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது என்று கோல்ட் அப்பலோ நிறுவனர் ஹிசு சின் குவாங் குறிப்பிட்டுள்ளார்.

'தயாரிப்பு எங்களுடையதல்ல. அதில் எமது வர்த்தகக்குறி மாத்திரமே உள்ளது' என்று ஹிசு செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். இதில் பேஜரை தயாரித்ததாகக் கூறப்படும் பி.ஏ.சி. என்ற நிறுவனத்தின் முகவரி இடப்பட்ட கட்டடம் புடபாஸ் நகரில் குடியிருப்பாளர்கள் பகுதி ஒன்றில் அமைந்திருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. எனினும் அந்த நிறுவனம் குறித்த முகவரியில் பதிவு செய்யப்பட்டபோதும் அது அங்கு இயங்கவில்லை என்று அந்தக் கட்டடத்தில் இருக்கும் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல நிறுவனங்களும் அந்த முகவரியில் பதிவு செய்யப்பட்டிருப்பதோடு தொலைபேசி



அழைப்புகள் மற்றும் நேரடியாகச் சென்று விசாரணை நடத்தியபோதும் எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றும் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பேஜர்கள் மற்ற பேஜர்கள் போன்று கம்பியில்லா அடிப்படையில் குறுஞ்செய்திகளை வழங்குவதோடு தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்ள முடியாது என்று அவற்றை ஆராய்ந்துள்ள லெபனான் பாதுகாப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய ஊடுருவல்களை தவிர்ப்பதற்கே குறைந்த தொழில்நுட்பத்தில் இயங்கும் இந்த பேஜர் சாதனங்களை ஹிஸ்புல்லா போராளிகள் பயன்படுத்துவதாக அதனுடன் தொடர்புபட்ட வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

எனினும் இந்த சாதனங்களின் உற்பத்தியின்போது இஸ்ரேலிய உளவுப் பிரிவு தலையிட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. 'இந்த சாதனத்திற்குள் செய்தி ஒன்று கிடைத்ததும் வெடிக்கும் வகையில் வெடி பொருளை பொருத்தியுள்ளது. இதனை எந்த ஒரு கருவி அல்லது ஸ்கேனராலும் கண்டுபிடிப்பது கடினமாகும்' என்று லெபனான் பாதுகாப்பு தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

குறியீட்டுச் செய்தி அனுப்பப்பட்டதை அடுத்து 3,000க்கும் அதிகமான பேஜர்கள் சமகாலத்தில் வெடித்திருப்பதாக தெரிய வருகிறது. இதில் மூன்று கிராம் அளவு வெடிபொருட்கள் பேஜர்களில் பொருத்தப்பட்டிருப்பதாக மற்றொரு பாதுகாப்பு வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

பேஜர்களில் ஒலி வந்ததால் அதனை வைத்திருப்பவர்கள் சாதனங்களைத் தொடவோ முகத்திற்கு அருகே கொண்டு போகவோ நேரிட்டது. அப்போது வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை உள்ளூர் நேரப்படி சுமார் 15:45 மணியளவில் லெபனான் தலைநகர் பெய்ரூட் உட்பட நாட்டின் பல பகுதிகளில் பேஜர்கள் வெடிக்க ஆரம்பித்தன. பட்டாசுகள் போன்றும் துப்பாக்கிச்சூடு போன்றும் சிறிய வெடிப்புகள் நிகழ்வதற்கு முன்னர், சிலரின் பைகளில் இருந்து புகை வருவதைக் கண்டதாக பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

ஒரு சிசிடிவி காணொளியில் கடையில் நின்று கொண்டிருக்கும் ஒரு நபரின் காற்சட்டைப் பையில் இருந்த பேஜர் வெடித்தது. ஆரம்பத்தில் சிறியளவில் வெடித்த நிலையில் பின்னர் சுமார் ஒரு மணி நேரம் அது தொடர்ந்தது என்று ரோய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் அதிகமான மக்கள் லெபனான் முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் குவிந்தனர். மருத்துவமனைகளில் மக்கள் கூட்டம் நிரம்பி, குழப்பமான சூழல் நிலவியதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் உயிரிழந்த இருவர் ஹிஸ்புல்லா எம்.பிக்களின் மகன்கள் என்று அந்த அமைப்புக்கு நெருக்கமான வட்டாரம் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தது. ஹிஸ்புல்லா உறுப்பினர் ஒருவரின் மகள் கொல்லப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அதேபோன்று கொல்லப்பட்டவர்களின் இரு சிறுவர்களும் இருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காயமடைந்தவர்களில் லெபனானுக்கான ஈரான் தூதர் மொஜ்தபா அமானியும் அடங்குவார். அவருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டிருப்பதாக ஈரானிய ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன. ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா இந்தத் தாக்குதலில் காயமடையவில்லை என்று ரோய்ட்டர்ஸ் முகமை, ஒரு ஆதாரத்தை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

லெபனான் பொது சுகாதார அமைச்சர் பிராஸ் அபியாட் கூறுகையில், பெரும்பாலானவர்களுக்கு கைகள் மற்றும் முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளது என்றார்.

இந்த சம்பவத்தில் லெபனான் எங்கும் 3000 பேர் வரை காயமடைந்திருப்பதாகவும் அண்டை நாடான சிரியாவில் 14 பேர் காயத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும் செய்தி வெளியாகியுள்ளது. காயமடைந்தவர்களில் 10 வீதமானவர்கள் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாக லெபனான் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இஸ்ரேல் உடன் எந்த பதிவும் அளிக்கவில்லை. எனினும் இந்தத் தாக்குதல் பிராந்தியத்தில் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லா இன்று (19) உரையாற்றவுள்ளார்.

# காசா போர் நிறுத்தத்திற்கு பிளிங்கன் தீவிர முயற்சி: உயிரிழப்பு 41,272 ஆக அதிகரிப்பு

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டும் முயற்சியாக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் 10 ஆவது முறையாகவும் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் நிலையில் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதல்கள் தொடர்ந்து நீடித்து வருகின்றன.

எகிப்துத் தலைநகர் கெய்ரோவுக்கு பயணித்த பிளிங்கன் நேற்று எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன்போது காசா அமைதிப் பேச்சை தீவிரப்படுத்தப் போவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

சிசியுடன் 90 நிமிடங்கள் பேச்சுவார்த்தை நடத்திய பிளிங்கன், போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பிலான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காண்பதற்கு அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் தீவிர முயற்சியில் ஈடுபடும் என்றார்.

காசாவில் ஓர் ஆண்டை நெருக்கும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே தொடர்ந்து பிளவு நீடித்து வருகிறது. இந்நிலையில் காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருவதோடு தெற்கு ரபா நகரில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களின் பின்னர் 10 சடலங்களை மீட்டதாக மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர். அதேபோன்று மத்திய



காசாவில் அல் புரைஜ் முகாமில் உள்ள வீடுகள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களைத் தொடர்ந்து அங்கிருந்து மூன்று சடலங்களை மீட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 20 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் 54 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி காணாமல்போனோர் தவிர்த்து காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,272 ஆக அதிகரித்துள்ளது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் மேலும் 95,551 பேர் காயமடைந்துள்ளனர்.

# தாய்வானின் கடற்பரப்புக்குள் 835 சீனப் படகுகள் ஊடுருவல்



தாய்வானின் கடற்பிராந்தியத்திற்குள் இவ்வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் 835 சீனப் படகுகள் பிரவேசித்துள்ளதாகவும் அப்படகுகள் யாவும் உடனுக்குடன் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் தாய்வானின் கரையோர காவல் படையினர் தெரிவித்துள்ளனர்.

எமது கடற்பிராந்திய இறையாண்மையை மீறும் செயலுக்கு இடமளிக்க முடியாதெனக் குறிப்பிட்டுள்ள தாய்வான் பாதுகாப்பு அமைச்சர் வில்லிங்க்டன் வூ, எமக்கு சொந்தமான கின்மென் தீவு கடற்பரப்பில் புதிய ஒழுங்குகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இவை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை தாய்வான் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பரப்பில் இருந்து 19.5 கடல் மைல்கள் தூரத்தில் சீனக் கடற்பரப்பில் காணப்பட்ட தாய்வானின் மீன்பிடிக் கப்பல் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையில் அண்மையில் பதற்றம் ஏற்பட்டது.

கின்மென் தீவானது, சீனாவில் இருந்து மூன்று மைல் தொலைவிலும் தாய்வானில் இருந்து 124 மைல்கள் தூரத்திலும் காணப்படுகிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.